

தேவதேவன்
கவிதைகள்
தொகுதி 8

தேவதேவன் கவிதைகள்

தொகுதி 8

நீல நிலாவெளி (2005)

பறவைகள் காலூன்றி நிற்கும் பாறைகள் (2007)

**Copyrights**

தேவதேவன் கவிதைகள்

தொகுதி 8

தேவதேவன்

(முதல்) மின் பதிப்பு: செப்டம்பர் 2018

Devadevan Poems

Vol. 8

by Devadevan

This digital (First) edition published in September 2018

© Devadevan

**All rights reserved.**

This e-book is sold subject to the condition that it shall not, by way of trade or otherwise, be lent, resold, hired out, or otherwise circulated without the author(s)'s prior written consent in any form of binding or cover other than that in which it is published. No part of this publication may be reproduced, stored in or introduced into a retrieval system, or transmitted in any form or by any means, whether electronic, mechanical, photocopying, recording or otherwise, without the prior written permission of author(s) of this book. Any unauthorised distribution of this e-book may be considered a direct infringement of copyright and those responsible may be liable

in law accordingly.

All rights relating to this work rest with the copyright holder. Except for reviews and quotations, use or republication of any part of this work is prohibited under the copyright act, without the prior written permission of the author(s) of this book.

**உள்ளே...**


Copyrights

***நீல நிலாவெளி***

ஒன்று: வீடு

மரக்கிளையில்...

மீண்டும்...

துன்ப துயரங்களால்...

பிரக்ஞையின் கனலும்...

எல்லாத் துயரங்களையும்...

எங்கும் நீதியின்...

மேன்மையான ஓர் இதயம்...

உரத்து புலம்பிக்...

ஏதோ ஒரு சாயல்...

மனிதர்களின் வாகனங்களில்...

ஆவலோடுதான்...

மிருகக் காட்சி சாலை ஒன்றில்...

இரண்டு: நள்ளிரவு

எங்குமாய் விரிந்துவிட்ட முகம்...

புதிய பாதையில் முதலடி...

தன்னைத்தான்...

தன்னந்தனியாய்...

நீங்காத நள்ளிருளை...

போலீஸ் தேடுகிறதாமாம்...

துயர்மிகுதியால்...

தனது வாழ்வின் நீட்சியைத்...

கருவைக் கலைத்துவிட்டுக்...

சொன்னால்…
எவ்வளவு காலமாய்…
எங்கு…
விண்மீன் வான் முன்…
அவ்வை (0002-2004)
இறைவணக்கம்…
அம்மா…
உலகமே!…
மூன்று: நிலாவெளி
பேருந்துகள் வந்தும் நின்றும்…
வேண்டாம் காதல…
ராதே…
இந்தப் பயங்கரமான உலகத்திலிருந்து…
தோல்விகளாற் சற்றும் துவழாது…
குடும்பச் சுமையின்…
வீடெங்கும் சில நகர்த்தல்கள்…
திடீரென்று…
அவள் பெயர் சூர்யா…
மரக் கிளைகள்…
வியர்த்தமாகிக் கரைகின்றன…
வாழ்வின் பெரும் பகுதியும்…
இன்பமும் வேதனையுமாய்…
மரியே…
அவளுக்கு என்னாயிற்று…
விடுதலையானாற் போல்…
நீ அவனைப் பார்க்கவில்லையா…

இயேசுவும் சமாரியப் பெண்ணும்
கிறுக்குப் பிடித்துத் திரிந்து...
அபரிமிதமான...
ஆயிரம் கண்களுடைய அழகு...
கவிந்துகொண்டிருந்த...
இறுதியாண்டு மாணவி...
ஈரமண்ணின் இதயப் பசும்வெளி...
கடல் கொண்டுபோன நிலப்பரப்பு...
காதலென...
அவர்கள்...
வெளியே காட்டிக் கொள்வதேயில்லையெனினும்...
குழந்தைப் பருவத்தின் நிழலில்...
தளும்பும் கண்களுடன்...
பூமியெங்குமுள்ள கடற்கரையெங்கும்...
தான் ஈன்ற...
***பறவைகள் காலூன்றி நிற்கும் பாறைகள்***
1. ஒரு நதிக் கரையோரம்
2. நிலாவொளியில்
3. தெய்வீகம்
4. மெய்யாகவே
5. அழகுக் குறிப்பு
6. சாரணை மலர்கள்
7. நதி
8. பொய்ப் பகல்கள்

9. காவரியும் காணாமற்போன படித்துறைகளும்
10. வீடு
11. பறவை என்றால் பறக்கணுமா?
12. மழைத் தண்ணியின்றி...
13. ஏனோ? என்ன அவசரமோ?
14. புதிய பேருந்து நிலையம்
15. நிலக் காட்சி
16. கண்டதும் விண்டதும்
17. தேன்சிட்டு
18. இனிப்பது
19. என்ன ஒரு அழகு!
20. தீண்டுமின்பம்
21. ஆற்றங்கரையோரப் பாறைகளின்மேல்
22. கனவு பூமி
23. மரம்
24. கப்பன் பார்க், பெங்களூர்.
25. கப்பன் பார்க், பெங்களூர்.
26. மலர்கள்
27. இவ்வேளை
28. திருமுகமும், வீதிக்குள் அடிவைக்கும் கோலமும்
29. பச்சைக் கிளைகள் நடுவே கருத்த பறவைகள் இரண்டு
30. கவிகளாயிரம்
31. அதன் பின்

32. விண்ணோக்கிச் செல்வதும்
33. ஒரு மலர்
34. மலையுச்சியினின்றும் இறங்கி
35. அவரையும் அவர் கணவரையும்
36. பச்சை அலைவீசும்
37. வேசி
38. அந்த விளக்கொளியில்...
39. அந்த நபர்
40. மறைவு
41. கண்ணெதிரே
42. யார் அவன்?
43. நிலாவை...
44. யாராவது ஒரு பெண்ணுக்கு
45. "பரிவுகொள்கையில் பரம்பொருளாகிறோம்"
46. காதலின்ப முழுமை
47. ஒரு சிறு பொறிதான்
48. குவியலாய்
49. நான் இருக்கிறேன்
50. தீண்டலும் தீண்டாமையும்
51. புத்தர்
52. பருந்து
53. துயர் என்பது...
54. அவன் தனியானவனல்ல
55. கவனமான பொதியலுக்குள்
56. மரம் வெட்டப்பட்ட இடம்

57. குப்பைத் திரடருகே
58. பள்ளம்
59. அபயக் குரல்
60. இவ்வேளை
61. கொடுவனம்
62. சிந்தனைகளாற் களைத்து
63. யானை விழுங்கிய மலைப் பாம்பு
64. என்ன துயரமிது? என்ன தயக்கமிது?
65. பாதையற்ற நிலம்
66. பாடல்
67. ஏதோ ஒரு திட்டத்தில்
68. உயிரின் பேரின்பக் கொண்டாட்டமோ?
69. காவல் நிலையம்
70. சலனப் படக் கருவி முன்
71. கோடி கோடி ஆண்டுகளாய்
72. கவிதைவெளி
73. காலை நேரத்துப் பேருந்து நிறுத்தங்களில்...
74. பேருந்து நிறுத்தமொன்றில்...
75. கரும் புள்ளி
76. தர்ப்பூசணிக்காரன்
77. நாறும் கழிவுநீர்த் தேக்கங்கள்
78. பொருண்வயிற் பிரிந்தவன்
79. செல்வந்தக் குணசீலன்
80. திருட்டுமுழி திருவாளத்தான் கதை
81. சிறுவர் உலகம்

82. குறைப் பிறவியினரும் கோயில்களும்
83. தீராப் பெருந் துயர்களின்
84. இன்பச் சிரிப்புகளும் பொம்மைகளும்
85. பேரிளம் பெண்
86. தாய் வீடு
87. மண்ணும் மனிதர்களும்
88. அந்த முகம்
89. என் அணிற்பிள்ளைகள்
90. தெய்வங்கள்
91. காதலியைக் கைப்பிடித்துவிட்ட
92. காத்திருக்கும் இரவின்...
93. கையால் மலமள்ளும்...
94. தன் குறையுணர்ந்த மனிதன்
95. இராஜ்ய பாரம்
96. சாத்தானியப் பேரரசும் கடவுளும்
97. மந்திரவாதி
98. பக்திப் பழங்கள்
99. நீ இங்கே வருவாய் என்று...
100. ஆக்கங்கெட்ட கூகைகளும் கட்டப்பட்டுக் கொண்டேயிருக்கும் கோயில்களும்
101. பிழை
102. ஓய்வு பெற்ற திரைப்பட நடிகர்
103. கண்ணீரில் கரைந்துவிட்டன
104. கோட்டைகளும் கொலைக் கருவிகளும்

105. விலங்கினை விட மனிதன்
106. அதுவரையுமில்லாத பரிவு
107. ஒன்று

**நீல நிலாவெளி**

தேவதேவன்

(2005)

**ஒன்று: வீடு**

உக்கிரமான வெயிலில்
உயிர்கள் சுருண்டு முடங்கிக்கொண்டிருந்த
ஒரு நண்பகல் அமைதியில்
அதை நான் கண்டேன்.
அது முதல்
ஒளி எழுந்து ஒளி விழும்வரை
வானத்தைத் துழாவும்
பட்டம் விட்டுக் கொண்டிருக்கையிலும்
ஒவ்வொரு நாளும் தூக்கம் வரும் வரை
விண்மீன்களையோ அல்லது
கலைந்து கலைந்து உருமாறும்
மேகங்களையோ
அல்லது நிர்மலமான வானத்தின்
முடிவின்மையையோ
வெறித்துப்
பார்த்துக்கொண்டிருக்கையிலும்
காற்றில் நடமிடும் இலைகளைப் பார்த்தபடி
காத்திருக்கும் வேளைகளிலும்
அதை நான் தேடிக்
கொண்டிருந்திருக்கிறேன்
திருவிழாக் கொண்டாட்டங்களில்
பொருட்காட்சி வீதிகளின்
செழுமையான ஒளி விளக்குகளிடையே
மக்கள் கூடும் சந்தை நடுவே
கடலைகள் போற் கூடும் தலைகள் நடுவே

அதைக் காணாத தனிமையின்
துயர் சுமந்து அலைந்து
கொண்டிருந்திருக்கிறேன்
இன்பச் செலவுகளென
பக்திப் பயணங்களென
வெறிபிடித்து ஓடிக்கொண்டிருக்கும்
அகன்ற சாலைகளினின்றும் விலகி
நின்றவனாய்
செய்வதறியாது வேர்த்துக் களைத்து
ஓய்ந்து
ஒரு மூலையில் முடங்கிப் போய்க் கிடக்கும்
மனிதர்களைப் பார்த்துக் கொண்டே
நின்றிருந்திருக்கிறேன்
கையெட்டுந் தூரத்தில் கனிந்திருக்கும்
ஆற்றங்கரையில் வனப்பகுதியில்
அருவிக் கரையில்
மரத்தடியில் புல்வெளியில்
மலர்த்தோட்டங்களில்
மொட்டைமாடித் தீவில்
நூல்களின் படகில்
நட்பாடலில்
இன்று வீணே இளைப்பாறிக்
கொண்டிருக்கின்றேனா
இல்லை, அதன் கொடையைத்தான்
அனுபவித்துக் கொண்டிருக்கின்றேனா?
காற்று சுமந்துவரும் துயரங்களினின்றும்

# விடுதலையே இல்லையா?

*

**மரக்கிளையில்...**

மரக்கிளையில் துயிலும் மனிதனைப் போலின்றி
எல்லாப் பிடிகளையும் விட்டுவிட்டு
முழுமையாய் என்னை ஒப்படைத்தபடி
துயிலுக்குள் நுழைகிறேன்.
அதனை அங்கே சந்திப்பேன்
என்பதற்கான சூசகமான அகவெளியை
அப்போதே அடைந்தவனாகிறேன். ஆனால்
வேட்டையாடப்பட்ட இரையைத்
தன் இடம் இழுத்துச் செல்லும் மிருகம் போல்
தூக்கம் என்னைக் கொண்டுபோய்விடுகிறது.
விடியலில் நான் காணாத விடியல்
ஏமாற்றத்துடன் திரும்பிப் போகிறது
என் தூக்க போதையில் தெரிகிறது
இரவு தோறும் என் உறக்கத்தின் ஆழத்துள் புகுந்து
அது என்னைத் தேடுகிறது.
இரவில் நான் திடுக்கிட்டு
எழுந்து உட்கார்ந்தபோது
அது அங்கே இருந்ததைப் பார்க்கிறேன்

*

**மீண்டும்...**

மீண்டும் மீண்டும் சளைக்காமல்
அது உன்னை
அழைத்துக்கொண்டிருக்கிறது
உன் செல்பேசியை ஒலிக்கச் செய்தது
அது தான் என அறிந்தவுடன்
மவுனமாக அதை உன் விரல்கள்
அணைத்துவிடுகின்றன
சிலபோது தன்னை மறந்தவனாய்
நீ அகப்பட்டுக் கொள்கையில்
சூடான ஒரு கருத்தரங்கில் இருப்பதாகவும்
இன்னும் சற்றுநேரத்தில்
தானே அழைப்பதாகவும் சொல்கிறாய்
உன்னை நாடி அழைத்த குரல்
உன்னால் காப்பற்றப்பட்டிருக்கக் கூடிய
மனிதனின் அபயக் குரலாகவோ
எல்லா அநீதிகளையும்
தடுத்து நிறுத்தியிருக்கக் கூடிய
எச்சரிக்கைக் குரலாவோ
இருந்திருக்கலாம்
நீயாய் அழைக்கும்போது
அந்தக் குரல் உனக்குக் கிட்டாது;
எல்லாப் பயங்கரங்களும் உன்னைச் சுற்றி
நடந்து முடிந்திருக்கும் உலகத்திலே
விஷயமறியாத ஒரு மனிதனாய்
நீ உழன்று கொண்டிருக்கிறாய்

*

**துன்ப துயரங்களால்...**

துன்ப துயரங்களால் வீழ்த்தப்பட்டு
கண்ணீரால் நனைந்துகொண்டிருக்கும்
இக் காதலற்ற வெறுமையின் படுக்கையை
அதிர்ச்சி தரு அநீதங்களின் கண்களில்
பட்டுவிடாதபடி
கவனத்துடன் விரித்துத் தந்துள்ளதும்
ஒரு கருணையின் கைகள்தாமோ?
இவ்வறையின் ஒளியுமிழும்
சாளரங்களின், கதவின்,
பசுங்கிளைகளசைத்து வரும் காற்றின்
மானிடக் குரல்கள் சுமந்துவரும் வெளியின்
இயற்கையின்
கருணையிலொன்றும்
குறைவில்லை
தெருவாசலில் வந்து நின்றபடி
என் முகவரி விசாரித்து
தெரியாது எனும் பதில் சுமந்து
தவறாய்க் கடந்து சென்றுகொண்டிருக்கும்
அந்த அந்நியனை எழுந்தோடிப் போய்க்
கூப்பிட இயலாதபடி
என் குரல்வளையும் கைகால்களும்
முடமாகிக் கிடக்கின்றமைக்குத்தான்
என் செய்வது எனத் தெரியவில்லை
*

**பிரக்ஞையின் கனலும்...**

பிரக்ஞையின் கனலும்
பிரக்ஞையில் தென்பட்டுவிட்ட
அபாயகரமான
இவ்வுலக ஒழுங்கின்மையின் துயருமாய்
துயரம் நின்றுகொண்டிருந்தது
ஒழுங்கு தனதொழுங்கின் பாதையில்
நெஞ்சுகுளிர் பாடலாய்
ஓர் இன்பமென ஓடிக்கொண்டிருக்கிறது
ஒழுங்கின்மையும் தனதேயான பாதையில்
சுட்டெரிக்கும் ஓலமாய்
தாங்கொணாத துன்பமென
ஓடிக்கொண்டிருக்கிறது
நன்மையோ தீமையோ
ஒவ்வொன்றும் கொண்டிருக்கும்
அதனதன் ஒழுங்கினைக்
கண்டு கொண்ட ஒளி,
இருள் தீண்டமுடியாது
ஒளிர்ந்துகொண்டிருக்கிறது
அதன் இருத்தலும் பார்வையும் செயலும்
ஒன்றே என நிகழும் அற்புதத்தில்
ஒழுங்கின்மை பதைபதைத்து
ஒழுங்கமைவு தானே நிகழ;
ஒளியின் பாதையில்
ஓடி விரைந்து எழுந்து விரிந்து
இப் பிரஞ்சத்தையே தழுவி நிற்கிறது

மார்பிலறைந்து கொண்டு குமுறி அழுவதை நிறுத்திய
நெஞ்சை நெகிழவைக்கும் துயரின் பாடல்

*

**எல்லாத் துயரங்களையும்...**

எல்லாத் துயரங்களையும்
எத்தனைமுறை அனுபவித்தபிறகும்
ஏனின்னும் அதே பாதையில்தான்
போய்க்கொண்டேயிருக்கிறோம் நாம்?
எத்தனை அகோரமாக ஒலிக்கிறது
இந்த ரயிலோசை?
திடீரென எழுந்து நின்று
அபாயச் சங்கிலியை இழுத்து நிறுத்தி
இறங்கி நின்றவனைப்
பைத்தியம் என்று திட்டி முறைத்துவிட்டுத்
தொடர்ந்து தொடர்ந்தேகும் ரயிலின்
தாளமுடியாத இரைச்சல்
துளி தயையுமின்றி
எல்லா மனிதர்களையும்
இடித்துத் தள்ளிக்கொண்டே
எல்லா மனிதர்களையும் ஏற்றிக்கொண்டு
மகிமைப்படுத்தப்பட்ட
மனிதப் படுகொலைகள் நோக்கித்தானே
போய்க்கொண்டேயிருக்கிறது இந்த ரயில்?
என்று தொடங்கியதோ
தவறான திருப்பத்திலேறித்
தொடரும் இப் பயணம்?

*

WhatsApp • 9 messages from 8 chats • now
End Manual Scavenging Now (2 messages): +91 9...
திராவிடர் சிந்தனை பேரவை: +91 99942 27110
Jai: +91 98423 31489 இன்னும் ஐந்து வருடத்தில்...
VPM🌸🌸VVIP: R Siva Suntv நெல்லை முன்னாள்...
சிணுக் ஆரை: +91 83440 53307 பொய் வழ... +2

அமைதியற்ற போராட்டங்களினால்
ரணமாகியுள்ள காயங்களின் வேதனையே
விரிந்து பரவிக் கிடக்கிறது
அச்சத்தினால்
பிளவுபட்டுக் கிடக்கும் மனிதர்களின்
பிரிவுத் துயரே
சச்சரவுகளாய், போராய்...
மிகக் கொடுமையான வறுமை
மனிதரை மனிதர் இழிவுபடுத்தும் கேவலம்
பொறுப்பின்மை, பகட்டு, மேலாண்மை
இன்னபிற பேரவலங்களாய்
எங்கும் எப்போதும் வெடித்துக்கொண்டும்
வெடிக்கத் தயாராயும்
விரிந்து பரவிக் கிடக்கிறது
தன்னைத் தீண்டும்வரை
துயரங்களின் கதைச் சுவை பருகியே
மிதந்தபடி வாழ்ந்துகொண்டிருக்கும்
மனிதர்களாலே
துயரம் அழிவின்றி வளர்ந்தபடி கிடக்கிறது.
இவை எல்லாவற்றிற்கும் அப்பாலும்
ஓர் இடம் காலியாக

WhatsApp • 9 messages from 8 chats • now
End Manual Scavenging Now (2 messages): +91 9...
திராவிடர் சிந்தனை பேரவை: +91 99942 27110
Jai: +91 98423 31489 இன்னும் ஐந்து வருடத்தில்...
VPM🌸🌸VVIP: R Siva Suntv நெல்லை முன்னாள்...
சிணுக் ஆரை: +91 83440 53307 பொய் வழ... +2

அங்கு சென்று அமரமுடியுமென்று.
இது கையாலாகாது சோர்வுற்ற மனதின்
ஒரு நம்பிக்கைதானோ, அல்லவோ
என்ற சந்தேகச் சிந்தனைகளுக்கு
அப்பாலும்
கண் கூடாகவே
அது இருக்கிறது.
சாட்சியும் காட்சியும் தானேயாக
பிரம்மாண்டமான ஓர் இன்மைமேல்
பிரம்மாண்டமான ஓர் இன்மையாக
சிதையாத பேராற்றலாக
மெய்ம்மையாக
பிரக்ஞையற்ற மெய்ம்மையாக
*

**மேன்மையான ஓர் இதயம்...**

மேன்மையான ஓர் இதயம்
அதுதான் துயரத்திற்குக் காரணமா?
துயருறுவதும்
அதன் தகுதிக்கு ஏற்றதுதானா?
இல்லை, அதன் தகுதிதான் அத் துயரோ?
மிக எளிதில் துன்புற்றுவிடக்கூடிய
மிக எளிதில் களிப்புற்றுவிடக்கூடிய
மிக எளிதில் கொந்தளித்துவிடக்கூடிய
மிக எளிதில் அமைதியடைந்துவிடக்கூடிய
இந்த இதயத்தின் பொதுத்தன்மைதான் என்ன?
படிமமும் துயருமில்லாத ஓர் இதயத்தின்
சாத்யதை மற்றும் சாத்யமின்மையைத்தான்
படிமமும் துயருமில்லாத
இக் கவிதை பகிர்ந்து கொள்ள நினைக்கிறதா?
படிமத் துயர் துறந்த இதயங்கள்தாமோ
வானில் சிறகடித்துச் செல்லும் பறவைகள்?

*

**உரத்து புலம்பிக்...**

உரத்து புலம்பிக்
கதறும் காலமோ இதுவென
மரங்களசைக்கும்
காற்று.
இடை இடையே முகம் காட்டும்
மவுனத்தின் பிரக்ஞை வெளியில்
அழுது முரண்டும் மனிதக் குழந்தைக்குச்
சோறூட்ட
அல்லாடி எரியும் நிலா
அப்படி ஒரு இரவுக் காவலனா?
அவன் பார்வையில் திருந்தியவர்களாய்
திருடர்கள் தாம் கொள்ளையடித்த
செல்வத்தையெல்லாம் அவரவரர்களிடம்
திரும்பவந்து கையளித்துச் செல்கிறார்கள்
போர் வீரர்கள்
ஆயுதங்களைத் தூர எறிகிறார்கள்!
மனிதர்கள் எல்லோரும்
கவிஞர்களாகிறார்கள்!
கடலைகள்
புத்தம் புதுச் சந்தோஷத்தில்
குதிக்கின்றன!
மலை உயரங்கள் முறுவலிக்கின்றன
அவனது பாடல் ஒளியில்
அச்சமகன்ற அன்புவெளி விரிகிறது
விழித்திருந்து காண்பார் முகத்திலெல்லாம்

ஒரு பெரும் திகைப்பிற்குப் பின்
அரும்புகின்றன
புத்த புன்னகைகள்.
குழந்தையோ
நீங்காத் துயரால்
அழுது அடம் கொண்டு
பார்க்க மறுக்கிறது.
கொள்ளை போகின்றன செல்வங்கள்
எங்கும் போர்வெறித் தாண்டவங்கள்
ரணகளங்கள்
வன்புணர்ச்சிகளில் நொறுங்கும் பெண்ணிதயங்கள்
செல்வப் பிணமேடுகளும் வறுமைப் பள்ளத்தாக்குகளும்
சீரழியும் இயற்கை
கழிவின் அனல் தாங்காது.
குதித்துக் கூப்பாடிடும் கடலலைகள்
கரையெங்கும் புகைமூட்டும் தொழிற்சாலைகளும்
கருணையிலா மனித இயந்திரங்களும்
காணச் சகிக்கவில்லை
மலைகளின் கூனலையும்
வானத்தின் தலைகுனிவையும்.
மெய்ம்மையோ கழற்றி எறியப்பட்ட
வண்டிச் சக்கரம்போல்
மனிதர்களைக்

கொண்டு செல்லாது
சுழன்றுகொண்டிருக்கிறது.
கண்டு சுழற்றப்படாத நியதிச் சக்கரம்
கண்ணீரில்...
*

**ஏதோ ஒரு சாயல்...**

ஏதோ ஒரு சாயல் அவனை
ஏற்கனவே நன்கு அறியப்பட்டவனாய்க்
காட்டிற்று.
எங்கிருந்தோ வந்து
காதலால்
இப் பூமியோடு பூமியாய் ஒன்றியவன்;
பீதியறையப்பட்டவனாய்
ஓடிஒதுங்கிப் போய்
இப்படியொரு கண்ணாடிக் கூண்டுக்குள்
ஒண்டியபடி
தொலைபேசிக் கொண்டிருக்கிறதென்ன,
அனைத்துயிரையும் பாதிக்கும்
பேரளவான வீபரீதமொன்றைப் புரிந்து
கொண்டவன்
யாரிடமோ அதை அவசர அவசரமாய்ப்
பகிர்ந்துகொள்ளும் முகத்தான்?

*

**மனிதர்களின் வாகனங்களில்...**

மனிதர்களின் வாகனங்களில் அகப்பட்டுக்
கொண்டதேயன்றி, மற்றபடி
இப் பூமியிலேயே மிகத் தாழ்வான
ஓர் இடத்தில் போய் அமர்ந்து விடுவது
தானன்றி
பிறிதெதுவும் கருதாத விருப்பம் கொண்ட
சக்கரம்
முன்பிருந்ததைவிட ஓர் உயரம்
தன் வழியில் எதிர்ப்படும் எனில்
அதன் உச்சி மறுத்து
சிறிதும் தயக்கமின்றி
வேகமாய்ப் பின்நகர்ந்து விடுகிறது
தன் இயல்பைவிடப் பிறிதான
உயரமென்றொன்று
இல்லை என்பதுபோல்
இடைத் தடைகளால் ஏற்படும்
நலிவு பற்றியோ மரணம் பற்றியோ
அது கவலைப்படுவதில்லை
எங்கும் இருந்தபடி
காலத்தில் மட்டும் அமராதபடி
காணும் எந்த ஒரு கரமும்
தன்னை எடுத்துச் சுழலச் செய்துவிட
முடியும்
மரணமின்மையைக் கொண்டுள்ளது அது
மிக உயரமான இடத்திலிருந்து தொடங்கிய

வெகு தீர்க்கமான அப் பயணத்தின்
நோக்கத்தையும்
அதன் ஒவ்வொரு தீண்டலிலும்
உன்னதங்கள் பூக்கும் அற்புதங்களையும்
கண்ட மாத்திரத்தில் மெய்சிலிர்த்து
நின்றது பூமி
அதே வேளை
பன்னூற்றாண்டுகளாக
சுயநலத்தின் வன்முறைகளாலும்
கேவலமான அமைதியின்மைகளாலும்
சுரணையறுக்கும் பொய்ச் சமய
வழிபாடுகளாலும்
விழிகளிழந்த
குருடர்களாலும் முடவர்களாலும்
பன்னூற்றாண்டுகளாக
கண்டு சுழற்றப்படாத தர்ம சக்கரத்தால்
சுயநலத்தின் வன்முறைகளோடும்
கேவலமான அமைதியின்மைகளோடும்
சுரணை அறுக்கும் பொய்ச்சமய
வழிபாடுகளோடும்
துயரில் உழன்றுகொண்டிருக்கிறது பூமி
*

**ஆவலோடுதான்...**

ஆவலோடுதான் தபால்காரரை நெருங்குகிறான்.

தபால்கள் பெற்று வாசித்து முடிக்கும் போதெல்லாம்

தவறாமல் எரியும் ஓர் உணர்வு

ஏமாற்றம் என்பது இல்லை எனில்...

அன்றாடம்

காண்கிறதும் கேட்கிறதும் வாசிக்கிறதுமான

மேல் விபரங்கள் எல்லாம்

வெகுவிரைவில் மறைந்துவிடும் மாயமும்

அக்கறையிழந்துவரும்

சுரணை நலிவினால் என்றில்லையெனில்...

அணையாது வேகும் காத்திருப்பே இது எனில்

தவிர்க்கமுடியாமல் விளையப்போகும்

என்ன விபரீதத்திற்காக? அல்லது நற்சமிக்ஞைக்காக?

இவை ஒன்றுமேயில்லையெனில்

எதை உட்கொள்வதற்கான பசி இது?

எதைச் சமைப்பதற்கான தழல்?

*

**மிருகக் காட்சி சாலை ஒன்றில்...**

மிருகக் காட்சி சாலை ஒன்றில்
நேற்று முன்தினம் நடந்த சம்பவம்தான் அது:
பார்வையாளர்களுக்குள்ளிருந்த ஓர் இளைஞர்
கூண்டுப் பள்ளத்துக்குள் உறுமிக்கொண்டிருந்த
சிங்கத்திடம் குதித்து அகப்பட்டு போராடி
பலத்த சிராய்ப்புகளுடன் உயிர் தப்பினார்.
துப்பாக்கி வெடித்து ஓசை உண்டாக்கியும்
மயக்க ஊசிகளால் சுட்டுத் தாக்கியும்
காவலர்கள்
சிங்கத்தை விரட்டி அவனைக் காப்பாற்றினார்கள்
மனக் கோளாறுடைய அந்த இளைஞர்
இப்போதும் மனநல மருத்துவ மனையில்
சிகிச்சை பெற்று வருகிறார்
என்ன சேதியோ இது?
நோயோ மருத்துவமோ
நம்மையும் பீடித்து இங்கே
இக்கவிதையை எழுதிக் கொண்டும்
வாசித்துக்கொண்டும் இருப்பது?
விழித்துக்கொண்ட மனிதன் காண்பது
விழித்துக் கொண்ட மனிதனையே தானே?
அபயக் குரலோ

இரும்புச் சங்கிலி அழுந்த
கருங்கற் பிரகாரமெல்லாம் பீதி கொண்டதிர
கட்டுண்ட இடிமேகமாய்க் குமுறும்
யானைப் பிளிறல்!
அடி எடுத்துவைக்க முடியாதபடி
கால்கள் சிறகாகத் துடிக்க
நாக்கு குழறி பேச்சு மறுக்க
மலையுச்சியில் வந்தமர் விண்பருந்தின் வாய்க்
கோழிக் குஞ்சாய்
வந்தமர்ந்தானோ அவன்
எப்பொருளும் மர்மமற்றுப்
பேரொளியில் துலங்குமொரு
பெருங்களத்தில்?
அனுபவங்கள்
எண்ணங்கள்
நினைவுகள்
செயல்கள்
என்று தொடர்வதிலில்லை,
நிறுத்துவதில்தான்
என்பது போலவோ
அன்று ஒரு நாள்
அவன் பேச்சு அறும்படி
வந்து நின்றது அது?
*

**இரண்டு: நள்ளிரவு**

நம் கண்கள் சந்தித்து
காதலுற்ற வேளையில்
உன்னில் சுடர்ந்த பேரெழிலில்
ஒரு ரகசியமும் இல்லை
அதன் பின்னர்
நம் திருமணம் நிச்சயிக்கப்பட்டு
எதன்முன் சரணடையவோ
நீ உன் தாய் தந்தையர்களை விடுத்து
உடன்பிறப்புகளை விடுத்து
உருகும் கண்களுடன்
அனாதியாக
நின்றதுதான்
பின்னும் ஒளிர்ந்து நின்ற
உன் பேரெழிலின் இரகசியமோ?
இப்போது உன் பெற்றோர் உள்ளிட்ட
நம் சுற்றம் அனைவர் மீதும்
ஒளிரும் உன் புத்தம் புதுப்
பார்வையில்தான்
குன்றாத உன் அழகின்
காதல் போதையில்
இரகசியம் குடியிருப்பதை அறிகிறேன்
இரவெல்லாம் உன் அருகே நான்
விழித்துக்கொண்டு படுத்திருக்கையில்
உன் ஆழ்துயிலினின்றும்
விம்மும் ஒரு துயரோலம் கேட்டுச்

செய்வதறியாது திடுக்கிட்டேன்
நிலா ஒளிரும் நள்ளிரவின் பேரமைதியில்
அத்துயர்ப் பெண்ணின் இருப்பிடம்
நோக்கித்
தன்னந் தனியாய்
நடந்துகொண்டிருந்தேன்,
என் கனவில். மவுனமாய் எழுந்து நிழலென
நீயும் என் பின்னால் வந்து
கொண்டிருந்தாய்;
கவலையோடு திரும்பிப் பார்த்தவனை
நோக்கி
''இந்த நிலா எரிந்து கொண்டிருக்கும்வரை
பெரிதாகக் கவலைப்படுவதற்கு
ஒன்றுமில்லை" என்றாய்
விரிந்தொழுகிய கருங்கூந்தலை
அள்ளிக் கொண்டையிட்டபடி
*

**எங்குமாய் விரிந்துவிட்ட முகம்...**

எங்குமாய் விரிந்துவிட்ட முகம் நடுவே
இரு துவாரங்களுடைய
ஒற்றைச் சுவாச உறுப்பாய்த்
தன்னந்தனியாய் நின்றாள் அவள்
(உதித்தனவோ பற்றுமிகு வேகத்துடன்
அவளுக்காய் பிற உறுப்புகள்?)
யாரோ அவள்?
நேசமின்மையின் பிள்ளைகளாலான
தீவினைகளில் தன் குழந்தைகளைக்
கருகக் கொடுத்துவிட்ட தாயோ?
மதக் கலவரத்திற்கோ தீண்டாமையின்
வங்கொடுமைகளுக்கோ நாட்டுப் பற்று மிக்க
இராணுவ விலங்குகளின் வன்புணர்ச்சிக்கோ
தன் பெண்களைப் பலி கொடுத்துவிட்டு
தன்னைத்தான் நொந்துகொண்டு டே
உயிர்வாழ்ந்து கொண்டிருக்கும் அபலையோ?
வாழ்வு சூறையாடப்பட்ட விளிம்பு நிலையாளோ?
இருள் வெளிக் கூந்தலில் அழுந்திய
வேதனையின் தணல் நெளியும் முகம்;
இருளைத் தின்றொழிக்க முடியாது
தவிதவிக்கும் இரண்டு ஒளிப் புள்ளிகள்

மினுங்க
கலங்கியிருக்கும் விழிகள்;
தீவினைகளின் பீவிழிகள் கண்டு
கசந்த முறுவல் செய்யும் வதனத்தின்
வன்மைகள் மழிந்த சருமம்;
எல்லா உண்மைகளும் அடங்கிய
தன் வாழ்வின் இலட்சியமேயாகிவிட்ட
ஒற்றைச் செய்தியை- அதனடி அமர்ந்து
சொற்களால் உரைக்க முடியாது
தவிக்கும் உதடுகள்;
மரணமின்மையைத் தொட்டுவிட்ட பார்வை
*

**புதிய பாதையில் முதலடி...**

புதிய பாதையில் முதலடி வைத்தவள்
காலகாலங்களாய்த்
தன் பாதங்கள் நடந்து வந்த
பாதையைத் திரும்பிப் பார்க்கிறாள்.
எத்தனை தவறான பாதையில்
எத்தனை காலங்கள்! எத்தனை துயர்க் கதைகள்!
ஆழ்ந்த பெருமூச்சுப் புயல் ஒன்றில்
எல்லாம் அடித்துச் செல்லப்பட்டு விட்டனவா?
இழப்புகளின் துயரபாரமில்லை இது.
புதிய பாதை அவளிடம் கேட்டு நிற்கும்
இன்மை, முழுமை, தூய்மை, புனிதம் பற்றிய
பதற்றமுமில்லை
அச்சமுமில்லை
திரும்பிப் பழைய பாதைக்குத்
திரும்பிவிடாதிருக்கும் உறுதி மீதாடும்
இரகசியக் கொண்டாட்டம்!
ஆமாம் இரகசியக் கொண்டாட்டம்!
அவள் தன் அடிவயிற்றைத் தடவிப் பார்க்கிறாள்
அவள் இதழ்களிலும் விழிகளிலும்
மறைக்க முடியாத அதன் எதிரொலிகள் கேட்கின்றன

*

**தன்னைத்தான்...**

தன்னைத்தான் அவனிலும் கண்டு
அவள் காதலித்துவிட்டாளா?
என்ன மனிதன் அவன்? அவளோடு
தன்னை
இரண்டு குழந்தைகளையும் பெறவைத்து
வேடிக்கை பார்க்கும் இயற்கையினை
தாய் என்று சொல்வதெப்படி?
இருவருக்குமிடையே
தவிக்கின்றனவோ இக் குழந்தைகள்?
குடிகாரனும்
பொறுப்பில்லாத போக்கிரியுமான
இம்மனிதன்
எப்போதாவது கொண்டுவந்து கொடுக்கும்
சிறு பொருளைக் கண்டு
அப்பா அப்பா என்று உருகிவிடும்
இக்குழந்தைகளை
அவ்வாறு இயக்குவதுதான் எது?
அப்போது நீர் பொங்கும் கண்களுடன்
அவளை விம்மச் செய்வதும்தான் எது?
உழைப்பால் நலிந்து தேய்ந்து
பறிபோன அவள் அழகின்
மென்னுடல் வளப்பத்தை
அவள் கண்ணாடி முன்
கண்கலங்கி நின்று காண்கையில்
அவளுக்காகக் கண்ணீருகுக்க

ஒருவருமே இல்லாத உலகா இது?

*

**தன்னந்தனியாய்...**

தன்னந்தனியாய்
அந்த சிமெண்ட் பெஞ்சில்
சிலையோ என அமர்ந்திருக்கும்
அந்தப் பெண்ணுக்கு
கணவனுமில்லை
காதலனுமில்லை
தாய் தந்தை சகோதரர்கள்
மற்றேது உறவுகளுமில்லை
ஆதரித்து அரவணைக்கும் அரசுமில்லை
ஆனாலும் அவளுக்கோர் குழந்தை இருக்கிறது
(இப்பொழுதுதான் கவனிக்கிறீர்களா?
கடற்கரை மணலை அளைந்தபடி
என்ன ஆனந்தமாய் விளையாடிக்கொண்டிருக்கிறது அது!)
ஒண்ட ஒரு நல்ல வீடு கிடையாது
வயிற்றுப்பாட்டைக் கொண்டு செல்வதே பெரும்பாடு
உடுத்தும் ஆடையால் சற்றே தன்னை
மறைத்துக் கொள்கிறாள் எனினும்
முகம் அதனைக் காட்டிவிடுகிறது
அவளும் இன்று தன் குழந்தையோடு
இக் கடற்கரையில் காற்று வாங்க வந்தமர்ந்திருக்கிறாள்
எல்லோரையும் போல்.

கடலலைகளோடு
விளையாடிக்கொண்டிருந்த
ஆரோக்யமான குழந்தைகளின் குதூகலம்
கண்டு
அவள் பொறாமை கொள்ளவில்லை
குதூகலமும் கொள்ளவில்லை
அழகழகான ஆடைகள்
வேகமான கடற்காற்றில் துடிக்க
உச்சபட்ச மகிழ்வில் உலவும் காதலர்கள்,
தம்பதியர்களை
ஏக்கமின்றியே பார்த்துக்
கொண்டிருந்தாள்.
மகிழ்ச்சிமிக்க குடும்பங்களையும்
அவள் பார்த்தாள்
ஆண்டு அனுபவித்துத் தளர்ந்த
முதியவர்களையும்
எல்லையற்ற வானத்தின் கீழ் அந்தக்
கடலோடு
யாவற்றையும் யாவரையும்
தன்னுள் கொண்டவளாய் அவள்
அவள் கண்டுபிடித்துவிட்டாளோ
எல்லாவற்றையும்?
இவ்வுலகின் இன்பதுன்ப நாடகத்தை
இன்மையை உயிரின் ஆனந்தத்தை
எல்லாவற்றையும் வேரறுக்கும் துயரத்தை
அத் துயரறுக்கும் மார்க்கத்தை

தன்னை மரணமற்றவள் என்றும்
தன் உடல்தான் மரிக்கக் கூடியது என்றும்
அதுவரை அதனைக் காத்தல் தன் கடமை என்றும்
அவள் உணர்ந்தாளோ, எண்ணமிட்டாளோ!
பொங்குமாங் கடலியற்கையின்
ஆனந்த வெள்ளத்துள் அல்லது கொந்தளிப்பில் குதித்து
அவளால் மறைந்து விட முடியுமெனினும்
விளையாட்டிலிருந்து விழித்த குழந்தை
தன் தாயைக் காணாது கதறியழுமே
அதைக் காக்கும் கடமையிருக்கிறது அவளுக்கு
சுரக்கும் தாய்மை இருக்கிறது அவளுக்கு
தன் உடல் அழிந்தபிறகு கூட
*

**நீங்காத நள்ளிருளை...**

நீங்காத நள்ளிருளை மீறி
ஒளி கசியும் காலை வேளை;
அவனைக் காலை நடைக்கு என இழுத்து
காண்பதையெல்லாம் முகர்ந்தபடி
சென்று கொண்டிருப்பதெங்கே
இந்த நாய்க் குட்டிச் செல்லம்?
எம் மண்டலத்தின் பாதாளப் பகுதி
இதுவோ?
கடைக்கோடிப் பஞ்சை ஒருத்தி
ஆளரவமேயற்ற வீதியின்
குப்பைகளைக் கிளறியும் பொறுக்கியும்
தீராது தேடிக்கொண்டிருப்பதென்ன?
கண்ணீரும் புன்னகையுமாய்க்
காணும் அந்த முகம்?
அணங்கு கொலோ?
ஆருயிர் கொலோ?
அவள் தேடும் பொருளினைத்
தன்னுள் கொண்டுளதே போலே
மாய்கிறதே என் நெஞ்சு!

*

**போலீஸ் தேடுகிறதாமாம்...**

போலீஸ் தேடுகிறதாமாம்,
யாரோ அவர்கள்?
நெடிதுயர்ந்த மருத மரங்களினுச்சியில்
ஓசைப்படாமல் அடியெடுத்து வைத்துப்
பூமியிலிறங்க
ஆசைப்பட்டுவரும்
முழுநிலவின்
ஆற்றங்கரைப் படித்துறைதான் எத்தன அழகு!
இன்னுமா இயற்கையைப் பற்றிக் கவிதை?
பத்தாம் பசலி பதினெட்டாம் நூற்றாண்டு! என
கூச்சலிட்டு முகஞ்சுளித்தவர்தாமா...?
ஒரு குளிபோட்டு வரலாம் என இறங்கி
கரையேறும் மனமேயின்றி
தண்ணீருக்குள்ளேயே கிடக்கும்
விடிகாலை ஐந்து மணி நிலா!
இது பொழுது இதுபொழுது எனும் கவியின்
குரல் கேளாமல் தத்தமது
பாழ்நிலத்தை எழுதுவது மாத்திரமே
நவீனயெழுத் தென்றவர்தாமா...?
இந்த இருபத்தோறாம் நூற்றாண்டின்
விடியலில் நின்றபடி
துயில் களைந்தவர்க்காய்க்
காத்திருக்கும் இயற்கையின்

பேரமைதி, இன்தீண்டல், பெண்ணியற்கை,
மென்காற்றில் உலவும் இரகசியங்கள்
என்றவனைப் பார்த்து
நாங்கள் வழிபடுவதற்கும்
உருப்பபடுவதற்கும்
கோயில்களை நன்றாகவேகட்டித்
தந்துள்ளனர்
மெய்ஞ்ஞானிகளாம் எம் முன்னோர்;
நீ ஒன்றும் பிதற்ற வேண்டாம்
என்றவர்தாமா..?
அந்த அகால வேளையின்
நீரிலிறங்கி
ஆடை துவைத்து
குளி முடித்து
நீர்மொண்டு செல்லவந்த ஒற்றைப்
பெண்ணை
தெய்வப் பெண்ணோ, காதல் தெய்வமோ
என்றவனை நோக்கி
ஏளனமாய்ச் சிரித்தவர்தாமா....?
வன்புணர்ச்சியால் அவளைச் சிதைத்துச்
சென்றனர்?
*

**துயர்மிகுதியால்...**

துயர்மிகுதியால்
விழிப்பு தகித்துக்கொண்டிருக்கும் இந்த இரவில்
நான் உன்னை நினைத்துக்கொள்வது
ஓ, கிறிஸ்துவே, எனது அன்பனே!
என்னையும் சிறிதளவு
தனிமைத் துயர் தீண்டுவதாலா?
நண்பனே, உன்னைப் பற்றிய ஓர் அரிய உண்மையை
மிகத் தெளிவாக நான் அறிவேன்:
தனிமை நோய் உனது துயருக்குக் காரணமாய்
ஒருநாளும் இருந்ததில்லை.
வாழ்வைத் தீவிரமாய் விசாரிக்கவல்ல
மனிதர்களைத் தேடித் தேடி நீ ஓடியதும்
மக்களைக் கூட்டிக் கூட்டி நீ பேசியதும்
உன்னைப் பற்றி நீயே சிறு பிள்ளைத்தனமாக
பேசிய பேச்சுக்களையும் நீயே கடந்து
இறுதியில்
ஆறாத பெருந்துயராக நிலைத்ததும்
எதனால் என்பதை நன்கு அறிவேன்.
துயரத்தின் சுமை மேலும் அதிகரிக்கும்படியாகியே
இன்று தோற்று நிற்கிறாயே என்

இனியவனே,

மீப்பெரும் துயரொன்றே

கருணையாகப் பொழியக்

கூடியதென்பதையும்

பெருவாளாய்ப் போராடக்

கூடியதென்பதையும்

உன் முன் முழந்தாளிட்டு உருகுபவர்களிடம்

உணர்த்த இயலாது!

*

**தனது வாழ்வின் நீட்சியைத்...**

தனது வாழ்வின் நீட்சியைத்
தீர்மானிக்கப் போகிற பதிலுக்காய்
அவள் காத்திருந்தபோது
வெளி அரவங்களின் கம்மலான ஒளியில்
மரணத்தின் முணுமுணுப்பு.
சகல நம்பிக்கைகளினதுமான
முடிவின்மேல் நின்றவளாய்
அவள் வெளியே பார்க்கிறாள்,
சாவி கொடுக்கப்பட்ட
அழகழகான பொம்மைகள்போல்
மனிதர்கள்.
திண்தோள் வலியினையும் மனித
மேதமையையும்
இகழும் முறுவலுடன் பல்லக்கிலிருக்கும்
உற்சவ மூர்த்தி
பஜனை, ஜால்ரா
சங்கீதத்துடன் செல்லும் பக்தி ஊர்வலம்.
எங்கும் எல்லாவற்றின் மீதும்
மிகத் தெளிவாகத்
துலங்கிக்கொண்டிருக்கிறது
பிரக்ஞையற்ற அந்நாளின் சவ ஒளி
திடீரென உணரப்பட்ட ஓர் ஒளிமாறுதல்
போல்
அபூர்வமானதும் வெகு இயல்பானதுமான
சொலற்கரியதான ஒன்று தெரிகிறது

அங்கே.

அவள் அதைப் பார்க்கிறாள்.
வாழ்வா மரணமா என்று
பிரித்தறிய முடியாத அது
மெல்லிய பனிப்படலம் போல்
சூழ்ந்து நிற்கிறது எங்கும்.
அவள் பின் திரும்பி
தோலைபேசியிடம் சென்று
தீர்க்கமான முடிவுடன் ஓர் எண்ணை
ஒலிக்கிறாள்
அப்போதவள் வயிற்றிலுள்ள கருவில்
ஒரு நிறைவமைதியின் இன்பச் சலனம்
அது, தான் பிறக்கப்போகிறோமா,
இறக்கப் போகிறோமா
என்பதையே அறியாத தெனினும்

*

**கருவைக் கலைத்துவிட்டுக்...**

கருவைக் கலைத்துவிட்டுக்
காதலனையும் தொலைத்துவிட்டு நிற்பவள்முன்
சூல் கொண்ட வயிற்றின் பூ நடைப் பொலிவுடன்
காதலன் தோள் உரச நடந்து செல்பவளைப் போலும்,
பெற்ற ஏழு பிள்ளைகளையும்
துயரங்களின் கோரப்பிடிக்குக் கொடுத்துவிட்டு
அமைதியின்றியிருக்கும் தாயைப் போலுமிருந்தது
அந்த மாலை.
ஒழியாத துயர நினைவுகளை ஓட்டவும்
விரட்டி விரட்டித் துரத்தவும்தான்
எத்தனை சாதனங்கள்?
மேக மூட்டங்கள் தவழும் சிகரங்களும்
வற்றாத நீர்நிலைகள் கொண்ட
சோலைப் பள்ளத்தாக்குகளும்
எப்போதும் பாய்ந்துகொண்டிருக்கும்
தூய வெள்ளருவிகளுமாய்
ஒளிரும் இம்மலைப் பிரதேசத்தின் பேரழகாலும்
அவளை விழுங்க இயலவில்லை.
எது ஒன்றாலும் ஆற்றமுடியாத

துயர்முன்னே

கற்சிலைபோல அவள் நின்றாள்.

பெருவிரல்களின் நக நுனியின் கீழ்

ஆழங் காணமுடியாத பள்ளத்தாக்கு!

திரும்பி வந்துகொண்டிருந்த அவள்
முகத்திலும்

உடலின் ஒவ்வொரு அணுக்களிலும்

காண்பார்தம் எண்ண ஓட்டங்களையும்

அறுத்தெறியும் வாளின் பளபளப்பு.

மழையிரவின் கானகத்து இருளிடையே

வழியையும் அது சென்று சேரும்
இடத்தையும்

சுட்டி மறைந்து விட்ட

மின்னலொன்றைத்தான்

கண்டுவிட்டாளோ என்ற புத்துயிர்ப்பு

*

**சொன்னால்...**

“சொன்னால் உனக்குப்
புரியமாட்டேன் என்கிறது
புதிய பாதை என்பது
கழித்துக் கட்டிவிட்ட
பழைய பாதை பற்றிய நினைப்பும்
புதிய பாதை பற்றிய எண்ணங்களும் அல்ல.
அது புதியது என்றே தோன்றுவதில்லை.
அது எண்ணங்களின் கறை படியாதது''
அனாதியான காரணமற்ற
பிரியம் ஊறும் பெருநிறைவின்
மகிழ்ச்சி ததும்ப அவள் பேசிக்கொண்டிருந்தாள்
சுவர்களெல்லாம் தங்கமுலாம் பூசப்பட்டு
மின்னிக்கொண்டிருந்தது போன்ற ஒளி,
பெருஞ்சக்தி ஒன்றினால்
ஆயிரக்கணக்கான ஆண்டுகளாய்ப்
படிந்தும் தொடர்ந்து உறைந்தும் இருந்து கொண்டிருந்த
ஒலி அழுக்குகளையெல்லாம்
உறிஞ்சி அப்புறப்படுத்திவிட்டது போன்ற
பேரிருப்பொன்றின் வெகு தூயதான அமைதி
சுவரில் மாட்டப் பெற்றிருந்த ஓவியத்தின்
அடர்வன விருட்சத்து மலர் நிழலில்

கால் மடித்து அமர்ந்திருக்கும் ஒரு மான் குட்டி;
கிளைகளில் பூத்த பறவைகள்;
தலைதூக்கியபடி நிற்கும் ஊர்வன
ஓடாமல் வீழாமல்
விரிக்கப்பட்டதும் தொங்கவிடப்பட்டதுமான நீர்நிலைகள்;
சயன மெத்தைகள் தலையணைகள் திண்டுகள் போலும்
குளிர்ந்த பாறைகள்
அவ்வறைக்குள் நிறைந்திருந்த
முடிவற்ற விண்வெளியின் கீழ்
இரு மெல்லிய புல்லிதழ்களின் அசைவினைப் போல்
அவள் உதடுகள் அசைந்து கொண்டிருந்தன.
ஆனால் இக் கானகத்தின் இண்டு இடுக்குகளையும்
கூர்மையாய் அலசியபடி
அவளை வேட்டையாடத் திரிந்துகொண்டிருக்கும்
வேடனையும் அவள் அறிந்திருந்தாள்
*

**எவ்வளவு காலமாய்...**

எவ்வளவு காலமாய்
அவள் அவனிடம்
இப்படியே வாழ்ந்து கொண்டிருப்பது,
தப்பிக்கும் வழி
துழாவிக்கொண்டேயிருக்கும்
அவள் விழிகளைத்தான்
அவன் கண்டுவிட்டானோ?
திடீர் திடீரென அவளைச் சுற்றி
ஒவ்வொன்றாய்
எத்தனை எத்தனை தடுப்பரண்கள்
சூழ்ந்துவிட்டன?
எல்லாவற்றையும்
அவள் தாண்டி வந்து நிற்கையில்
காட்டுவெளியின் மலையடுக்குகளிடையே
காற்றுமட்டுமே சீறிக்கொண்டிருந்த
இடிபாடடைந்த கட்டடங்கள் நடுவே
அவனது பிடியின் துப்பாக்கி முனையில்
திகிலுண்டு நிற்கும் அவளது குழந்தைகள்!
எவ்வளவு காலமாய்
அவள் அவனிடம்
இப்படியே வாழ்ந்து கொண்டிருப்பது?
*

**எங்கு...**

எங்கு, என்று;
முதலாவதாகவா, கடைசியாகவா
நான் பார்க்கிறேன், பார்த்தேன்
என்றெதுவும் சொல்ல முடியாதெனினும்
உயிரணுக்கள் ஒவ்வொன்றையும்
உசுப்பி அதிரவைத்த
அத்தனை கொடிய விலங்கினை
மறக்க இயலுமோ?
(உளறுகிறேனா?
மறக்க இயலாத புண் ஞாபகமில்லை அது;
அப்போது அப்போதுதான் காண்கிறோம்
என அலறுகின்றன குருதியணுக்கள்)
கட்டடக் குவியற் செங்கற்களிடையே
அது பதுங்கியிருந்ததை நான் கண்டேன்
காட்டில் மரம் வெட்டிக்
கொண்டிருக்கையில்
சருகுகளுக்கிடையே அது நழுவிச்
சென்றதை
நான் கண்டேன்
விளையாட்டரங்குகளின்
மக்கள் ஆரவாரங்களிடையே
அது மறைந்து ஆடிக்கொண்டிருந்ததை
நான் கண்டேன்
உயர்த்திப் பிடிக்கப்பட்ட ஒரு மனிதனை
அவன் இனமக்கள் பாசத்துடன்

அணைத்துக்கொண்ட கூட்டத்தூடே
அது தன் முகம் மறைத்து நின்றதை
நான் கண்டேன்
இன்னும் எத்தனை எத்தனையோ
சின்னமகிழ்ச்சிகளில் கலந்து
சிரிக்க முடியாதவனாயும்
கண்டவுடன் சொல்லமுடியாத
அதிர்ச்சிகளால்
ஊமையானவனாயும்
கால காலமாய் நான் நின்றேன்
இன்று வந்து
கைகுலுக்கி நிற்கும்
உன் புறுமுறுவல் பேச்சுக்களிலும்
அது நெளிந்தபடி தலைதூக்கி
நிற்பதைத்தான்
நான் காண வேண்டுமா?
நெஞ்சு தாளவில்லையே, நண்பனே!
*

**விண்மீன் வான் முன்...**

விண்மீன் வான் முன் வெறித்த
துயர் தோய்ந்த எண்ணங்களோ?
துயரார்ந்த எண்ணங்களாற்
செயலூக்கம் முறிந்துபோன ஊனமோ?
பஞ்சைப் பரதேசியோ? பாவமோ?
நாணயங்கள் மின்னும்
நடைபாதை விரிப்பின் முன் அமர்ந்து
உள்விழிகள்கனலக்
குழலூதும் யாசகனோ?
பணி ஓய்வு பெற்ற பின்னே
தன் முழுநேரப் பணி தொடங்கிய கவிஞனோ?
அவன்முன் என் உடல்வளைத்து குனிந்து,
மனிதர்கள் ஏதாவது ஒரு தொழில் செய்வது
தவறா என்று நான் கேட்டதற்கு
கொள்ளையடிப்பதும் ஒரு தொழில் தானே என்றான்
வயிற்றுப் பாட்டிற்கு
ஏதாவது செய்துதானே ஆகவேண்டும் என்றதற்கு
அப்படியா, அதற்குத்தான்
மனிதர்கள் உழைத்துக் கொண்டிருக்கிறார்களா என்றான்
என்னிடமிருந்து தப்பிப்பதற்காகவோ

குழலெடுத்து அவன் இசைக்கத் தொடங்கிவிட்டான்?

அவனிடமிருந்து தப்பிப்பதற்காகவோ

அங்கிருந்தும் நான் நடையைக் கட்டினேன்?

*

**அவ்வை (0002-2004)**

போரை வெறுத்தவள் நீ
ஏழை மனிதர்க்கு இரங்கியவள்
பட்ட மரம் தழைக்கப் பாடியவள்
எளிமையைப் புரிந்து கொண்டவள்
காதலையும் காமத்தையும்
கொண்டாடியவள்
நாடோடியும் துறவியுமானவள்
மன்னர்களாலும் மக்களாலும்
ஒருபோல விரும்பப்பட்ட பேரழகி.
எல்லா அரசர்களையும்
ஓர் ஏழைப் பெண்ணின் மணப்பந்தலுக்கு
இழுத்துவந்து அமர்த்த முடிந்த மகாராணி!
"அப்படியெல்லாம் இருந்தவள்
பின் எப்படி
அந்த அழகு கெட்டு இளமை கெட்டு
கையில் பிரம்புடனும்
கடுகடுத்த முகத்துடனுமான
ஒரு வைதீகப் பள்ளி ஆசிரியையானாய்?
நின்று தளரா வளர்தெங்கு
ஆற்றங்கரை மரம்
ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும்
வாடி நிற்கும் கொக்கு
நெல்லுக்கு இறைத்த நீர்
வாய்க்கால் வழி ஓடிப்
புல்லுக்கும் ஆங்கே பொசிகின்ற

வயல்வெளி

கான மயிலாட... கவையாகிக் கொம்பாகிக்
காட்டகத்தே நிற்கும் மரங்கள்
அற்ற குளத்தின் அறுநீர்ப் பறவையும்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும்...
ஆற்றுப் பெருக்கற்று அடிசுடும்

அந்நாளில்...

என்றெலாம்
என் சின்னஞ் சிறு வயதில்
இயற்கைப் பேரழிலை
என் நெஞ்சில் விரித்த ஆசிரியை நீ!
ஆனால் அம்மா
இன்று நான் யோசிக்கிறேன்
நாம் கண்ட இயற்கை எல்லாமே
நம்மை நம் மனக் கசப்பை
வழியறியாத உலகியற் துயரங்களை
பொல்லாக் கண்டுபிடிப்புகளை
(பாட வேண்டாமென்று
யாரும் சொல்லவில்லை எனினும்).
வெளிப்படுத்துவதற்கான
உவமைப் பொருளானது தவிர
வேறில்லாததை!
வெளிப்படுத்த இயலா
இரகசியங்கள்தாம் எனினும்
அவற்றையன்றோ
நாம் வெளிப்படுத்தியாக வேண்டும்.

அதற்கான தடயங்களை
மட்டுமின்றி
உன்னிடம் தேடவல்லவோ
வேண்டியிருக்கிறது.
எதிர்த் தடயங்களன்றோ
காணப்படுகின்றன!
பெருங்களத்தால் தொடப்பட்டுக்
கவியானவள்தான் நீ எனினும்
முழுமையாய் நீ அறியாததென்ன?
உன்னைத் தொட்ட பெருங்களத்தை
வேறுபாடு மற்றும்
வெறுப்பினடி புழுத்த அனுஷ்டானங்கள்
தாமோ
உன்னிடமுள்ள கனலைக்
கொஞ்சம் கொஞ்சமாய் அழித்து விட்டன?
நீ தந்த அரைகுறை ஒளியில்
மெய்ம்மை துலங்கவில்லையே தோழி!
மனிதரோடு மனிதர் உறவு
கசப்பும் கடூரமுமாயிருப்பது
இயற்கையோடு மனிதர் உறவு
இசைவுடனில்லாததாலென
நீ உணர்ந்ததேயில்லையா?
உனது சங்கப் பாடல்களில் மிளிர்ந்த
இயற்கை
பின்னாளில் மாயமாய்
மறைந்து போனதெப்படி?

ஏறத்தாழ இருபது நூற்றாண்டுகளாய்
ஒருநாளும் உன்னை அறியாதவராய்
அஞ்சியவராய்
எமது கையாலாகாத்தனத்தின் உச்சமாய்
உன்னைத் தெய்வமாக்கி
எங்கள் சிறுமதிக்கேற்பவே உன்னைப்
படைத்துக் கொண்டவர்கள்தாமோ
நாங்கள்!
நீதான் சொல்லேன்
நாங்கள் வீர்யமற்று
விவஸ்தையற்று
கண்மூடி
வீழ்ந்து கும்பிடத் தகும் கோயில் சிலை
ஒரு கல்லறைச் சடலமன்றி வேறென்ன?
*

**இறைவணக்கம்...**

இறைவணக்கம் முடிந்து
வரவேற்புரை முடிந்து
தலைவர் உரையும் முடிந்து
நிகழ்ச்சிகள்
நடந்துகொண்டிருக்கையில்தான்
நீர் வந்து சேர்கிறதென்ன?
அப்படி என்னத்தைக் கண்டுவிட்டீரய்யா?
அய்யோ,
கவனிப்பாரின்றி உமது கால்களும்
துவளுவதுதான் என்ன?
மானுட ரூபத்தில் வந்தால் மட்டும்
போதுமா?
நாடு இனம் சாதி சனம் என்றேதுமறியா
அன்பை மட்டுமேயறிந்த ஓர் அனாதைப்
பாவியாக வந்து நிற்கும் உமக்கு
இந்த பூமியில் தலைசாய்க்க ஒரு
இடமில்லாததிலென்ன வியப்பு?

*

**அம்மா...**

அம்மா,

அப்பாவின் முதல் மனைவி

இரண்டு குழந்தைகளையும் பெற்றபின்

ஏனம்மா பைத்தியமாகி தற்கொலையில்

இறந்தும் போனார்?

அந்த இரு பெண் குழந்தைகளையும்

வளர்ப்பதற்காகவன்றோ

அப்பா உங்களைத்

திருமணம் செய்திருப்பார்?

தாயற்ற அந்த அனாதைச் சிறுமிகளை

நீங்கள் நேசித்ததுண்டா அம்மா?

ஏற்கனவே இரண்டு குழந்தைகள் இருக்க

நீங்களும் உங்கள் கணக்கிற்கு

ஒன்றல்ல இரண்டல்ல

ஏழு குழந்தைகளைப் பெற்றதேன் அம்மா?

ஏழிலும் நான்கு பெண்கள் என்னையும் சேர்த்து.

ஆண்பிள்ளைகள்தாம் பிடிக்கும் என்று

உங்கள் ஆண்பிள்ளைகளுக்கு

ஆண்பிள்ளைகளே பிறந்திருப்பதாலும்

தொடர்ந்து வெளிப்படையாகவே சொல்லும் உங்களுக்கு

மொத்தம் இரண்டு கூட்டல் நான்கு ஆக

ஆறு பெண்கள்.

வழங்கப்படாதவர்கள் என்பதையும்

கல்வி மூலம் பொருளாதாரத் தன்னிறைவு அடையும் வாய்ப்பு
சேர்த்துக் கொள்ள வேண்டும், இல்லையா?
முதல் இருவரைப் பற்றி
முதலில் எனக்குத் தெரியாமல்தான் இருந்தது,
எனக்கு விபரம் தெரியும் வயதில்
அவர்கள் திருமணமாகிச் சென்றுவிட்டதால்
அப்புறம் நம் வீட்டின் குடும்பவிழாக்களின் போதெல்லாம்
நாம் அவர்களைச் சந்திக்கவில்லையா, என்ன?
அவர்கள் எவ்வளவுதான் தங்கள் அகத்தை
வெளிக்காட்டிக் கொள்ள விரும்பாதவர்களாயிருந்தாலும்
அந்தப் பொய்ம்மையும் வஞ்சிக்கப்பட்ட துயரமும் வன்மமும்
முகிழ்க்கும் அன்பின் நிராதரவுத் தன்மையும்
அங்கே வறண்ட இதயத்தோடு உலவுவதை
நாம் பார்த்துவிடத்தானே செய்கிறோம்?
மற்றுமுள எங்கள் நால்வரைப் பற்றி
எனது தம்பி அதாவது உங்கள் மூன்றாவது ஆண்பிள்ளை
அடித்த சொல்வீச்சு ஒன்று தெரியுமா?

எங்கள் நால்வரையும் ஒன்றாய்
எங்காவது ஒரு மலைப்பிரதேசத்திற்கு
இன்பப் பயணம் அனுப்பிவைத்தால்
ஒருவர் மட்டுமே மிச்சமாய்த்
திரும்பிவருவோமாம்!
அதிலிருந்து நான்கு ஆண்டுகளுக்குமுன்
எனக்குக் கல்யாணமான புதிதில்
எங்களுக்குள் மட்டுமே நடந்த
உரையாடலின்போது
இதையேதான் இதே படிமத்தில்
என் கணவரும் சொன்னது நினைவுவந்து
விக்கித்து நின்றேன். அப்படியென்றால்
மறுபடியும் மறுபடியும் உறுதியாகின்ற
உண்மைதானா அம்மா அது?
உங்கள் அருமையான மூன்று
பையன்களும்
மருமகள்களும் பணம் பிடுங்கும்
கழிசடைகளைப் பார்ப்பதுபோல்
எச்சரிக்கையோடு எங்களைப்
பார்க்கிறார்கள்
அது சரிதானே என்றும் உங்களுக்குத்
தோன்றுகிறதல்லவா?
"உனக்குப் பிழைக்கத் தெரியவில்லை'
என்று
அடிக்கடி நீங்கள் என்னிடம்
சொல்லும்போதெல்லாம்

(அவளைப் பார் இவளைப் பார் என்று
இதில் ஒப்பீடு வேறு)
பேருந்து அல்லது புகைவண்டியிலிருந்து
அந்தஸ்துமிக்க கனவான்களின் கால்கள்
பூமியில் பட்ட மாத்திரத்தில்,
தன்னை அப்பிக்கொண்டிருக்கும்
பிள்ளைகளை உசுப்பி
அவர்களை நோக்கித் தள்ளிவிடும்
பிச்சைக்காரத் தாய் போல் இருக்கிறது
உங்களைப் பார்க்கையில்
உங்கள் இதயத்தில் ஏனம்மா இத்தனை
வறுமை?
தனிமையை எதிர்கொள்ளத் தெரியாது
எப்போதும் கூட்டத்தால் கவரப்படும்
கோழை மனிதர்கள்
நமது குடும்பத்தின் கூட்டம் கண்டும்
கவரப்படலாம்
ஆனால் இங்குள்ள வெறுமையை நோக்க
நேர்கையில்
அவர்கள் இதயம் சுக்குநூறாகிப் போகாதா
அம்மா?
அன்பை அறிந்திராத
இதய வறுமையின் வக்கிரப்
பின்னல்களின்
உச்ச விளைவுகளையும்
உச்ச விளைவுகளின் ஆளுமைகளையும்

கூட
நாம் நம் குடும்பத்தில் கண்டாயிற்று
இல்லையா, அம்மா?
உங்களது மூத்தாளின் இரண்டு
மகள்களுமே
தூர ஒதுங்கிவிட்டார்கள். இப்போது
அவர்கள் சிரித்துவிடுவார்களே
என்றுதானே
நீங்களும் அஞ்சுகிறீர்கள்?
உங்கள் ஏழு பிள்ளைகளும்
ஏழு நரகத்தில் வாழ்ந்து
கொண்டிருக்கிறார்கள்
என்பது உங்களுக்குத் தெரியாதா?
உங்களின் பிள்ளைகளின் பிள்ளைகள்
முகத்திலும்
அதாவது உங்கள் பேரப்பிள்ளைகள்
முகத்திலும்
தொடர்ந்து வரும் சந்ததியினரிடமும்
அதைக் கண்டு பிடித்துவிடலாம் அம்மா
உலகத்தின் எங்காவது ஒரு மூலையில்
மனிதர்கள்
பொருள் பொதிந்த அமைதியுடனும்
மகிழ்வுடனும்
நன்றாக வாழ்ந்துகொண்டிருக்கும் ஓர்
இடத்திற்கு
நம் குடும்பத்திலிருந்து ஒரு நபரை

அனுப்பிவைத்து விட்டால் போதும் அம்மா, அந்த இடம்

யாருக்குமே தெரியாத இரகசிய வழியில்

ஆன்மாவின் மகிழ்ச்சியற்ற ஒரு நிலமாக

நல்ல இதயங்களால் தாங்கிக்கொள்ளவே முடியாத

கொடூரங்கள் நிறைந்த நிலமாக

சந்தேகமின்றி மாறிவிடுவதற்கு!

எனக்கு அப்பாவின் முதல் மனைவியை

நான் பார்த்திராத என் பெரியம்மாவை

பைத்தியம் பிடித்து தற்கொலையில் தன்னை மாய்த்துக் கொண்ட

அந்த மானுட உயிரைத்தான்

இப்போது நினைத்துக் கொள்ளத் தோன்றுகிறதம்மா!

*

**உலகமே!...**

உலகமே!
ஆண் உருவில் தோன்றித்
திணறிக் கொண்டிருக்கும்
இச் சிறு குழந்தை மீது இரக்கம் காட்டு!
ஆணுலகு தந்த அதிர்ச்சிகளாலோ
குலுங்கி உடைந்து சிதறிப்போனான்
இக் குழந்தை
ஆணாயிருப்பதற்கே அஞ்சி
ஒளியுமிடம் தேடி அலையுமோர்
ஊனப் பிறவி ஆனானோ,கடவுளே!
பெண்ணினத்தால் ஈர்க்கப்பட்டோ
நம்பியோ
பெண்ணுக்குள் ஓடி
ஒளிந்து கொள்ளத் துடிக்கிறது இப் பிஞ்சு?
இறுதியாய்
இன்றைய மனித இனத்தின் மீதே
மூண்ட வேதனையிலும் தீர்மானத்திலுமாய்
பிறப்பையே அறுத்தொதுக்கிய
பிறவியாகி நின்றிட்டானோ?
உலகமே!
மனித உருவிற் தோன்றித்
திணறிக் கொண்டிருக்கும்
இச் சிறு குழந்தை மீது இரக்கம் காட்டு!
*

**மூன்று: நிலாவெளி**

இந்த பன்னீர்ப் பூக்கள்
இன்னும் குன்றாத ஒளியுடன்
குதூகலித்துக் கொண்டிருக்கின்றன
இப்போது
மண்ணில் உதிர்ந்து கிடப்பதறியாமல்!
மின்னும் கருநிற ஆட்டுக்குட்டி ஒன்று
அவற்றை மேய்ந்து கொண்டிருக்கிறது
தான் உண்பதெதை என்பதையே
அறியாமல்!
ஆட்டுக் குட்டியோடு போட்டி போட்டபடி
ஓடி ஓடி மலர்களைப் பொறுக்குகின்றன
சிறுமியொருத்தியின் பூவிரல்கள்,
என்ன செயலிது, என்ன குதூகலமிது
என்றெலாம் அறியாத ஆனந்தத்துடன்
முற்றம் பெருக்கவந்த சிறுமி முகம்
ஆவலோடு தங்கை காட்டும்
பூங்கொத்தினை
புன்னகை சிந்த பார்த்த பிறகும்
மூக்கருகே நீட்டப்படும் பூங்கொத்தினை
ஆசை குன்றாமல் முகர்ந்துவிட்டே
கண்ணாகிறது தன் வேலையில்
தன் வேலையிலேயே கண்ணாயிருக்கும்
யாரோ ஒருத்தி
பிரமைதட்ட
அவளையே உற்றுப்

பார்த்துக்கொண்டிருப்பதுபோல்
குப்பையோடு குப்பையான
வாடல் மலர்களை நீங்கி
அழகிய முற்றமும் கையுமாய்
உள் நுழைந்துகொண்டிருக்கையில்
உள்ளாடையில் பட்டு ஊறிக்
கீழே தெறித்த இரத்தக் குறியுடன்
துக்ககரமான தெளிவுடன்
வாடாத மலரொன்றின்
தன் தாயின் தோள் சாய்கிறாள் சிறுமி
வாசம் துய்த்தறிந்தவள் போலும்
*

**பேருந்துகள் வந்தும் நின்றும்...**

பேருந்துகள் வந்தும் நின்றும்
கிளம்பியும் கொண்டிருக்கும்
புறநகர் புதிய பேருந்து நிலையம் அது.
அதோ அந்த மதுரப் பதின்வயதுப் பெண்ணுக்கு
யார் சொல்லிக் கொடுத்தார்கள்,
நிமிர்ந்த நடையையும் நேர்கொண்ட பார்வையையும்
காதல் கனித்து சுடர் விடும் கண்களையும்
ஈனப் பார்வைகட்கு இடங்கொடாத் தனிமையையும்
பிறர் வழியில் இடித்துக்கொள்ளா தன் கவனப் பாதையையும்
நிலம் நோகாது நடக்கும் நேசத்தையும்?
அவள் ஒரு புத்தம் புதிய பாணியில்
அன்றலர்ந்த மலர்போல்
தோன்றியதெவ்விதம்?
தன் உடலுக்கேற்ற ஆடையை
அவள் தேர்ந்தெடுத்ததெவ்விதம்?
சொல்லத்தான் சொல்கிறது
களிப்பு மிகுந்து உலவும்
அத் திறந்தவெளிக் காற்றில்
துடிப்பு மிகுந்தசையும்
அவள் ஆடை நுனிகளின் ஆயிரம் நாவுகள்
அவள் யாருக்காகவோ '

ஒரு ஓவியம்போல் திரும்பினாள்,
தன்மீது அபாரமான புரிதல் கொண்ட
அன்பனைக் கண்டோ
அப்படி ஒரு புன்னகை கொண்டாள்,
அப்படித்தான் ஏமாந்து நலிந்து
துயர் கொண்ட மனிதர்கள் மத்தியில்?
*

**வேண்டாம் காதல...**

வேண்டாம் காதல,
காதலின் சின்னமாய்
நீ தரும் வைரமோதிரம்!
அது நம் பிரிவைச் சுட்டுகிறது
ஆகவே அது ஒரு பொய்
அதன் ஒளியில்
மறைகிறது அதன் பொருண்மை என்னும்
அதன் பொருண்மதிப்பில்
ஒளி மறைந்து
பேரழிவின்
கொலைக் கருவி நெடியே அடிக்கிறது
வேண்டாம், காதல,
வேண்டாம்! வேண்டாம்!

*

**ராதே...**

ராதே! உன் பவுர்ணமி உடலின்
இயற்கை வெளியினில்
நான் ஆடு மேய்க்கும் சிறுவன்
பாராய் ராதே!
இந்த ஆல் நிழலும் குளமும் நானுமன்றோ
எரிக்கும் இக் கோடை நண்பகலை
நிலாவெளியாய்
மாற்றிக்கொண்டிருக்கிறோம்!
என் புல்லாங்குழலின் இசையமுது வேண்டி
என் முழங்காலில் உன் மோவாய் வைத்து
என்னையே
உற்றுப்பார்த்துக்கொண்டிருக்கும்
அன்பின் அழகியே, ராதே!
எப்போதும் தன் அழகுபற்றியே
விவரிக்கவைத்துக் கேட்டு மகிழும்
நின் தற்காதலின்
ஏவல் கருவி மாத்ரமே தானோ நான்,
என் அன்பே

*

WhatsApp • 10 messages from 9 chats • now
MUD HOUSE 4 -- JULY 6 & 7: +91 98409 88594 🙏...
End Manual Scavenging Now (2 messages): +91 9...
திராவிடர் சிந்தனை பேரவை: +91 99942 27110
Jai: +91 98423 31489 இன்னும் ஐந்து வருடத்தில்...
VPM🌸🌸VVIP: R Siva Suntv நெல்லை முன்... +2

தன் கணவனை எண்ணும் போதெல்லாம்
நினைத்துக் கொள்வாள்.
இன்று பற்றி எரியத் தொடங்கிவிட்டாள்,
தன் பெண்ணுக்கு மாப்பிள்ளை தேடும் காலம் வந்ததும்.
அடடா! மனிதர்கள் தாம் எத்தனை பொல்லாதவர்கள்!
சுற்றி நடப்பதையெல்லாம்
பார்த்துக் கொண்டுதானே இருக்கிறாள் அவள்!
(ரொம்ப கவலைப்படாதே பத்மா,
நீ நினைக்கிற மாதிரி மாப்பிள்ளையே
உன் மகளுக்கு அமையப் போகிறான் பார்!)
தன் பெண்ணுக்கு வேண்டிய ஆண்மகன்
ஒரு குடிகேடனாய் இருந்துவிடக் கூடாது.
பெண்ணைப் பூப்போல வைத்துக்
காப்பவனாயிருக்க வேண்டும்
முதலில் அவன் ஒரு
போலியாக இருந்துவிடக் கூடாது.
தன் குடும்பத்திலோ தொழிலிலோ
அவன் அடிமையாகவும் இருக்கக் கூடாது.

WhatsApp • 10 messages from 9 chats • now
MUD HOUSE 4 -- JULY 6 & 7: +91 98409 88594 🙏...
End Manual Scavenging Now (2 messages): +91 9...
திராவிடர் சிந்தனை பேரவை: +91 99942 27110
Jai: +91 98423 31489 இன்னும் ஐந்து வருடத்தில்...
VPM🌸🌸VVIP: R Siva Suntv நெல்லை முன்... +2

குறைச்சல்?)

இருப்புக் கொள்ளமாட்டாமல்

தன் கணவனின் படிப்பறைக்குள் நுழைந்தவள்

அவ்வேளை அவனிடம் பேச முடியாமற் திரும்பினாள்.

எப்படியோ தன் மகளுக்கு

ஒரு நல்ல பையன் வேண்டும் அவளுக்கு.

அப்புறம் இவ்வுலகைப் பற்றிக்

கவலையேயில்லை அவளுக்கு

*

**இந்தப் பயங்கரமான உலகத்திலிருந்து...**

இந்தப் பயங்கரமான உலகத்திலிருந்து
தப்பிப் பிழைத்துக்கொண்ட
எத்துணை அதிர்ஷ்டசாலி தான் என
தன் கணவனை எண்ணும் போதெல்லாம்
நினைத்துக் கொள்வாள்.
இன்று பற்றி எரியத் தொடங்கிவிட்டாள்,
தன் பெண்ணுக்கு மாப்பிள்ளை தேடும் காலம் வந்ததும்.
அடடா! மனிதர்கள் தாம் எத்தனை பொல்லாதவர்கள்!
சுற்றி நடப்பதையெல்லாம்
பார்த்துக் கொண்டுதானே இருக்கிறாள் அவள்!
(ரொம்ப கவலைப்படாதே பத்மா,
நீ நினைக்கிற மாதிரி மாப்பிள்ளையே
உன் மகளுக்கு அமையப் போகிறான் பார்!)
தன் பெண்ணுக்கு வேண்டிய ஆண்மகன்
ஒரு குடிகேடனாய் இருந்துவிடக் கூடாது.
பெண்ணைப் பூப்போல வைத்துக்
காப்பவனாயிருக்க வேண்டும்
முதலில் அவன் ஒரு
போலியாக இருந்துவிடக் கூடாது.
தன் குடும்பத்திலோ தொழிலிலோ
அவன் அடிமையாகவும் இருக்கக் கூடாது.

கை நிறையச்
சம்பாதிப்பவனாய் மட்டும் இருந்தால் போதாது.
ஆள் அழகாய் இருந்தால் மட்டும் போதாது
(என் பெண்ணுக்குமட்டும் என்ன குறைச்சல்?)
இருப்புக் கொள்ளமாட்டாமல்
தன் கணவனின் படிப்பறைக்குள் நுழைந்தவள்
அவ்வேளை அவனிடம் பேச முடியாமற் திரும்பினாள்.
எப்படியோ தன் மகளுக்கு
ஒரு நல்ல பையன் வேண்டும் அவளுக்கு.
அப்புறம் இவ்வுலகைப் பற்றிக்
கவலையேயில்லை அவளுக்கு
*

**தோல்விகளாற் சற்றும் துவழாது...**

(தோல்விகளாற் சற்றும் துவழாது
காலங் காலமாய்க்
கவிகளும் புத்தர்களும்
தோன்றிக் தோன்றிச்
சுட்டிக் கொண்டேயிருந்தும்)
கூடிவரவில்லையே இன்னும்
சொல்லொணாத் துயரங்களின்றும்
விடுதலை!
பூர்வகுடி இனக்குழுவிலிருந்து இன்றுவரை
மனிதன் சுமந்துகொண்டுவரும்
சுமையெதுவும் அழுந்திப்
பொசுக்காமையினாலன்றோ
பூத்துள்ளது இத்துணை
மென்மையும் அழகும் இனிமையும்,
அண்டசராசரங்களையும் அணைத்து
விரியும் காதலும் கொண்ட
ஒரு கன்னிப் பெண்ணின் இதயம்!
மானுட விஷங்களைத் தன்
கண்டுகொள்ளாமையினாலும்
நிர்த்தாட்சண்யத்தாலும்
தூய்மையாலுமே
கொன்றொழித்துவிட்ட
பேரற்புதத்தை, இரகசியத்தை
அவள் கண்ணின் மின்னொளியில்
கண்டதில்லையோ மானுடர்கள்?

*

**குடும்பச் சுமையின்...**

குடும்பச் சுமையின் காரணமாய்
யோசித்து யோசித்து அனுப்பிய
பெற்றோரால்
காலத்தைப் பறிகொடுத்துவிட்டவள்போல்
தயங்கித் தயங்கிப் பள்ளிக்கூடம் வந்தாயே
அப்புறம் எப்படிப் பொருந்திப் போனாய்?
வகுப்பிற்கு மீறிய வயதுடன்
மற்ற பிள்ளைகளுக்கு உன்
நெருப்பையூட்டியபடி
அடங்காப்பிடாரியாக, ஆடுகாலியாக
என்ன ஆட்டம் ஆடினாய் நீ.
இதுதான் நீ பொருந்திப் போன லட்சணமா?
ஒருநாள் பெரிய மனுஷியாகிவிட்டாய் என
உன் பெற்றோரால் பள்ளிக்கூடம்
மறுக்கப்பட
கட்டுக்கடங்காது பொங்கிப் பொங்கிவரும்
உன் உயிர்த்தழல் களி வெள்ளம்
கொண்டு...
இப்போதுதானே தெரிகிறது
இவ்வளவுகாலம் என்ன
செய்துகொண்டிருந்தாயென!
பதிவுச் சான்றிதழ் வேண்டி
நீ என் மேஜையருகே...
எவ்வளவு உட்காரச் சொன்னபிறகும்
பரவாயில்லை சார் பரவாயில்லை சார்

என்றபடி
உறுதி மிளிரும் நின் தாழ்மையின்
முழு ஆளுமையையும் காண்பிப்பதற்கோ
அப்படி நின்றாய், தாய்மைக் கோலத்துடன்
இன்னும் உன் தந்தை மற்றும்
சுற்றத்தாரால்
ஏற்றுக் கொள்ள முடியாத உன் காதலனும்
காதற் கணவனுமான இளைஞனுடன்?
குறிப்புணர்த்தும் குரலின் நாதமும்
பார்வையின் பொன்மையும்
ஆறாத காதலின்
தீராத ரகஸ்யங்கள் மிளிரும்
பெண்மையுமாய்
நீ வந்து நின்றபோது அன்றோ
என் புரிதல் நேர்ந்தது!
உழைத்து உழைத்துத் தேய்ந்து நறங்கிய
அவன் கரிய உடலின் புதையுண்ட
கண்களில்தான்
எத்தனை பெருமிதம்! களிப்பு!
அதைக் காணத்தான் காலம் காலமாய்க்
காத்திருந்தவள்போல்
உன்னிடமும்தான் எத்தனை பூரிப்பு!
கற்றம் கொதித்தடங்கிய அந்தக்
கலவரம்தான்
உன் உடலில் நாணத்துடன் வெளிப்படும்
ஒரு சிறு இதழ்ச் சுழிப்பில் ரசவாதம்

பெற்றுக்

கொழிக்கும் பொன்னகைகள் போல்
உன் உடல் முழுதும் ஒளிர்கிறதோடி
தெய்வப் பெண்ணே?

*

**வீடெங்கும் சில நகர்த்தல்கள்...**

வீடெங்கும் சில நகர்த்தல்கள் துலக்கல்களான
வேலை மும்முரத்திடையே
திடீரென்று அவன் முன்வந்து கையூன்றி
அவன் முகத்தைப் பாத்தபடி உரைத்தாள் வசுந்தரா
"'நமது பெரியவர்கள் இந்த பண்டிகை விழாக்களையெல்லாம்
விஷயம் தெரியாமல் ஏற்படுத்தியிருக்கவில்லை.
இப்படி அடிக்கடி புத்துணர்வு ஊட்டிக் கொள்வது
தேவையாகத் தானே இருக்கிறது” என்றவள்
உங்களிடம் வந்து இதைச் சொல்லவந்தேன் பாருங்கள்
என்றபடி சடாரென்று வந்த வேகத்தில் போய்விட்டாள்.
ஒரு விழாவில் நம்மிடம் ஏறிக்கொண்ட புத்துணர்வு
அடுத்த இரண்டாவது மாதத்தில் இறங்கிவிடுகிறதா,
காற்றிழந்து விட்ட பலூனைப் போல?
நமது கொண்டாட்டம் ஒரு போதை போன்று
இரங்கத்தக்கதாய் இருப்பதேன்?

நமது புத்தாடைகள் புத்தாடைகள் இல்லையா?

நாம் வண்ணமடித்துத் துலங்கச் செய்திருப்பது

நமது பழைய கட்டத்தையன்றி வேறல்லவா?

எத்தகைய வாழ்வும் விழாக்களும் வேண்டும் நமக்கு

இதோ இந்தத் தாவரம்போல்

பூரணப் புத்துணர்வு துலங்க?

*

**திடீரென்று...**

திடீரென்று
அவள் வீடே ஓர் அறையாகத் தோன்றியது,
வெகுகாலம் அறைவாசியாய் வாழ்ந்த
பழக்கத்தினாலா?
தீரத் தீரத் தன்னுள் மூழ்கி
உண்மையினைத் தீண்டியதினாலா?
ஜன்னலருகே வந்து நின்றவள்கண்டாள்
இப் பூமிதான்- தன் மறதி உதறி
ஒரு புதிய வீடாய்ப் பொலிந்து நின்றதை!
அவ்வண்ணமே வாசலுக்கு வந்து
நின்றபோது
ஆ, கடவுளே!
கால் தரிக்கத் தரையேயில்லாத வெளி!
கண்ட மாத்திரத்தில் அவள் விலாவில்
அடிவயிற்றை உறிஞ்சிக்கொண்டு
குறுகுறுத்து அசையத்துடித்த சிறகுகள்!
ஆனால், கறுத்த வானத்தில்
ஒரு கரும் பறவையாய்
தனது துயர்ப் பாடலால்
ஒரு துயர்ப்பாடலாக மட்டுமே
அறியப்படுகிறாள் அவள்

*

**அவள் பெயர் சூர்யா...**

அவள் பெயர் சூர்யா.
அவள் அதிகாலையிலேயே எழுந்து கொள்கிறாள்.
கைக்கு அகப்பட்ட கடல் மற்றும்
சிறிய பெரிய நீர்நிலைகள் ஏதாவதொன்றில்
முகம் கழுவிக்கொண்டு
சற்றும் தாமதமின்றிச்
சுறுசுறுப்பாய்த் தன் வேலையைத் தொடங்குகிறாள்
வளிமண்டலத்தைச் சிறிது சூடு பண்ணி
வைகறைக் காற்று கொண்டு
வான்வெளியை
மலைகளிலிருந்து தொடங்கிப்
பெருக்குகிறாள்
அப்புறம் தன் குழந்தைகளைத்
தொட்டு எழுப்பி
காலைக் கடன்கள் முடித்துவர உந்துகிறாள்.
குளிர்பதன இரவிலிருக்கும்
காய்கனிகளை எடுத்து
தன் வெப்பத்தால் சமைக்கத் தொடங்குகிறாள்
தம் குழந்தைகளோடு குழந்தைகளாய்
பறவைகளையும் விலங்குகளையும்

சிறுசிறு பூச்சிகளையும் கூட
அவள் நேசிக்கிறாள்
குளிர்நிழலிலமர்த்தி
அவள் எல்லோர்க்கும் உணவு
பரிமாறுகிறாள்
பகலெல்லாம் தானாய்
விரிந்து நிறைந்தபடி
அவள் உழைத்துக்கொண்டேயிருக்கிறாள்.
அத்தனை வேலை நெருக்கடியிலும்
தான் சமைக்கும் உணவுப்பொருட்களின்
வண்ணமும் சுவையும் மணமும்
அத்தனை நிதானத்துடன்
அத்தனை அழகு வேறுபாடுகளுடன்
அத்தனை அன்புடன் செய்யப்பட்டுள்ளதை
நிரூபிக்கிறாள்
பள்ளிக்கும் அலுவலகத்திற்குமாய்த்
தன் குழந்தைகளை அனுப்பிய கையோடு
இமைக்காது அவர்களைப்
பார்த்துக்கொண்டே நிற்பவளாய்
இருக்கிறாள்
அப்புறம்தான் தன் தனிமைக்குள்
வந்தவளாய்
அழுகிறாள்
*

**மரக் கிளைகள்...**

மரக் கிளைகள் முணுமுணுக்க
மரமல்லி மரத்துக்குப் பின்னாலிருந்தபடி
ஒளி வீசிக் கொண்டிருக்கும் நிலா
இரவின் ஆழ்ந்த மவுனத்திடையே
அவள் தன் அன்பனைக்
கண்டுகொண்டிருக்கும் வேளை
அவனது இன் தீண்டலை பேரழகை
இன் குரலை இளமுறுவலை
தன் உயிரேர் டொன்றிய பேரிருப்பை
அவள்துய்த்துக்கொண்டிருக்கும் வேளை
காதலால் தீண்டப்பட்ட அவளைக்
கனாக் காண்பவளாய்
எவரும் சொல்ல முடியாதிருக்கிறது
அவளது பகல்
தாங்கொணாத துயரத்திற்கும்
காதலின் தீண்டலுக்குமாய்
அவள் தன்னைப் பகிர்ந்தளித்து
விட்டாளோ
என்றிருக்கிறது அவள் வாழ்க்கை
இன்மையின் வெற்றுநரம்புகள் மீது
அவள் விரலசைவில் எழும் இசையோ
இல்லமெங்கும் நிரம்பி
வெளியெங்கும் பரவும் இச்சையால்
பொங்கித் ததும்புகிறது
*

**வியர்த்தமாகிக் கரைகின்றன...**

வியர்த்தமாகிக் கரைகின்றன
வெளியெங்கும்
யாரோ அழுதழுது புலம்பும் பிராத்தனைகள்
பட்டம் விடும் சிறுவனைப்போல்
யாரோ இந்த அகால வேளையில்
விண்ணை அளாவிக்
கொண்டிருக்கிறார்கள்?
இல்லை,
விண்ணோடு விண்ணாய்
விண்ணிற் கலந்து நிற்கிறது எதுவோ
விழித்திருக்கும் ஒரு படுக்கை
அகலத் திறந்த சாளரம் வழியாய்
தன் பிரக்ஞை வீசிப் பிடிக்க
முயன்று முயன்று தோற்கிறது அதனை
விண்ணில் மிதக்கும் அழியாத
இன்மையோ
சாளரங்கள் வழியே
புயலாய்ப் பாய்ந்து சென்று
விழித்திருக்கும் வெற்றுப்
படுக்கைமீது படுக்கையாய்ப்
புல்லிக்கொள்ள விழைகின்றது
*

**வாழ்வின் பெரும் பகுதியும்...**

வாழ்வின் பெரும் பகுதியும்
பொருளீட்டுவதிலும்
கேளிக்கைகளிலுமே கழிந்துவிட,
எஞ்சிய சொற்பப் பொழுதுகளின்
குழந்தைத்தனமான
சந்தோஷங்களினின்றும்
யாரோ அலட்சியப்படுத்தப்பட்டுக் கிடக்கும்
சில்லறைகளைச் சேகரித்துச்
சேகரித்துத்தான்
இன்னும் அழிந்துபோய்விடாத
இன்பஉலகின்
நோய்க் குழந்தையைக்
காப்பாற்றிவருகிறார்கள்.
களைத்த உடலுக்கடியே
தூக்கம் விரிக்கும் மஞ்சத்தைப் போல
மனிதர்களை இளைப்பாற்றி வருகிறார்கள்
பதறிப் பதறித் தங்கள் குழந்தைகளைப்
பேணுதற்கே மனிதர்கள்
துடித்துக்கொண்டிருக்க
அந்த யாரோ தான் இரக்கம் கொண்டு
அவர்களையும் சேர்த்துக்
காப்பாற்றிக் கொண்டிருக்கிறார்கள்
நமது தனிமைகளிலெல்லாம்
தவறாது காட்சி தருகிறது
கண்ணீர் ததும்பும்

# அந்த யாரோவின் முகம்

*

**இன்பமும் வேதனையுமாய்...**

இன்பமும் வேதனையுமாய்
என் இதயம் நிறைந்து ததும்புவதென்ன?
துரத்திக் துரத்திக் காதல் கொல்லும்
உலகில்
காதல் தன் தலைமறைவு வாழ்க்கைக்காய்
என் இல்லைத்
தேர்ந்தெடுத்துள்ளதென்றா?
ஒரு பகல் முடிவில்
ஒளியேற்ற இருந்த நேரத்திலே
ஓடிவந்தவர்களாய்
என் இல்லில் வந்து அமர்ந்தது ஓர் இணை.
நனைந்து விட்ட உடலுடன்
மழைக்கு ஒதுங்கி நிற்கும்
பறவைகளைப்போல
நடுக்கும் குளிரை
இன்பமென அனுபவிக்கும்
குழந்தைகளைப்போல
காதல் தரும் கதகதப்பில்
உலகம் தரும் அச்சம் மறந்தவர்களாய்
தனிமை சூழ்ந்திருந்த என் இல்லத்தில்
நிறைந்து வழிந்த இன்பத்தை அவர்கள்
கண்டார்கள்,
தாங்கள்தான் அதனைக்
கொண்டுவந்தவர்கள்
என்பதனையே அறியாதவர்களாய்

அந்தச் சிலநாட்கள் என் இல்லிருந்து
இரவுபகலாய் அவர்கள்
தீட்டிக்கொண்டிருந்த திட்டத்தை
நானும் அறியவென நுழைந்தபோது
அவன் முறுவல் அருகிருக்க
அந்தப் பெண் தன் மார்பிலிருந்த அணியை
எடுத்து
என் முன் நீட்டுகையில் இரகசியமான
சவால் ஒன்றால்
தாக்குண்டவன்போல் அதிர்ந்தேன்.
அன்று முதல் அவர்களுக்காய்
காசுக்கடை பஜாரில்
விலைமதிக்க முடியாத பொருளை
விலைக்கு விற்க முயல்பவனாய்
அலைந்தேன்
*

**மரியே...**

மரியே! எங்கள் அன்னையே!
ஆண்துணையில்லாமலேயே
ஒரு மாமனிதனைப் பெற்றெடுத்துக்
கண்சிமிட்டிய
உன் ரகசியச்சமிக்ஞையை
நாங்கள் அறிந்தோம் அம்மா
யாருக்கும் தெரியாமலிருக்க
ஒரு பெண்ணியத்தெய்வமாய்
ஆண் அவனையே முன்னிறுத்தினோம்

அவனே எங்கள் காதலன்
அவனே எங்கள் காவலன்
அவனே எங்கள் பணியாளும் ஆகினானே
ஆனால் எங்கள் மன மாசின் காரணத்தாலோ
அட்டூழியங்களின்னும் அழியாது தொடர்கின்றன?
காக்கிச்சட்டையணிந்து
நாங்கள் ஜீப்பிலேறத் தொடங்கியும்
பிரச்னைகள் இன்னும்
ஓய்ந்த பாடில்லையே, அன்னையே!

*

**அவளுக்கு என்னாயிற்று...**

அவளுக்கு என்னாயிற்று திடீரென்று?
திடீரென்று கண்ணெதிரே ஒரு கூட்டம்
நெருக்கியடித்துக்கொண்டு தெரியக் கண்டு
அவள் திடுக்குற்றாள்
(சுதா, அறையில் ஓடிக்கொண்டிருந்த
தொலைக்காட்சிப் பெட்டியில் தெரிந்த காட்சியே
அந்த ஆள் கூட்டம்)
நண்பகலில் வந்து நின்ற செவிலிப்பெண்
மூன்று உருவங்களாய்த் தெரிந்ததைக் கண்டு
தன் கண்களை இமைத்து இமைத்துப் பார்த்துக்கொண்டு
வருந்தினாள்
(அவர்கள் சீருடையணிந்த மூன்று பேர்கள்தானே சுதா
ஏன் ஒருத்தர் மூன்று பேராகத் தெரிவதாக
நீயே உன்னைக் குழப்பிக் கொள்கிறாய்?)
குளியலறை செல்ல
படுக்கையிலிருந்து சறுக்கி எழுந்து திரும்பியபோது
எதிரே அவள் ஒற்றை உருவம்
அவளையே பார்த்து நிற்பது கண்டு
அக் கண்ணாடிமுன்

நோய் நீக்கத் தெளிவின்
அமைதிநிலை அடைந்தாள்
தற்காதல் பெருகிவர
தன்னைத் தானே முத்தமிடுவதற்காய்
கண்ணாடியை நெருங்கியபோது
அவளருகே அவள் தோழி தோன்ற
திரும்பி தன் தோழியை
அணைத்துக்கொண்டு
அவள் கன்னத்தில் முத்தமிட்டாள்
உனக்கு உடலில் ஒரு நோயுமில்லை, சுதா.
நன்றாக ஓய்வெடுத்துக் கொண்டாற்
போதுமாம்.
நாம் இப்போதே இம் மருத்துவமனை விட்டு
வெளியேறப் போகிறோம், தெரியுமா?
*

**விடுதலையானாற் போல்...**

விடுதலையானாற் போல் சிறகடித்தாள்
விதவையான பிறகும் மல்லிகா
எழுதுவது அதிகமானது மட்டுமின்றி
கருத்தரங்குகளிலும் மனிதரிடையே
ஜொலித்தாள்
ஆண்கள் ஜொலித்தால்
அது அவர்கள் ஆற்றலின் விகசிப்பு
பெண்கள் தாம் முன்வந்தால்
அது காமத்தின் தந்திரப் பரிதவிப்பா?
ஃபிராய்டியம் நாறும்
சில ஊத்தை வாய்களை மூடியபின் தான்
மல்லிகா தன் கட்டுரையை வாசித்தாள்:
மனிதர்களாகிய நாம்
இன்னும் எந்த ஒன்றையும்
சரியாகக் கற்றுக்கொள்ளத்
தொடங்கவில்லை
முதலில் நம்மை நாம் அறிந்து
கொள்ளவில்லை
பெண்கள் முன்னே ஒரு ஆணும்
ஆண்களிடையே ஒரு பெண்ணும்
ரொம்ப அலட்டிக் கொள்வதைப் போலவே
ஆழமற்றிருக்கின்றன நமது தாபங்கள்.
பொழுது போகின்றது காலம் காலமாக
ஆழமற்ற வேட்கைகளும்
வேட்கையடங்கல்களுமாக.

வலியும் துயரும் உணராக்
கேளிக்கைகளும் துய்ப்புகளுமாக
இப்போதும் மல்லிகாவை
ரொம்ப அலட்டிக் கொள்வதாகச்
சொல்பவர்கள்
யாரிடையே எவ்வேட்கை கொண்டென்ற
விசாரணையினைத் தொடர்கிறார்களா?
*

**நீ அவனைப் பார்க்கவில்லையா...**

நீ அவனைப் பார்க்கவில்லையா என்றதற்கு
புகைப்படமொன்றை எடுத்து நீட்டினாள் மலர்.
விதந்துரைக்கப்பட்ட சொற்களால்
அலங்கரிக்கப்பட்டிருந்தது அப் புகைப்படம்
போதுமாடி?
நீ அவனைப் பார்க்கக் கேட்கலையா?
பேசக் கேட்கலையா?
உன் மவுனத்தின் புன்னகையின்
பொருள்தான் என்ன?
உன்னைத் தெரியும்டி எனக்கு.
கற்பனையான குதூகலத்தால் துள்ளாது உன் மனம்.
மெய்யான மகிழ்ச்சி?
அப்படி ஒன்றே கிடையாதென்கிறாயா?
ஆர்வத் துடிப்பு?
சந்தேகங்கள் பயங்களினால்
அது அமுங்கிக் கிடக்கிறதோ?
சுற்றி நடக்கும் கோலாகலங்கள்
உனக்குத் தைரியமூட்டாதோ? இல்லை,
நீ திடீர் ஞானியாகி விட்டாயா?
காண வரும் உறவுகளின்
சந்திப்புகளில் மாத்திரமே பூக்கும் நம் புன்னகைகளோ

விலை மதிக்கவொண்ணாததும்
அதேசமயம்
வீர்யமேயற்றதுமாய்த் தெரிகிறதேடி!
நாம் எந்த ஆயுதத்தைக் கொண்டு
இவ் வாழ்க்கையை எதிர்கொள்ளப்
போகிறோம்?
சொல்லடி என் திடீர் ஞானியே!
உன்கையறுநிலையைக்
கண்டுகொள்ளாதவளாய்க்
கேலி செய்கிறதால் வருந்துகிறாயோ
என் உயிரே!
எவ்வித மனக்கோலமும் கொள்ளாத
வெண்ணிலாவன்றோ நீ!
இத் தயார்நிலைப் பரபரப்புகளும்
வரும் விழா மேடையின் மணக்கோலமும்
வெறுமனே உன்னைப் போர்த்தியிருக்கும்
ஆடை மட்டுமேயாகட்டும் என் கண்மணி
ஊற்றெடுக்கும் உன் இதய ஆழத்தை
நானன்றோ அறிவேன், என் பிரியமே!
விழா மண்டபத்தின் கூட்டத்திடையே
நாயகியாய் நிற்பவளே!
குனியாதே பெண்ணே,
நிமிர்ந்து நட அவனை நோக்கி!
மாசுமறுவிலாத உன் வான்விழியின்
சுடரொளி
அது ஊடுருவமுடியாப் பொருளில்லை

இவ்வுலகில் எனும்படித்

திகழட்டும் அசாத்தியமான அதன் வலுவுடன்!

*

**இயேசுவும் சமாரியப் பெண்ணும்**

நெடும் பயணப் பாலை நடுவே
வறுத்தெடுக்கும் வெயிலணிந்து
தாகத்தாற் துவண்ட மேனியனாய்
இறங்கிப் பருகச் சிரமமான
ஓர் ஆழ்கிணற்றருகே வந்தவன்
கண்டான்,
தூரத்தே குடங்களுடன்
நீண்ட கயிற்று வாளியுடன்
வந்துகொண்டிருந்த ஒரு பெண்ணை!
தேவதையை!
தீராத இத்தாகமும் தரிசனமுமோ
இப்புவி வாழ்வின் சாரம்?
அங்கே பெருநகரங்களில் மனிதர்களை
ஒயாது உந்திக்கொண்டிருக்கும்
ஆசைகளும்
இத் தாகமும் ஒன்றா?
அவனது வியப்பும் தெளிவும்
துயரும் தேங்கிய முகமோ
அவனை அவளுக்குத்
தேவதூதனாக்கியது?

**கிறுக்குப் பிடித்துத் திரிந்து...**

கிறுக்குப் பிடித்துத் திரிந்து
கொண்டிருக்கும் இவ்வுலகில்
மருந்துக்கும் காணக் கிடைக்காதிருக்கிறது
அன்பு.
வேண்டியதோ ஃபிராங்கன்ஸ்டீன்
தாபமான அபரிமிதம்
அவளது உள்ளமா உலகமா
யார் அவளை ஓர் ஃபிராங்கன்ஸ்டீன்
ஆக்கியது?
மூடனும் சுரணையே இல்லாதவனுமான
புருஷனா?
சரியான நேரத்தில்
அவனை வேண்டாமென்று அழுத போதும்
நிர்ப்பந்தித்து அவளை வதைத்த ஈரமற்ற
குடும்பமா?
அவளது பெண்ணுடலை ஆர்வமற்றுப்
பார்த்து
விரைந்து விலகிடும் கண்களா?
காந்திமதி இல்லாவிட்டால் கலகலக்குமோ
வைபவங்கள்?
யானை புகாத வெண்கலப் பாத்திரக்கடை
ஓர் அழகா?
எந்த அந்நியர்களுடனும்
இரண்டே நிமிடத்தில் அவள்
உறவாகிவிடுவாள்

கூட்டத்தில் அவள் கைகள்
விழாப் பெண்கள் எவரையுமே
வெகு அலட்சியமாய் ஒதுக்கி முன்னேறும்
அவள் கண்கள், காணும் முக்யஸ்த ஆண்கள் பெண்களின்
உள்ளத்தைப் படிப்பதிலேயே மூழ்கியிருக்கும்.
எதிர்ப்படும் ஆண்கள் பெண்கள் எவரையுமே
'ப்பூ! இவ்வளவுதானா!' என்று அவர்களைக் கணித்தபடியே
தள்ளி முன்னேறிக் கொண்டிருக்கும். இதற்கிடையே
இயற்கையின் சந்திப்புக்களேதும் நிகழ்ந்து விடாவண்ணம்
பார்த்துக்கொள்ளும் சமர்த்தளும் ஆவாள் அவள்.
அவள் கைகளும் கால்களும் மொத்த உடலுமே
இரகசியமான ஒரு கவர்ச்சி நடனமாகவே
அங்குமிங்குமாய் அலைந்துகொண்டிருக்கும்
காந்திமதி ஒரு நீர் விரும்பித் தாவரம்.
நீரில்லாவிடத்தில் மாயமாய் மறைந்துவிடுவாள்.
சொதசொதவென்ற நீரிலே ஊறிக்

கொண்டபடி
அவர்கள் உடம்பெல்லாம் கொடியாய்த்
தழுவிக் கொள்வாள்.
இல்லத்தரசியின் அந்தரங்கத் தோழியாகி
புருஷனைக் காத்துக் கொள்ளும்
யோசனைகளை யெல்லாம் சொல்வாள்,
இல்லத்தரசியின் பேர் கெட்டு
குடும்ப மானம் போய்விடாதிருக்க என்றும்
அம்மாவின் கற்பு குறித்தும்
அத்தான்களிடம் எச்சரிக்கையாயிருக்க
வேண்டிய
அவசியம் குறித்தும் அண்ணன்
தம்பிகளிடம் கவனப்படுத்தி
குடும்பத்தின் காவல் தெய்வமாய்த்
திகழ்வாள்
எங்கும் துயரங்களையும்
வேதனைகளையும் விதைத்து
வாழ்நிலத்தை இரத்தத் துடிப்புகளற்ற
நடமாடும் பிணங்களாலான
சுடுகாடாக்கிவிட்டு
தனது குற்றங்களையெல்லாம் தந்திரமாய்
துன்பதுயரங்களே வாழ்வின் இயற்கை
என்னும்
தத்துவத்துள் புதைத்துவிட்டு
பூஜையறை பரிபாலித்து
கோயில் குளமென்று வண்டி நடத்தி

இன்றும் அவர்களை
நிர்வகித்துக்கொண்டு
ஜாலியாக அலைகிறாள் காந்திமதி,
அவளுக்குத் தெரிகிறது எல்லாம்
யாராலும் கண்டுகொள்ளப்படாத அது
எங்கிருந்து தொடங்கியதென
அவள் தன் தனிமையின் இருளில்
குருதி வழியும் வாயுடனும்
கைவிரல்களுடனும்
கொக்கரித்துக் கொக்கரித்துக் களைத்து
விம்மி அழுதபடியே தூங்கிப் போகிறாள்.
விடிந்தால் ஒவ்வொரு நாளுமே
இரவெல்லாம் குடம் குடமாய்க்
குருதி குடித்திருந்த பேயின் உற்சாகம்தான்
அவள் இறந்த உடலைப் புதைத்தாலும்
அது செரித்தபின்னும்
இன்னும் எழுபது இலட்சம்
ஆண்டுகளுக்கும்
இப் பூமியைக் கெடுத்துவிடக்கூடிய
வீர்யமிக்க விஷமுள்ளது அவள்
உடம்பெல்லாம்.
அவளைக் காப்பாற்றுவதும்
இப் பூமியைக் காப்பாற்றுவதுமான ஒரே
வழி
அவள் மூளையில் ஏற்பட வேண்டிய
மிகப் பெரிய வேதியல் மாற்றத்தில்தான்

உள்ளதாமெனில்

அதன் ஊக்கி எது?

அதுவேதான் நமது ஃபிராங்கன்ஸ்டீன் தாபமுமாமோ?

*

**அபரிமிதமான...**

அபரிமிதமான தியான
மந்திரங்களாலாகிய ஒரு மதம்
கொலுப் பொம்மைகள் விழாப்போலவே
எத்தனை கோலாகலமாகக்
காட்சியளிக்கிறது!
குருதியோடு குருதியாய்க் கலந்துவிட்ட
இக் கொண்டாட்டப் பழக்க
மகிழ்ச்சியினின்றும்
எப்படி விடுபடப் போகின்றன இக்
குழந்தைகள்?
ஒவ்வொரு மதமும்
ஒரு தியான மந்திரமேயன்றி
வேறில்லையாமா?
எங்கு பார்த்தாலும் ஒலிக்கும்
தியான மந்திரங்களின் இரைச்சலால்
தியானமெனும் பேரமைதி கூடுமோ?
தியானம்
அடையப் பெற்றவராய்த் தோன்றும்
பெரியவரே
சொல்லுங்கள் உங்கள் தியான நிலை
பற்றி
நீங்கள் உருக்கத்துடனும்
நம்பிக்கையுடனும் உபாசித்த
தியான மந்திரங்களினாலா
அல்லது

அத் தியான மந்திரங்கள்
தமது அனர்த்தத்தை உணர்ந்து
தம்மைத் தாமே அழித்துக்
கொண்டதினாலா
நிகழ்ந்தது அது?
பொம்மைகளோடு விளையாடிக்
கொண்டிருந்த
இப் பெண் குழந்தை
மணப்பருவமெய்தியதும்
அவளைத் துயர் சூழ்ந்து கொண்டதா
அமைதி தழுவிக் கொண்டதா, என்
கடவுளே!
*

**ஆயிரம் கண்களுடைய அழகு...**

ஆயிரம் கண்களுடைய அழகு மயிலே!
என் உயிரே!
வானமெங்கும் விண்மீன்கள்
பூத்துள்ள இவ்வேளை
பூரணநிலா எழுந்து
பொங்கி நிற்கும் இவ்வேளை
உலகமெலாம் இப் பூமியிலமர்ந்து
அவரவர் இஷ்டப்படி உண்டு களித்து
உரையாடிக்
கொண்டாடுவதற்கு
வேறுவேறு முகாந்திரங்கள் என்ன
வேண்டும்?
மழை பெய்து ஆற்றுவெள்ளம்
கரைபுரண்டோடும் வேளை
புன்னகைக்கும் வேளை
பூமியெங்கும் பச்சைப் பொன் மரகதங்கள்
உலகமெலாம் இப் பூமியிலமர்ந்து
அவரவர் இஷ்டப்படி உண்டு களித்து
உரையாடிக்
கொண்டாடுவதற்கு
வேறு வேறு முகாந்திரங்கள் என்ன
வேண்டும்?
தாவரங்கள் எல்லாம் ஆடைமாற்றிப்
பூச்சூடிக்
குதூகலித்துக் கொண்டிருக்கும்

இவ்வேளை
அறுவடைகள் குவிந்து மனம்
ஆடிப் பாடும் இவ்வேளை
உலகமெலாம் இப் பூமியிலமர்ந்து
கொண்டாடுவதற்கு
அவரவர் இஷ்டப்படி உண்டு களித்து
உரையாடிக்
வேறு வேறு முகாந்திரங்கள் என்ன
வேண்டும்?
என்ன மதங்கள்? என்ன கடவுள்கள்?
மனிதர்களை மனிதர்களிடமிருந்து
பிரிப்பவை
என்ன திருவிழாக்கள்?
நம்மையறியாமலேயே
நம் கொண்டாட்டங்கள்?
நம்மிடம் வலுப்படும் விஷங்களுக்கா
ஆயிரம் கண்களுடைய அழகு மயிலே!
என் உயிரே!
*

**கவிந்துகொண்டிருந்த...**

கவிந்துகொண்டிருந்த இருளை
ஊடுருவியபடி
வேலை முடிந்து தங்கள் வீடு நோக்கி
விரைந்து சென்றுகொண்டிருந்தது
கூலிப் பெண்கள் கூட்டம்
“கொடுமை கொடுமையின்னு
கோயிலுக்குப் போனாளாம்
அங்கேயொரு கொடுமை
ஆடிக்கிட்டு வந்திச்சாம்"
திறந்த மாடியில்
இனந் தெரியாத துயரில் மூழ்கியவனாய்
நான் தனியே அமர்ந்திருந்த வேளை
அந்த அந்தி இருளை எனக்கு
மொழிபெயர்த்துக் கூறுவதுபோல
கீழேயிருந்து கேட்டது அந்தக் குரல்
எதற்காக அப்பெண் அப்படிச் சொன்னாள்
என்று தெரியாமலே நான்
அமைதியிழந்தேன்
அந்தப் பெண் இந் நேரம்
தன் வீடு போய்ச் சேர்ந்திருப்பாள்
காலதாமதமாகிவிட்டதேயென
குழந்தைகள் பசித்திருக்குமேயென
அவசர அவசரமாய்
சோறு பொங்கத் தொடங்கியிருப்பாள்
உலை

கொதித்துக்கொண்டிருக்கையிலேயே,
அவன் குளித்து முடித்து வந்திருப்பான்.
அவள் கணவனும் பசியோடோ
குறையுணர்வுகள் மூட்டிய எரிச்சலோடோ
அல்லது எரிச்சலூட்டும் படியான
மந்தத்தனத்தோடோ இருப்பான்.
எல்லாவற்றுக்கும் ஈடுகொடுத்தபடி
அவள் தன் வீட்டிலும்
உழைத்துக்கொண்டிருப்பாள்
உழைப்பு தரும் அலுப்பை
அவள் தாங்கிச் சலிப்பதுபோலே
துயரங்கள் தரும் வேதனையை
அவள் இதயமும் தாங்கிச் சலித்துக்
கொள்ளும்
அன்றைய ஓய்வு தரும் அப்போதைய சிறு
ஆசுவாசத்தில்
வாழ்வினின்பக் காதலின் தீண்டலில்
எத்தனை விழுக்காட்டினை அவள்
அடையக்கூடும்?
பெருஞ் செல்வம் இல்லை
சோற்றுப் பானையில்
நாய் வாய் வைத்துவிடும்
என்பதற்கஞ்சியே
வீட்டுக் கதவைச் சாற்றிக்
கொண்டி போட்டிருக்கும் எளிமை
இப்பிரபஞ்சத்தின் அகண்டாகாரத்திற்கே

தங்களைச் சமர்ப்பித்துக் கொண்டவர்களைப்போல
முற்றத்து நிலாவெளியில் தங்கள் உடல்கள் கிடத்தி
அவர்கள் துயில் கொள்கிறார்கள்
அவர்களைச் சுற்றிச் சுற்றி வந்து
முகர்ந்து பார்க்கிறது தனது பெருங்காதலால்
தீண்டுமின்பம் காணமுடியாது
நாயாய் இளைத்த நிலா
காலங் காலமாய்
பொய்யான ஆறுதல் மொழிகளையே சொல்லிச் சொல்லி
இக் குடும்பத்தை
ஏமாற்றிக் கொண்டேயிருப்பது அன்பாமோ என்று
யாரோ சுயவதை தரும் வற்றாத கண்ணீருடன்
அழுதுகொண்டிருக்கிறார்கள்
இந்த நிலாவெளியில்
*

**இறுதியாண்டு மாணவி...**

இறுதியாண்டு மாணவி
இன்ஃபேண்டாவின்
பேரன்புமிக்க இதயம்
கவிதையில் ஆழ்ந்தது ஒரு கணம்
குயில் கூவும் மரங்களாடும்
கல்லூரி வளாகத்தை வெறித்தபடி
இவ்வுலகும் ஒரு நாள் நிச்சயம்
ஒரு கல்லூரி வளாகமாகும்
அழியாத இளமையும் அழகும் ஆங்கு
ததும்பும்
மனிதர்கள் அனைவரும்
மாணவர்கள் என்றே அழைக்கப்படுவர்
அங்கே அறியாமையே இருக்காது
தேவையற்ற அறிவுகளும் இருக்காது
காதலே இருக்கும்; ஒருவரை ஒருவர்
உடைமை கொள்ளுதல் இருக்காது
ஆகவே சுரண்டல் இருக்காது
குழந்தைகள் உண்டு ; ஆகவே
கொள்ளை கொள்ளையான இன்பங்கள்
உண்டு
அழகு கொஞ்சும் அவ்வின்ப வீட்டை
குழந்தைமையும் காதலும் கற்றலும்
பேணுவதால்
அச்சமிருக்காது; ஆகவே
கடவுளிருக்க மாட்டார்

ஆகவே மதங்களிருக்கா.
மனிதர்களிடையே
பிரிவினைகள் இருக்கா. ஆகவே
வருத்தும் பிரச்னைகள் இருக்கா
இருப்பதெல்லாம் இயற்கை மட்டுமே
கண்ணீரும் இரத்தமும் கண்டிரா
மாணவர்கள் மட்டுமே
*

**ஈரமண்ணின் இதயப் பசும்வெளி...**

ஈரமண்ணின் இதயப் பசும்வெளி
எங்கும் நம் கவனத்தை ஈர்ப்பதற்கே
கால காலமாய்க் காத்திருப்பதே போலும்
இல்லையில்லை எக்கரிசனங்களும்
இல்லாதவர்களே நாங்களென்பது போலும்
விவரிக்க வொண்ணாத் திவ்ய ஒளியில்
விதவிதமாய்க் காட்சியளிக்கும்
நூறு நூறு உயிர் எழில்கள்
நிர்மலமான நீலவானிற் சில கொக்குகள்
நீர் நிலையின் நாணற் புற்களிடையே
நீந்தக் கொடுத்துவைத்த வாத்துகள்
நீர்க்கோழிகள்
நீர்ப்பரப்பில் விளையாடும் சில பூச்சிகள்
கண் விழித்த தாமரைகள்
தன்னுள் யாரோ இறங்கிக் குளிப்பது
உணர்ந்து
களிப்பெய்தி
நீரசைவும் ஒளியும் சேர்ந்தாடும் நடனம்
வெப்ப வெளியும் நீர்நிலையும்
தீண்டுமின்பக் காதலினால்
இயற்கைவெளி மேனியெங்கும்
சிலிர்த்திருக்கும் காதல் மணம்
குளிர்ச்சியை அள்ளிவரும்
குளத்துக் காற்றை உபசரித்து
உட்காரவைத்து

நெக்குருகும் ஆல் நிழலில்
துயரிருப்பாய் ஒரு மனிதன் தமிழ் மணவாளன்.
அவனெதிரே நீரில் திளைத்துக் குளித்துக்கொண்டிருக்கும்
அவன் பெண் கனிமொழி,
எதையுமே உலகம் இழந்து விடவில்லை
என்பதுபோலும் ஒரு சிரிப்பைக் கொண்டுள்ள
கனிமொழி
*

**கடல் கொண்டுபோன நிலப்பரப்பு...**

கடல் கொண்டுபோன நிலப்பரப்பு
வற்றி மறைந்துபோன ஆறு
அழிந்துபோன நாகரிகங்கள்
தரைமட்டமாகிப் போன கட்டடங்கள்
மறக்கடிக்கப்பட்டு விட்ட தொழில்
நுட்பங்கள்
சேகரிக்கப்படாது அழிந்துபோன நூல்கள்
இவைதாம் நம் துயருக்குக் காரணமா?
இன்றைவிடப் பண்டே நம் நிலைமை
மாண்புமிக்கதாய் இருந்ததாய்
எண்ணி எண்ணி மாய்வதேனோ?
இயற்கைச் சீற்றத்தாலும்
பகைவர் படையெடுப்பாலும்
வேற்றவர் கலப்பாலும்
போட்டி பொறாமைகளாலும்
அழிந்து போனவையே
அபூர்வமான நம் பண்பாட்டுச் செல்வங்கள்
என்பது உண்மை யெனில்
அரற்றுவதை விடுத்துப்
பேணுமொரு காதலினாலன்றோ
பூக்க வேண்டும் பண்பாடும்
பண்பாடுசார் தொழில் நுட்பங்களும்!
உழக்குக்குள் கிழக்கு மேற்கா
என்கிறது பிரம்மாண்டம்
எல்லா ஊற்றுக்களையும்

தன்னுள் கொண்டதுவாய்
எப்போதுமிருக்கிறது
வற்றாத பேரியற்கை.
கானலையும் கற்றலையும்
தொலைத்துவிடா மனிதன் முன்னே
ஒளிர்ந்து கொண்டுதானிருக்கிறது பூமி
ஒருசர்வதேசப் பல்கலை
மாணவப் பார்வையில்!
*

**காதலென...**

காதலென
ஒருவரையொருவர்
பற்றிக்கொள்கின்றமை
காதலில்லையா?
அழகான ஒரு பெண்
அவன் பார்வையைக் கண்டு
அருவருப்பும் அச்சமும் கொண்டு
விலகியதுதான் என்ன?
அட! யாரிந்தப் பேரழகி
என் வியப்பும் மகிழ்வுமாய்
பார்த்து நின்ற ஒருவனைக் கண்டு
அகம் மலர்ந்து
அவன் மீது ஆசை கொள்வதும்
உடன் முகிழ்த்த வெட்கமும்தான் என்ன?
*

**அவர்கள்...**

அவர்கள் தங்கள் ஒரே வீட்டிலிருந்து
தெருவாசலில் கால் வைத்ததுமே
இரு கரையிலுமிருந்த மரங்களெல்லாம்
பரவசம் கொண்டு
மோகவெறி மிக்க தங்கள் நிழல்கள் மூலம்
அவர்களைத் தீண்டித் தீண்டி
வியப்பின் ஆனந்தாதீதத்தை
அடைந்துகொண்டிருந்தன.
பறவைகளும்
சிறகடிப்பும் அதிர்குரல்களுமாய்ச்
சேர்ந்துகொண்டன
ஒருத்தி, எத்தகைய பெருவலியும்
பேரழகும் வாய்ந்த ஆண்மகனானாலும்
சரி,
அவளருகே வந்து நின்றால்
அவளுக்குப் பணிசெய்ய வந்தவனேபோல்
தான்
தோற்றம் கொள்ளும்படியான
மீ மாண்புப் பேரழகு கொண்டிருந்தாள்.
மற்றவள் காண்பார் எவரையும்
இல்லாமற் செய்துவிடும்
தூய காட்டுமலர் போன்றும்
நல் இளமையில் குழந்தைமையுமான
பேரெழில் கொண்டிருந்தாள்
மானுடனால் உடைமை கொள்ள இயலாத

இருவரும் அவ்வீதியில் இணைந்து நடந்துகொண்டிருந்ததை
இமைக்காமல் பார்த்துக்கொண்டிருந்தேன்
யாருமறியாத இரகசியம் ஒன்றைக்
கண்டு கொண்டவனைக் குறித்தும்
அவன் நிலைமையைக் குறித்தும்
அறிந்து கொண்டவர்களைப் போலும்
அவனால் தீண்டப்பட்டு விட்டவர்களே போலும்
தங்களுக்குள்ளே பேசி முறுவலித்தவாறு
இரக்கமற்றுக் கிளுகிளுத்தவாறு
தங்கள் பாதையில் நடந்துகொண்டிருந்த
அவர்களும்
விக்கித்து நிற்கும்படியாய்
திடீரென்று
அவ் வீதியில் குண்டு வீச்சும் துப்பாக்கிச் சூடுமாய்
தோன்றி நின்றது
அந்தத் துயரம்!
*

**வெளியே காட்டிக் கொள்வதேயில்லையெனினும்...**

வெளியே காட்டிக் கொள்வதேயில்லையெனினும்
அவள் கணவன் எப்போதும்
அவளுக்கோர் துயரக் கனலாகவே இருப்பதேன்?
நூற்பாலைக் கூலி அவன்
தலைமைக் கணக்கன் என்று சொல்லி
அவளைத் திருமணம் செய்து கொண்டதைக்கூட
ஆழமான கசப்பிற்குப்பின்
அவள் மன்னித்துவிட்டாளே
அவள் தன் பணி அனுபவத்தில் எதிர்கொண்ட
அதிசயமான மக்கு மாணவன் ஒருவனைப் போலவே
இருந்தான் அவன்.
அ என்னும் எழுத்தை
அந்த ஓராண்டு முழுவதும்கூட
அவளால் அவனுக்குக் கற்பித்துவிடமுடியவில்லை.
எப்போதுமே அவன் அவள்முன்
பரிதாபமாக முழித்து நின்றான்.
அவனுக்கும் தேர்ச்சி கொடுத்து
அடுத்த அடுத்த வகுப்பிற்குத் தள்ளிவிடும்

கருணைமிக்கதாயிருந்தது
நடைமுறை நிர்வாகம்
அவளுக்கும் அவன் மீது
கருணை உண்டுதான் எனினும்
தாள முடியாத இத்துயரமும்தான் எதனால்?
*

**குழந்தைப் பருவத்தின் நிழலில்...**

குழந்தைப் பருவத்தின் நிழலில்
மண்ணும் இலைகளும்
மலரிதழ்களும் மகரந்தப் பொடிகளும் கொண்டு
அவர்கள் சோறுபொங்கி விளையாடிக்கொண்டிருந்தார்கள்.
சுகு! கடைக்காரனாக இருக்கச் சொன்னால்
அவன் ஏன் ரொம்பக் கூச்சப்படுகிறான்?
என்று குசுகுசுத்தபடி வினவினாள்
ஜானகி தன் தோழியிடம்.
ஆம்பளைப் பையன்தானே கடைக்காரனாக இருக்கணும்!
அவன் அந்தத் தெய்வீகக் குஞ்சுகளைப் போலின்றி
ஆண்பையனாக இருக்கவே நொந்தானா?
அவர்கள் விளையாட்டிலும்
அவன் ஒரு வியாபாரியாக இருக்கவே நொந்தான?
அவனைத் துன்புறுத்தியதுதான் எது?
ஏன் சுகு, அவன் ரொம்பப் பாவம் போல இருக்கிறான்?
நல்ல பையன்
இருவரது கண்களிலும்தான் என்ன ஒளி!

*

**தளும்பும் கண்களுடன்...**

தளும்பும் கண்களுடன்
அவனை நினைக்கும்போதெல்லாம்
அவளுக்கு அந்தக் கிறுக்குப் பிச்சைக்காரி
ஞாபகம் வருகிறது
தளராத மதர்த்த முலைகளுடன்
எப்போதும் உடம்பெங்கும் ஈக்கள் மொய்க்க
கழுவப்படாத கழிவு உறுப்புகளின்
நாற்றமும் மலச்சேறும் பொறுக்குகளுமாய்
கடைத்தெரு இரவின் நடைபாதையில்
ஒண்டி உறங்க முயலும்
பரிதாபமிக்க பிறவி
அவளை அடைந்தேயாக வேண்டுமெனில்
மூக்கைப் பொத்திக்கொண்டு அண்மித்து
அருவருப்படையாமல் தொட்டு
ஆடைகளை அகற்றித் தூர எறிந்து
நீர்நிலைக்குத் தள்ளிக் கொண்டுபோய்
மல்லுக்கட்டியவாறு தூய்மைப்படுத்தி...
அப்பப்பா! ஒருவனுக்கு
எத்தகைய வேட்கையும் பொறுமையும்
வன்மையும் வேண்டும் அதற்கு!
அவன் மீதுள்ள கருணையினாலா
தன் வலுவின்மையை உணர்ந்த
கழிவிரக்கத்தினாலா
அவள் கண்கள் தளும்பி
வழிந்துகொண்டிருக்கின்றன இப்போது?

*

**பூமியெங்குமுள்ள கடற்கரையெங்கும்...**

பூமியெங்குமுள்ள கடற்கரையெங்கும்
மனிதர்கள்
தன்னலமிக்க இளைப்பாறல்களோடும்
கவலைகளோடும்
உலவிக் கொண்டிருக்கின்றனர்
கடல்
இடையறாது
அழைத்துக்கொண்டேயிருப்பது
குழந்தைகளைத்தாமா?
பூமியெங்குமுள்ள கடற்கரையெங்கும்
பெற்றோர்களின் விரல்களினின்றும்
தம்மைக் கழற்றிக்கொண்டோடிப் போய்க்
குழந்தைகள்தாம் விளையாடிக்
கொண்டிருக்கின்றனர்
குழந்தைகள் தங்கள் பேரன்னையைக்
கண்டுகொண்டவர்கள் போல்
கடலிடம் விளையாடுகிறார்கள்
அவர்களைத் துயர் தீண்டியதில்லையா?
அக் குழந்தைகள் தங்கள்
குழந்தைமையைக்
காத்துக் கொண்டதெப்படி?
காத்துக்கொள்ள முடியாத துர்ப்பாக்கியக்
குழந்தைகள்தாமோ
நிலமெங்கும் தம்மைத் தாமே கூறுகட்டிச்

சிதைத்துக் கொண்டு வாழும் இம் மனிதர்கள்?

தாங்கள் இன்னார் என்பதை ஏற்பதற்கு முன்னன்றோ

குழந்தைகள் குழந்தைகளாக இருந்தார்கள்?

எத்தனை கண்ணீர் இரத்தம் சிந்தல்களுக்குப் பிறகும்

தம் துயரையும் துயரின் ஊற்றுக்கண்ணையும்

கண்டடையாத இம் மனிதனை

எவ்வாறு அழைப்பது?

*

**தான் ஈன்ற...**

தான் ஈன்ற குழவியின்
தகப்பன் யார் என்றறறியாள்.
தனக்கும் அது சொந்தமில்லாததைப் போலவே
அவள் அதைப் பார்த்தாள்
பாதுகாப்பற்றோ பத்திரமாகவோ
பூமியெனும் வீட்டில்தான் தான் வாழ்ந்துவருவதாகவும்
அவள் எண்ணினாள் போலும்.
ஏதாவது ஒரு நிழலிலமர்ந்தபடி
எப்போதாவது சிறிது அமுதூட்டுகிறாள்
அவள் மார்பைப் பற்றி இழுக்கும் குழந்தை
அதில் பாலின்றி அழும் பெரும்பாலும்
சுரணையற்றிருக்கும் அவளைப் பார்த்து
பதறிப்போன சக உயிரி ஒன்று வந்து
குழந்தையைக் காப்பாற்றியதோ, குழந்தை பிழைத்ததோ!
அவளுக்குப் பிரக்ஞையூட்டும் முகமாய்த்தான்
குழந்தை அவளைப் பார்த்துப் பார்த்துக்
கரைந்தும் அபூர்வமாய்ச் சிரித்தும்
களைத்துக் களைத்துத் துவண்டது
தானேயறியாது
தான் சாகும்வரை செய்யப்போகிற தொழிலைத்

தீர்க்கமாய்த் தேர்ந்துகொண்ட ஒரு கவிபோல

**பறவைகள் காலூன்றி நிற்கும் பாறைகள்**

தேவதேவன்

(2007)

## 1. ஒரு நதிக் கரையோரம்

ஆடைகள் கழற்றிவைக்கும் கல்மண்டபம்
சகிக்க முடியாதபடி அசுத்தமாக இருந்தது.
ஆற்று நீர் குளிக்க உகந்ததாக இருக்கிறதா-
யோசிப்பவர்களாய் எட்டிப் பார்த்தார்கள் அவர்கள்.
பூஜை மணியோசையும், பறவைகள்
அதிர்ந்து கலையும் ஒலியும் கேட்டன.
நடை சாற்றப்படுவதற்குள்
கோவிலுக்குள் நுழைந்துவிட வேண்டிய
அவசரத்திலிருந்தார்கள் அவர்கள்.
திடுக்கிடும்படி
நதிக்கரை மரத்தில் ஒரு பறவை
தன்னந்தனியாய்
தன் உயிரே போவது போல்
ஓர் அபாய அறிவிப்பைப் போல்
உறுதிமயமான ஒரு குரலில்
விடாது கத்திக்கொண்டே இருந்தது.
நின்று, பாறைகள் நடுவே களகளவென்று
மூச்சுவிடாமல் பேசிக்கொண்டேயிருந்தது நதி.
மனிதர்களால் செவிமடுக்கப்படாதவை போல்
துயர்கனத்துக் கொண்டிருந்தன,
அங்கு நிலவிய மவுனமும் ஒலிகளும்.

## 2. நிலாவொளியில்

நிலாவொளியில்
பேரளவாய் சூழ்ந்துநிற்கும்
இருண்ட இம்மரங்களிகளில்
கருணையின் கார்மேகச் செழுமை.
அது, தன் கிளைகளுடனும் வேர்களுடனும்
காட்சியளித்தலல்லவா புதுமை!

**3. தெய்வீகம்**

அன்றொருநாள்
அதிகாலைத்
தோட்டத்துள்ளே
பூஜைப் பூக் குடலை
நழு
வி
வி
ழு
ந்
தக ல
ஒரு பூவின் அழகு.

## 4. மெய்யாகவே

சொல்லொணாப் பேரழகாய்
ஆகச் சிறந்த பரிசொன்றின்
அற்புத ஒளியாய்
கண்முன்னே புன்னகைக்கும்
அக்காலைப் பொழுது.
மயக்கமோ
மாயத்தோற்றமோ
அல்ல
மெய்யாகவே
மெய்யாகவே
கதறி அழுதுகொண்டிருந்த
ஆயிரமாயிரம் ஆண்டுத்
துயரிரவின்
உறுதி இறுதியேதான்!

## 5. அழகுக் குறிப்பு

‘வாடா மலரொன்று
எப்போதும் காத்துக்கொண்டிருக்கிறது
தன் காதலன் வரவெண்ணி...’
அன்ற அந்த அதிகாலைத்
தோட்டத்துள் ஒரு மலர் முன்
கூடுதலாய் சில கணங்கள்
நின்றுகொண்டிருந்தபோது,
அவர் பின்னொரு அரவம் கேட்டது:
“(பெண்களுக்கான)
அழகுக் குறிப்புகளில் அது ஒன்று, அப்பா”
என்றாள் அவர் மகள்.

**6. சாரணை மலர்கள்**

ஒளிரும் வான்நோக்கிய புன்னகையோ,
இருள் வேளைகளில்
ஒலிக்கும் தேவதைகளின் சொற்களோ,
காதல் தெய்வத்தின் பட்டுக்கன்னங்கள்
தொட்டுணர முன்னும் வேட்கையோ?
பகலில் பரிதியையும்
இரவில் விண்மீன்களையும்
இமைக்காது பருகிக் கொண்டிருக்கும் காதலோ
வானம் தன் முகம் பார்க்க விரித்த ஆடிக்குள்ளிருந்தே
அவன் முகம் நோக்கி அண்ணாந்த மோகமோ,
தனது மாசுக் கேட்டையும் துயர்களையும்
ஒரு கணம் மறந்து நின்ற
பூமியின் நெகிழ்ச்சியோ
தூய தன் மகிழ்ச்சியோ
நீர்க்கரைகள் தோறும் தோன்றும் உயிரொளியோ
ஒளி ஊடுறுவும்படியாய்ப் பூத்த
வெண்மையும் மென்மையும் கொண்ட
இந்தச் சாரணை மலர்கள்?

**7. நதி**

உன் பூம்பாதம் எண்ணியன்றோ
இப் பொன்மணலாய் விரிந்துள்ளான் அவன்!
தன்னிலிருந்து தோன்றி
தன்னைவிட்டுப் பிரிந்து
கடல் நோக்கி ஓடிக்கொண்டிருக்கும்
உன்னைப் பிரிய மனமில்லாமலன்றோ
உன் பாதையெங்கும்
பாறைகளாய் கூழாங்கற்களாய்த்
தொடர்ந்து வந்து அவன் நிற்கின்றான்!
உன்னால் தீண்டப்படாதிருக்கையில்
தகித்துக்கொண்டும்
பசுங்கரை மர நிழல்களில்
சற்றே இளைப்பாறிக் கொண்டுமிருக்கிறான்.
தீண்டப்படுகையிலோ
அடையத்தகுந்தனவற்றுள் எல்லாம்
அடையத்தகுந்ததினை
அடைந்து விட்டவனாய் ஒளிர்கிறான்.
நீயும்
காதல்தான் மெய்க் கடலமுதம் எனக்
கண்டு திரும்பினையோ என் கண்மணீ?
உன் மெய்சிலிர்ப்பும் புன்னகையுமாய் மலர்ந்தனவோ
நாணல்களும் தாமரைகளும்?

உனது காதற்களிப்பின் பேரின்பமோ,
என் நெஞ்சை வருடுவதுபோல்
காற்றிலசைந்தாடியபடி
ஒளி ஊடுறுவும் ஒளிக்கதிர் கூட்டமாய்ச்
சுடர்விடும் இச் சாரணை மலர்கள்?
உங்களின் அருள் நீராட வேண்டியோ
உங்களுக்குள் குதிக்கின்றனர்
எம் காதலின் குழந்தைகள்?

## 8. பொய்ப் பகல்கள்

சூரியன் சரிந்து கொண்டிருந்தான்
கடலாலும் மரங்களாலும் சூழ்ந்த
தீவு இருண்டுகொண்டு வந்தது.
எது ஒன்றும் இத்துயர் முழுமையை
எதிர்த்துக் குரல் எழுப்பியதாகத்
தெரியவில்லை.
பேரளவான ஏற்ப, மவுனமாய்
நிகழ்ந்துகொண்டிருப்பதைக் கண்டு
வதையும் ஓர் இதயத்தை
இடையறாத கடலலைகளின்
கொந்தளிப்போசை மாத்திரமே
சற்றே இதமளிப்பதாய்த் தழுவி
ஆற்றுகிறது.
கடலோரம், அக் கடலையும்
உட்கொண்டு நிற்கும்
வானின் பிரம்மாண்டமான விரிவு
அத்துயரத்தையும் ஆறுதலையும்
முடிவற்றுக்
கூடுதலாக்கிக் கொண்டேயிருக்கையில்
கூடும் முடிவின்மையெனும் முடிவில்தான்
இனியொரு இன்பமும் இன்பவலியும்
மறைந்து நின்கிறதா?
நட்சத்ர ஒளிகளின் கீழுள்ள
கடல் மணற் பரப்பும், காற்றும்
மனிதனைத் தீண்டித் தீண்டித் தகிக்கும்

தூய நீராட்டல்கள் எதனாலும்
பயனில்லையோ?
ஆற்றொணாததோ
அன்பின் தோல்விகளாற் துவண்டு போன
வேதனைகள்?
மண்ணை ஒரு கணமும் பிரியாது
ஆவேசமாய் சூழ்ந்து நின்றபடி
எச்சரித்துக்கொண்டே இருக்கிறது
கடலின் ஆதிப் பெருங்குரல்.
எத்தனைப் பொய்ப் பகல்கள்தான்
வந்து வந்து போயின!

**9. காவரியும் காணாமற்போன படித்துறைகளும்**

முந்தின நாள்தான்
தன் படித்துறை ஒன்றில் இறங்கி
தன்னில் திளைத்து நீராடிச் சென்ற
அந்த மனிதனை – அவனைப் போலவே
நீயும் மெய்மறந்து
அப்படியே தன்னுள்
ஆழ்ந்துவிட்டனையோ ரொம்ப நேரம்?-
இப்போதுதான் இவ்விரவில்
திடீரென்று நினைத்துக்கொண்டவளாய்
பொங்கி எழுவதென்ன காவேரி?
நாசி விடைக்க
உன் மேனியெல்லாம்
அவன் மணம் வீசக் கண்டவளாய்
நீ உன் மீதே மையல் கொண்டு
படுக்கை கொள்ளாது புரள்கிறதென்ன?
சொலற்கரிய இன்பமோ?
சொன்னாற் குறைந்து போமோ?
உனது இன்பவெள்ளம்
புயல் மழை என வீசிப்ஃ
பாய்ந்து விரிந்து பெருகி
நிலவுகிறது எம் நிலமெங்கும் குளிர.
கண்மண் தெரியாத
உன காமப் பெருவெள்ளம்
வெட்கம் கொண்டு

மவுனம் சொட்டச் சொட்ட
வடிந்து கொண்டிருக்கும்
இப்போதாவது
நாணம்விட்டு
வாய்திறந்து சொல்லேன்:
யார் அவன்? என்ன விஷயம்?
(யாரிடமும் சொல்லமாட்டேன்.
என்னிடம் மட்டும் சொல்: நான் தானே?)
சொன்னால்
உன் அழகு குறைந்து விடுமென
அஞ்சுகிறாயோ?
உன் உள்ளூறைந்து நிற்கும் அவனே
ஒளிரும் நின் பேரழகின் ரகசியமோடி
கள்ளீ,
காவேரி!

## 10. வீடு

வீடு
பாதுகாப்பானது; ஆனால்
அன்பில்லாதது.
வெளி
பாதுகாப்பற்றது; ஆனால்
அன்பேயானது.
நமக்கு
அதுவும் வேண்டும்
இதுவும் வேண்டுமென்றால்
எப்படி?
நீங்களெல்லாம் நினைப்பது
போன்றதல்ல எங்கள் வீடு.
வெளிமழையின்
வெளிவெயிலின்
ஒரு சிறு குடை
எங்கள் வீடு.

## 11. பறவை என்றால் பறக்கணுமா?

சுற்றி மரங்கள் உரச
எமது கவிதைப் பட்டறையாய்க்
கனன்று கொண்டிருக்கும்
மொட்டைமாடிக் குடிலின்
முழு நீளச் சாரளக் கழியில்
இவ்வுலகைக் காப்பாற்றிவிடும்
பேராற்றல் கொண்டுவிட்டதுபோல்
அமர்ந்திருந்தது ஒரு ஜோடிக் காகம்.
ஒன்றை ஒன்று நோக்காமல்
எங்கு நோக்கிக் கொண்டிருக்கிறோம் என்னாது
தம்மைத் தாமே நோக்கிக் கொண்டிருக்கும் செயலால்
ஒன்று போல் காணும் காகங்கள்.
பெருஞ் செயலொன்றின்
உயிர்ச் சிற்பம்.
பறவைகளுக்கேயுரிய
பதற்றம் சிறிதுமின்றி
அவ்வளவு பக்கத்தில் அமர்ந்துகொண்டு
என்னை உற்று நோக்காதது போலவே
உற்று நோக்கிக் கொண்டிருக்கும்
மெய்மையின் இரு கண்கள்.
அல்ல;
இரு கண்கள் கண்டுகொண்டிருக்கும்
மெய்மை.

சூழலினின்றே எழும்பாது
சூழலைத் தாக்கும் ஓர் உக்கிரச்
செயல் எழுப்பும் பெருங்களம்.
பேரியற்கையில் நின்றெரிந்து
கொண்டிருக்கும்
பேரியற்கை, இறை, தவம்,
ஆற்றல், அழகு,
காதல்.

**12. மழைத் தண்ணியின்றி...**

மழைத் தண்ணியின்றி
வறண்ட நிலம்
தன் உயிர் காக்கத் தவிக்கத் தொடங்கி
மேலும் வறண்டது.
மழையிலும் நீரிலுமாய்
தன் உயிர் செழித்து வளராததெண்ணி
மேலும் ஒரு படி வறண்டது.
மழையிலும் நீரிலுமாய்
செழித்துக் குலுங்கும் தூர நிலங்களெண்ணி
மேலும் மேலும் ஒரு படி வறண்டது.
தன்னைப் போலவே தன் அருகில்
வாடும் நிலம் நோக்கும் பார்வையின்றி
அதன் ஆழ்கிணற்று
விழியீரமும் வறண்டு போனதே.
தன்னுயில் காக்கவே தகிக்கத் தொடங்கி
மேலும் மேலும் வறண்டு கொண்டேயிருக்கும்.
அதனை நோக்கி
உன் உயிர் ஒரு நாளும் மரிப்பதில்லை என்று
எப்போதாவது சொல்லப் போகும் மழைத்தண்ணி அன்றி
ஆறுதலையும் புத்தியையும்
யார் அதற்குச் சொல்லக்கூடும்?

## 13. ஏனோ? என்ன அவசரமோ?

நான் மூச்சிறைத்து நிற்கையில்
தன் அருள் முகத்தின் கனிவு காட்டியவாறு
மலை முகட்டினின்றும்
கைநீட்டிக் காத்திருக்கிறார்கள் யாரோ.
என் முதுகை
ஆதரவாய்த் தொட்டும் தாங்கியும்
பொறுமையோடு
என் உடன் வந்து கொண்டிருக்கிறார்கள்.
உச்சியிலிருந்து சரிவில்
நான் இறங்க முயற்சிக்கையில்
அதற்காகத்தான் காத்திருந்தார்கள் போல்-
பேயோ, தெய்வமோ, இருவரும்
இணைந்தோ
பிடரி பிடித்து
அவசர அவசரமாய்த் தள்ளுகிறார்கள்
என்னை.

## 14. புதிய பேருந்து நிலையம்

ஒளியும் காற்றும்
வெள்ளமாய்ப் பொங்கிநிற்கும்
பேருந்து நிலையம் வந்து நின்றார்
புத்தர்.
வெளியினின்னும் வெளியைப் பிரிக்கும்
பக்கச் சுவர்களில்லாத
தியான மண்டபம்.
சுரணையை முழுங்கடிக்காததும்
போர் வித்துக்களை விதைக்காததும்
வாழ்வை விட்டுத் தள்ளிநின்று
வாழ்வைக் கொன்றழிக்காததுமான
கோயில்.
‘வானமும் பூமியும்’ எனும் சிற்பம்
பிரக்ஞையை அழிக்காததும்
சொற்களால் மெய்மையைச்
சிதறடிக்காததும்
வெறும் பொழுதுபோக்காகி விடாததுமான
உன்னதக் கலைக் கட்டடம்.
பிரக்ஞையற்றும் சுரணையற்றும்
வந்தும் நின்றும் போயும்
கொண்டிருக்கும் மனிதர்கள்
நீங்காது நிற்கும் துயரங்கள்.

## 15. நிலக் காட்சி

மிகப் பெரியதோர் இலட்சிய நன்மையே
பிரமாண்டமான மெய்மையும்
காதற் பெரும் இருப்பும்
இப் பேரியற்கையின் எழிலுமாமோ?
உரையாடல்களில் புகுந்து
கண்களின் நீர் துளிர்க்க
உடல்கள் தத்தளிக்கச் சிரிக்க வைப்பதும்
முடிவிலாத
இலட்சியப் பூர்த்தியொன்றின்
கொண்டாட்டம்தானோ?
இரவோடு இரவாய்
ஊர் வந்து தூங்கி விழித்தபோது
பட்டென்று இழையறுத்த
அசம்பாவிதம்போல்
எட்டி விலகி நின்றது
ஏமாற்றமான ஒரு விடியல்.
எனினும் அப்போதும் அவனைச் சுற்றிக்
குன்றாத அழகு நிலக் காட்சி
சற்றே விலகித் தகிக்கப் பார்க்கும் வெளி.
எனினும் திடீர் திடீரென்று வரும்
கற்றை மென்காற்றலைத் தீண்டலில்
மீக்குளிரும் கம்பளியும் போலும்
காதற் பெரும் இருப்பின்
ஆவி தொட்டாளவிய நெருக்கமும்
தழுவலும்.

## 16. கண்டதும் விண்டதும்

மலையுச்சியேறியவன்
தான் கண்டு கொண்டதை
ஒரு கோயிலென வடித்துவிட்டுக்
கீழிறங்கினான்.
கோயில் சென்றவன்
உதட்டுப் பிதுக்கலுடன்
கைவிரித்தபடி
கீழிறங்கினான்.
கீழே
ஒரு புல்
அய்யோ, அது
காற்றிலா அப்படித் துடிதுடிக்கிறது?
ஒளியிலா அப்படி மினுமினுக்கிறது?
அங்கே தலைப்பாகையும்
அரையுடையுமாய்ச்
சுள்ளி விறகு சேகரித்துச்
செல்லும் ஒரு மனிதனைக்
காதலுடனும் கவலையுடனும்
கண்டு கொண்டமையோ அது?
விண்டுரைக்க முடியாத
மெய்மையின் சொற்கள்தாமோ
இந்த மவுனப் பிரமாண்டமும்
பேரியற்கையும்
இந்த மனிதனும்?

## 17. தேன்சிட்டு

பிச்சு பிச்சு என்று
அது என்னைத்தான் கூப்பிடுகிறது
என்றேன்.
இல்லை, சிப்பீ சிப்பீ என்று
சும்மாத்தான் கத்துகிறது
என்றான் நண்பன்
நன்றாய் கவனித்துக் கேட்ட பின்னும்.
என்ன கவனிப்போ அது!
முத்து முத்து என்று
அது என்னைத்தான் அப்படிக் கூப்பிடுகிறது
என்று அவன் சொன்னால்
ஏற்றுக் கொண்டுதானே இருப்பேன்!
எத்தனை எளிதாகியிருக்கும் நம் செயல்பாடுகள்?

## 18. இனிப்பது

“அதில் என்ன ஊற்றா இருக்கிறது”;
இனிக்கவும் அங்கே என்ன இருக்கிறது;
வெறும் சதை!”
என்று என்னைக் கிண்டினாள்
என் காதலி.
முத்தத்தில் இனிப்பது
வாழ்க்கையல்லவா!

## 19. என்ன ஒரு அழகு!

என்ன ஒரு அழகு!
என்ன ஒரு மதிநுட்பம்!
இருள் கவியத் தொடங்கவும்
சாலையில் செல்லும்
ஒவ்வொரு வாகனங்களும்
தத்தம் விளக்கேற்றிக் கொண்டமை!

## 20. தீண்டுமின்பம்

காடு கரைகளிலும்
கழனி வெளிகளிலும்
உலவும்
காற்று வந்து அவனைத் தீண்டுகிறதே.
பார்க்கும் இடத்திலெல்லாம்
அவன் படும்
பாடுகளையெல்லாம் பார்த்தவைகளின்
பற்று மிகுந்துருகும்
பார்வை வந்து தீண்டுகிறதே.
கேட்கும் ஒலியிலெல்லாம்
கேட்கிறதே
அவன் நலன் வினாவும் பெருங்கருணை
அவனைத் தீண்டி
தீண்டுமின்பம் துய்த்தவரோ
தீயினின்பம் துய்த்தவரோ
தீண்டாமை இயற்றியது?
விரவை, தீ சுட்டதுவோ
உதறி உதறித் தீராமல்
வாய் கொண்டு தீண்டி ஆற்றுகிறார்?

## 21. ஆற்றங்கரையோரப் பாறைகளின்மேல்

ஆற்றங்கரையோரப் பாறைகளின்மேல்
அமர்ந்திருக்கும்
இக் கல் மண்டபங்கள் தாம்
எத்துணை அழகு!
எத்துணை எளிமை!
எத்துணை உறுதி!
எத்துணை தூய்மை!
பூஜை வேண்டாமல்
விக்ரகங்கள் வேண்டாமல்
குழந்தைகள் துளைந்து
கும்மாளமிட்டுக் கொண்டிருக்கும்
இந்த ஆற்றினைப் பார்த்துக் கொண்டேயிருப்பதற்கோ
அமர்ந்து விட்டன இக் மண்டபங்கள்
இங்கே நிரந்தரமாய்?
சுற்றுச் சுவர்களில்லாத
அதன் உள்வெளிகளில்
'உள்ளொன்றும் புறமொன்றுமி'னால்
உருவாகும் துயரமேதுமின்றிச்
சுழன்று கொண்டிருக்கும் சக்கரத்தினைக்
கண்டு நின்றனரோ புத்தர்?

## 21. ஆற்றங்கரையோரப் பாறைகளின்மேல்

ஆற்றங்கரையோரப் பாறைகளின்மேல்
அமர்ந்திருக்கும்
இக் கல் மண்டபங்கள் தாம்
எத்துணை அழகு!
எத்துணை எளிமை!
எத்துணை உறுதி!
எத்துணை தூய்மை!
பூஜை வேண்டாமல்
விக்ரகங்கள் வேண்டாமல்
குழந்தைகள் துளைந்து
கும்மாளமிட்டுக் கொண்டிருக்கும்
இந்த ஆற்றினைப் பார்த்துக் கொண்டேயிருப்பதற்கோ
அமர்ந்து விட்டன இக் மண்டபங்கள்
இங்கே நிரந்தரமாய்?
சுற்றுச் சுவர்களில்லாத
அதன் உள்வெளிகளில்
‘உள்ளொன்றும் புறமொன்றுமி’னால்
உருவாகும் துயரமேதுமின்றிச்
சுழன்று கொண்டிருக்கும் சக்கரத்தினைக்
கண்டு நின்றனரோ புத்தர்?

## 22. கனவு பூமி

விழித்தெழுந்தபோது கண்ட காட்சியைக்
கனவு என்று சொல்வதெப்படி?
கனவுக்குள் விழித்தெழுந்திருக்கிறேன்
என்றா சொல்கிறீர்கள்?
அப்படியானாலும் அது நல்லதல்லவா?
கனவிலிருந்தும் விழித்தெழுவதற்கான
நற்குறியல்லவா அது?
அன்று
மழை வெயிலுக்கு வரிந்த
குடைகள் போல் காணப்பட்டன,
மனிதர்களின் எல்லா இல்லங்களும்.
புரிதல் மிக்கு பேணப்படும்
பிரம்மாண்டமான வீட்டுத் தோட்டம் போல்
காணப்பட்டது இயற்கைவெளி.
ஒருநாளுமில்லா பெருமகிழ்வால்
பூரிப்படைந்தது போல் பசேலென்று
துளிர்த்துக்
குலுங்கிக் கொண்டிருந்தன தாவரங்கள்.
காலம் அதுவரை அனுபவித்தேயிராத
பாட்டும் நடனமும் ஓவியமுமாய்த்
திகழ்ந்தன
பாறைகளும் நதிகளும் பறவைகளும்
பூக்களும்.
பறவைகள் துணுக்குறும்படியான
வழமையான பூஜைமணி ஓசைகளற்று

ஒரு புத்துலகை அடைந்திருந்தன,
கோயில், பள்ளிவாசல், தேவாலயக் கட்டிடங்கள்.
கண்முன்னே ஆட்டபாட்டங்களுடன்
துள்ளிக் கொண்டிருக்கும் பேரக்குழந்தைகளைக் கண்டு
என்றுமாய் மரணத்தை விரட்டிவிட்ட பெருமலர்ச்சியுடன்
அமர்ந்திருக்கும் பேரியற்கைப்
பெருந்தொன்மையின் புதுமகிழ்ச்சி.
இயற்கைச் சுற்றுலா வரும் குழந்தைகள்
இனி கண்ணாம்பூச்சி விளையாடுவதற்கு மட்டுமே என்று
தனது அர்த்தமின்மையை எல்லாம் துறந்து,
பேணுமொரு தூய்மையும் வெறுமையுமாய்,
வெளி ஒளிர, காற்றும் களிப்பெய்த
தன்னை முழுமையாய் அர்ப்பணித்துக் கொண்டுவிட்ட
பழைய கோயில்களின் புத்தம்புதிய கோலம்.
இதுவரையிலும் பூமி கண்டிராத நெகிழ்ச்சி.

## 23. மரம்

உனது பாடுகளையோ
ஆறாத ரணங்களையோ
அவ்வப்போது
இலைகள் திறந்து காட்டுகிறாய்?
தாங்கொணாத வேதனையானதெப்படி
நமது வாழ்வு?
இக் கடுங் கோடையில்
தளர்த்துப் பொங்கி
பூத்துக் குலுங்கி
ஒரு புது மென்காற்றையும்
எனை நோக்கி வீசும்
உனது காதல் மட்டும் இல்லையெனில்
என்னாவேன் நான், என் தெய்வமே!

**24. கப்பன் பார்க், பெங்களூர்.**

அத்தனை நெருக்கடி மிகுந்த
அத்தனைப் பெரிய நகர் நடுவே
இயற்கை வெளி ஒன்றைக்
காத்துக்கொள்ளும் திட்டமோ
அந்தப் பூங்கா?
அருகழைத்துத் தழுவ நீண்ட
நூறு நூறு கைகளுடை மரமொன்றின்
சிமெண்டு பெஞ்சில்
ஏதோ ஒரு செயல்திட்டத்திற்குப்
பணிந்துவந்து அமர்ந்திருப்பவர்கள் போல்
மவுனமாக அமர்ந்திருந்தது ஒரு ஜோடி,
தங்கள் முழங்கால்மேல்
மூக்குரசும் குழந்தையுடன்.
எந்த ஒரு திட்டம் அது?
போர்களினின்றும் துயர்களினின்றும்
இவ்வுலகைக் காத்துவிடும் தீவிர அவசரப்
பெருந்திட்ட மொன்றின் முதல் வேலையாக
இருவருக்குமிடையே
ஓர் உச்சபட்ச அன்னியோன்யத்தை
உண்டாக்கிவிடும் நோக்கமோ?
அங்கு உள்நுழையும் ஒவ்வொருவரிடமும்
செயல்படத் துடித்துக் கொண்டும்
தோற்றுக் கொண்டேயிருக்கிறதும்
அதுவோ?

**25. கப்பன் பார்க், பெங்களூர்.**

ஒவ்வோர் கணமும் ஓரோர் திசை
திரும்பிய வண்ணமாய்
எக் காலத்தும் எத்திசையும்
எல்லோரை நீக்கியும்
நீண்ட நீண்ட கைகளேயான
ஒரு பெருமரப் பிரம்மாண்டம்
அந்தப் பூங்காவில்.
அதன் கீழ்
காதல் வேண்டியன்றோ
வந்து – இருந்து – எழுந்து
சென்று கொண்டிருந்தனர் மனிதர்.
அவனோ, அம்மரத்தின்மீதே
காதல் கொண்டவனாய்
வந்தமர்ந்திருந்தான்.
அம்மரத்தின் மகத்துவமோ
தன்மீதே தான் கொண்ட
காதலால் இயன்றிருந்ததறிந்தான்.

**26. மலர்கள்**

நம் பார்வைக்கே
ஏங்கி நிற்கின்றன
தொட்டால் வாடிவிடும் மலர்கள்.
வாடுமோ கல்லில் செதுக்கப்பட்ட மலர்;
காதற் பரிமாறக்
காதலாற் கொய்யப்பட்ட மலர்?
மலர்கள் சில பறித்தாலென்ன
யாதொன்றும் வாடாத
சொர்க்கம் அங்கே நிலவுகையில்?
காம்பு நீட்டி நின்ற ஒரு மலரோ
கடவுளாக்கியது அவனை?

## 27. இவ்வேளை

வாடாத, வாசமில்லாத
இச் செயற்கைப் பூக்கள்
நினைவூட்டிக் கொண்டிருக்க,
வாடி உதிர்ந்து மறைந்த மலர் நீ.

**28. திருமுகமும், வீதிக்குள் அடிவைக்கும் கோலமும்**

காற் கொலுசுகள், பறவைகள்
முணுமுணுக்கும் இலைகள்-
அனைத்து ஒலிகளும் மறைந்து
என் கைவளைகள் மாத்ரமே உயிர்த்து நிற்க
இமையா விழிப் பரிதி
துவங்கிய மெல்லொளியில்
இசைந்து அமர்ந்து
நான் என் முற்றத்திலிட்ட மாக்கோலம்-
கண்ணாடியில் பார்த்துக்கொண்ட என் முகம்!
என்றால்
வைகறைத் தெய்வமே! என் உயிரே!
மெய்சிலிரிக்கும் என் உடலன்றோ
இப் பூமி!

**29. பச்சைக் கிளைகள் நடுவே கருத்த பறவைகள் இரண்டு**

பறத்தலையும் தாண்டி
அளவிலா இவ்விண்ணிலும் பெரிதான
அன்பினைக் கண்டுவிட்டவர்கள் போல
இருந்தது
அவர்கள் அமர்ந்திருந்த கோலம்!
பேச்செல்லாம் முடிவிற்கு வந்துவிட்ட மவுனத்தில்
ஒருவர் அழகு மற்றவர் அகத்தில்தான்
உள்ளதென்பது போல
அருகருகே இருந்தும்
ஒருவரை யொருவர் பார்க்காதவர்களாய்;
பார்க்காதவர்களாயிருந்தும் பிரியாதவர்களாய்
அமர்ந்திருந்தார்கள் அவர்கள்!
தனித் தனியே தம்மைத் தாமே
ஆழப் புரிந்துகொண்டதனால் பூத்த மவுனத்தில்
அதுவே எங்குமாய் எதிரொளிக்கும்
வெளி பார்ப்பவர்களாய்
அமர்ந்திருந்தார்கள் அவர்கள்!
தம்மைச் சூழ்ந்துள்ள இயற்கையினைக்
கண்டு கொண்டதனால் பூத்த மவுனத்தில்
தம்மையே மறந்துபோனவர்களாய்
அவர்கள் அமர்ந்திருந்தார்கள்,

அவ்வப்போது அனிச்சையான
சிறு சிறு உடலசைவுகள் தவிர
ஏதொன்றும் செய்யாத
அதிசயமாய் இருந்தார்கள் அவர்கள்!

## 30. கவிகளாயிரம்

கவிகளாயிரம்
கண்டு வியக்கும்
பேரழகே! பெறுபேறே!
தமயந்தி!
நினக்கும் ஒரு சோதனையா?
நின் சுயம்வரத்தில்
மாலையுடன் வந்து நிற்கும்
நளன்களிடையே
நின் நளனை நீ கண்டு கொள்வதெப்படி?
காதல் உனக்கு வழிகாட்டும்
என் கண்மணீ!

## 31. அதன் பின்

துன்பகரமான
நினைவுகளினதும் வலிகளினதும்
காரணங்களைத் துருவியபடி
இருள்வெளியில்
காலம் காலமாய்ப்
பறந்து கொண்டிருந்த
ஒரு பறவை, அவனருகே
தோளுரசும் ஒரு மரக்கிளையில்!
அதிசயத்திற்குப் பின்தானோ
அது எழுந்து பறந்துகொண்டிருந்தது
காலமற்ற பெருவெளியில்?

## 32. விண்ணோக்கிச் செல்வதும்

விண்ணோக்கிச் செல்வதும்
விண்ணை உணர்வதும்
மண்ணை நோக்கியே பொழிவதும்
மழைநீர்த் தேக்கங்கள் என
நின்று நிதானித்து
மண்ணைக் குளிர்வித்தபடியே
விண்ணையே நெஞ்சில் நிறைத்து
விண்ணைநோக்கியே கிடப்பதும்
அனைத்து உயிர்களையும்
காதலின்பத்தாற்
களிகொள்ளச் செய்வதுமேயன்றோ
நம்மை வாழ்விக்கும்
நம்முடைய ஒரே செயல்!

## 33. ஒரு மலர்

தன் மணம்
இப் பிரபஞ்சவெளியின்
முடிவின்மைவரை
பரவிக் கொண்டிருக்கிறதாய்
முற்றுமுழு உறுதியுடன்
முறுவலித்துக் கொண்டிருந்தது
ஒரு மலர்.
தனக்குக் கிட்டாததாய்
வாடி வருந்தும் மனிதனைச்
செவி மடுத்துச் சொல்லிற்று அது;
“நெருங்கி வா.
ஒருபோதும் விட்டு விடாதே
என் அண்மையை.”

## 34. மலையுச்சியினின்றும் இறங்கி

மலையுச்சியின்றும் இறங்கி
என் பார்வை படும்படி
ஓரமாய் வந்து நின்ற மலரே,
கொய்த பிறகும்
வெகு காலம் வாடாதிருக்கும்
உறுதி கொண்ட உன் தாராளத்தை
நான் ஏற்றுக் கொண்டிருக்கவே
கூடாதோவென
இப்போது கலங்குகிறேன்.
உன் அழகு கண்டு
வியந்து நிற்கவே வந்த என்னை
ஒரு நாளில் வாடிப் போகிறதுதானே
பறித்துக்கொள்ளுங்கள்
பறித்துக்கொள்ளுங்கள்
என்று கூறிய ஓர் ஏழையின் அன்பை
ஏற்றுக் கொண்டிருக்கவே கூடாதோ?
ஒருநாளும் வாடிப்போகாத அன்பை
உணர்த்தி மடியும்
எளிய உயிர்தானோ நீயும்?

## 35. அவரையும் அவர் கணவரையும்

அவரையும் அவர் கணவரையும்
பார்க்கையில்
வளமும் உயரமுமான மலைநிலங்களையும்
அதைத் தம் தோட்டவெளியாக்கிக்
கொண்ட
மனிதரையும் பார்ப்பது போலிருந்தது.
தவிர்க்க முடியாத ஒரு கனவில்
உரசும் பசுமை தீண்ட, அவ்வெளியில்
எந்தச் சேதமும்
இடையூறுமில்லாதபடி
அவன் நடந்து கொண்டிருந்தான்,
யாதொரு குற்றவுணர்வுமில்லாக்
களங்கமின்மையின்
தன்னுரிமையோடே.

### 36. பச்சை அலைவீசும்

பச்சை அலை வீசும்
நெல் வயற் கடல் நடுவே
ஓடும் ஓர் தார்ச்சாலைப் படகு.
அதன் உள்நிரம்பியுள்ள பொருளோ
காரணமில்லா பேருவகை
அல்லது பெருந்துக்கம்.
சூழத் துயர் கனத்துத்
தாழ்ந்து நிற்கும்
அனைத்து நெற்கதிர்களையும்
ஆற்றவென-
எழுந்த ஒரு நெற்கதிரின்
காதற்பெருங்கனலோ
கருணையோ, தீரமோ
இந்தக் கதிர் அரிவாள்?
மவுன சாலைகள்
நம்மை அழைத்துச் செல்கின்றன,
இயற்கை வெளியூடே
விண்வியந்து சுரக்கும்
மலைகளை நோக்கி.
மலைகளின் மடிகளெங்கும்
அருவிகளின் கும்மாளம்.
நீரடியில் அமிழ்ந்து கிடக்கும்
கூழாங்கற்களின் நிச்சலனம்.
காடுகளின் இலைகளெங்கும்
பேரின்பத் தாளம்.

மண்பற்றிநிற்கும் வேர்களெங்கும்
ஒருநாளுமழியாத தாகம்.
கண் நிறைந்த காதல்
ஒருக்காலும் மாறாதோ
எத்துனை நேரம் பார்த்துக்
கொண்டிருப்பது,
நீர்க்கரை மரங்களாய்-
நீர்மீது ஆடும் ஒளியையும் காற்றையும்!
எத்தனை அழகான ஜோடி,
நீரோட்டமும் பரிசல் வட்டமும்!
நதியோரம்
மலம் கழிக்க அமர்ந்த கோலம் போலக்
கோயில்கள்.
சாப்பாட்டுத் தட்டைத்
தன்னிடம் கழுவும் மனிதனை நோக்கிக்
கெஞ்சினாள் அவள்:
"தாங்கொணாமை நேரிட்டு விட்டது மகனே,
நீ உனது சாப்பாட்டுத் தட்டைப்
பேணுவதுபோல்
என்னைப் பேணுவதுமட்டுமே வழி!"
வானக்குடை முழுசாய் விரிந்த
இத்தனை பெரிய வெளியில்
எவ்வுயிரும் அமைதியுடன்
அங்கங்கே அமைந்திருக்க
இங்கிருந்து அங்கு
எத்தனை வேகம்

இந்தத் தார்சாலைக்கு மட்டும்!

## 37. வேசி

ஆகக் கழிசடையைக் குறிக்கவும்
பெண்தானா அகப்பட்டாள் உங்களுக்கென
என் மகள் சீறி ஆட்சேபிக்கவும்
சொல்லிழந்த நிலையில்
கண்டேன் அதுவரையிலும் நான்
காணாத தொன்றை!

## 38. அந்த விளக்கொளியில்...

என் பணிகளையெல்லாம்
முடித்து விட்டு
ஒவ்வொரு நாளும் தவறாது
எத்தனை வேகமாய்
ஓடிவந்தமர்கிறேன்
உன்னிடம்!
எத்தனை பெருங்காதல்
நம்மிடையே நிலவுகிற தென்பதை
யாரறிவார்?
என் அந்நி விளக்கொளியில்
ஒளி வீசும் பேரழகி நீ!
கன்னங்கரிய
என் பேரொளி
என் சொர்க்கம்.
மனம் அவிந்த
நெருக்கம்.
திகட்டாத பேரமைதி
பேராறுதல்
என் உறக்கத்திலும்
களத்தை என் உடம்பை
மாமருந்தாய் தீண்டியபடி
விழித்திருந்து காவல்காக்கும்
தெய்வம்.
என் காயங்கள் மீது பொழியும்
அம்ருதப் பெருங் கருணை.

பகலெல்லாம்
வியர்வைக் கொட்டிக் கொண்டிருக்கும்
என் மேனியினை
நிழல் திரைகளில் மறைந்து நின்றபடி
இமைக்காது நோக்கிக்கொண்டிருக்கும்
காதல்.
நம் சங்கமக் காந்தப் புலமெங்கும்
அறியப்படாத ஓர் ரகசியப் புதையலாய்
பெருகிக் கிடக்கும் மவுன வெள்ளம்.

**39. அந்த நபர்**

எதிரே இருப்பவர்களுக்கும் அப்பால்
யாரோ ஒருவர்
அவனது பேச்சை மிகக் கூர்மையாய்க்
கேட்டுக் கொண்டிருப்பதை
ஆரம்பத்தில் சரியாகக்
கவனிக்காமல் இருந்திருக்கிறான் அவன்.
பேசி முடித்தாயிற்றா என்ற
இகழ்ச்சி கலந்த அன்புப் புன்னகையுடன்
அவனை வரவேற்ற அந்த நபரைக் கண்டு
திகைப்புற்றான் எனினும்
ஒருமுறையும் காணத்தவறியதில்லை
அவன்.
அவன் பேச்சு வளரும்போதெல்லாம்
அவன் பேச்சை அலட்சியப் படுத்தியபடியே
இமைக்காது அவனைப் பார்த்துக்
கொண்டிருந்த
அந்த நபர், அவன் தனிமையிலெல்லாம்
அறிமுகமானவர்தான் என்று
தோன்றினாலும்
அவரை எப்போது முதல்முதலாய்
சந்தித்தோம் என்பது தெரியவில்லை.
அவன் பேசும்போதெல்லம்
அவன் பேச்சுத் தொடர்
அறுந்து அறுந்து போகும்படி
தன்னை உக்கிரமாய் காட்டிக்கொள்ளத்

தொடங்கியிருந்தார் அவர்.

அவன் நினைவறைக்குள் புகுந்து
அநேகத்தையும்
அழித்தொழித்து விட்டவராயிருந்தார்
அந்த நபர்.
உந்தல் அவிந்து
அண்ணாந்து கிடக்கும் நாவும்
அதன் துயரமுமேயான அந்த நபர்
ஒலிக்கும் ஒவ்வொரு சொல்லும்
பெருவெளியின் முடிவின்மை நோக்கியே
இதழ் விரித்து நிற்க
யாவரும் அறிந்தாக வேண்டிய
இரகசியம் போலானார்.

**40. மறைவு**

வேற்று மொழியில் எழுதப்பட்டிருந்ததா என்ன?
வாசித்துக் காட்டச் சொல்லி
ஒரு வாசகர் கடிதத்தைக் கொண்டு வந்தார்
புதிதாகக் கவிதை எழுதத் தொடங்கியிருந்த
ஒரு இளைஞர்.
உன் கவிதையை வாசித்து
பிரியமாகி
கடவுள் உன்னை அழைத்திருக்கிறார்
தன் இல்லத்திற்கு என்றேன்.
தலைகால் புரியாத ஆனந்தத்தில்
கையில் பிடிக்க முடியாத வேகத்தில்
காண்போரிடமெல்லாம்
அக் கடிதத்தை, அது போலும் தொடர்ந்து வந்த
கடிதங்களைக்
காட்டிக் காட்டிக் காலமெல்லாம்
துள்ளிக் குதித்துக் கொண்டிருந்தவரை
எப்படியோ ஒரு நாள்
பிடித்து நிறுத்திக் கேட்டு விட்டேன்:
“அழைப்பினை ஏற்று, ஒரு நாளாவது
அவரைச் சென்று நீங்கள் பார்த்தீர்களா?”
தலைகுனிந்து நின்றவர்,
நான் அகன்றதும் சுதாரித்து

மீண்டும் தொடங்கிவிட்டவர்தான்
திடீரென்று ஆளையேக் காணோம்!
அவர் இறந்து விட்டார் என்றனர் சிலர்,
கடவுளின் அழைப்பேற்றுச்
சென்றுள்ளார் என்றனர் சிலர்,
நான்தான் அவர் என்பதை
அறியாதவர்களாய்.

## 41. கண்ணெதிரே

எப்படி ஏற்பட்டதெனத் தெரியாத
ஊமைக் காயங்களும் வலியுமாய்
நீ நிற்கிறதென்ன?
எந்த ஒரு அதிர்ச்சிக் கொடுமை
அறைந்துன்னை ஆக்கியது
இக் கோலம்?
சிரமிறங்கிய வேளையே
உன்னைத் தீண்ட
நான் முந்தி நீ முந்தி என
போட்டி போட்டுக் கொண்டோடோடி
வந்ததில்
மாளாத் துயர்தான் வெற்றி பெற்றிட்டதோ?
விழாக்கள் விருந்துகளின்
ஆர்ப்பாட்டகளிற் பொருந்தாது
நீங்காத துயர்க் கனலால்
எரிந்துகொண்டிருப்பதோ நின்முகம்?
தம்மினும் தீனர் திக்கற்றோர்
நலிந்தோர் நசுக்கப்பட்டோர்களை
விலக்கி விலக்கி விரையும் முகங்கள்
நடுவே
நகராது நின்றிட்டதோ அது?
தேடிய செல்வம் நிலைகொண்டு
பெருகுதற்கே
தானங்கள் செயும் தந்திர முகங்கள் நடுவே
காலமெல்லாம்

நின் முகம் நாடும் செல்வமெங்கே?
கண்ணெதிரே
அது அழியும் விதம் காண்கின்றமையோ
ஆற்றாது கதறும்
உன் முதன்மைத்துயர்?

**42. யார் அவன்?**

அன்பின் பேரோலமோ இத் துயர நாதம்?
தன்னந் தனியே துயரோலமிட்டபடி
உக்கிரமாய் விரையும் ரயில்வண்டியில்
கவியும் அந்நியிருளும் நெஞ்சைப் பிசையும் வேளை.
எண்ணங்களாலான எக் கருத்தியலோடும்
சார்ந்திருராததொரு தனி உயிரின் பெறுபேறுகளோ
தன்னிலும் வெளியிலும் காணும்
இணையற்ற பெருமிதமும் இரக்கமும் இத்துயரோலமும்?
ஒரு கையசைப்பு ஒரு புன்னகை அன்றி
பிரிவுத் துயரரறியாததோ இந்த ரயில்வண்டி?
நிலையங்களைக் கடந்து
மாட மாளிகைகளைக் கடந்து
கூட கோபுரங்களைக் கடந்து, மனிதர்தம்
இரங்கத் தகு வாழ்க்கை முறைகளையெல்லாம் கடந்து
இயற்கை வெளிநோக்கிச் செல்கிறதோ இவ் வண்டி
தன் துயராற்றவே மாறா உக்கிரமும் நிதானமுமாய்?
வெறும் நிலப்பரப்பும் இயற்கை வெளியும் சலித்ததாலோ

திடீரென்று ஆங்கோர் மனித-உயிர்-வீடு கண்டு துள்ளியது?
உள் விளக்காலொளிரும் வாசல் செவ்வகத்தில்
முட்டுக் கால் பற்றி அமர்ந்திருக்கும் ஒரு நிழலுருவம்!
கண்ட மாத்திரத்தில்
அவன்தான் அவன்தான் என இரத்தம் எகிறித் தவிக்கையில்
சதையோடு பிய்த்து இழுத்ததுபோல் கடந்து போய் விட்டதே
சில வினாடிகளில் அக்காட்சி!
சொல்லொணா துயரும்
தோல்வியுமான பெருந் தனியனோ?
தவிரக்கவே முடியாமல் இவன் அவனைத்
தவற விட்டுவிட்டானோ இப் பயணத்தில்?
அவனைப் பார்த்துவிட்டதே போதுமா?
இப்போது கண்முன்னே அவன்
காணப்படவில்லை என்பதால்
அவன் ஒரு பொய்யனாகவும்
கண்டதுண்டு என்பதால்
மெய்யனாகவும்
காண்கையில் மாத்ரமே
பொருளுளானாகவும்
நிகழும் மாயனோ?
அழியாத ஒரு மானிடர்தானோ அவன்?

இயற்கை நடுவே இயற்கையைச் சிதைக்காது

தன் வாழ்வமைத்துக் கொண்ட மானுடப் பிரதிநிதியோ?

இயற்கையேதானோ?

தெய்வமோ?

## 43. நிலாவை...

நிலவு எரிந்துகொண்டிருந்த
தருணமோ அது?
(சும்மாதானே இருக்கிறீர்கள்!)
கொஞ்சம் தேங்காயைத்
துருவித் தாருங்களேன்
என்றார் என் மனைவி.
துருவத் துருவத்
தோன்றியனவோ
தூமலர்கள் ஆயிரம்?

## 44. யாராவது ஒரு பெண்ணுக்கு

காலையில் அமைதியை
விடாது துன்புறுத்துவதுபோல
ஒலிக்கிறதென்ன இந்த அணில்களின்
உரத்த உரையாடல் ஒலி?
இயற்கையின் தனிச் சிறப்பான
நோக்க மொன்று
தாளாது உடைந்துபோன
பொறுமையின்மையோ
இந்த வேதனை?
போர்க் கொடுந் துயர்களுக்கன்றி
வேறெதற்கும் பயன்படா
இனக்குழுப் பற்று மீது மூண்ட வெறுப்போ?
பூர்வ காலந்தொட்டு
யாராவது ஒரு பெண்ணுக்கு
தன்னறிவின்றியே
ரொம்பத் தீவிரமாய்
தன் குழுவை மீறி
பகைக் குழு ஆணின் மீது
மூள்கிறது காதல்.
இன்னொரு கிரகத்திலிருந்து
தவளைபோலும் முகமுடைய
ஓர் ஆண்வந்து நிற்கையிலும்
அவன்மீதும் காதல் மூளும்
இந்தப் பெண்ணுக்கு,
என் அருமைக் கண்ணுக்கு!

## 45. "பரிவுகொள்கையில் பரம்பொருளாகிறோம்"

எனது மருத்துவமனைப் படுக்கையருகே
வெகு உயரமாய் வந்து நின்றபடி
பெயர் என்ன என்று கேட்டார்கள்.
பிச்சுமணி கைவல்யம் தேவதேவன் என்றேன்.
குற்றவாளியாய் சந்தேகிக்கப்பட்டவன் போலவோ
ஆராய்ச்சிக்குக் கிடைத்த அரும் பொருள் போலவோ
மருத்துவப் பரிசோதனைக்கு உட்பட்டு உதவுவது போலவோ
விளக்கமளிக்க வேண்டியதாயிற்று.
கைவல்யம் என்றால்
பேதா பேதங்களைக் கடந்தவன்
யாதுமாகிய ஒற்றை மனிதன்
மனிதனாகப் பிறந்தவன்
அடைய வேண்டிய பெருநிலை...
யார் உங்களுக்கு இந்தப் பெயரை வைத்தது?
அப்பாவுக்குப் பிடித்த ஒரு பெரியார்
தனக்குப் பிடித்த ஒரு பெரியாரின் பெயரை-
அதுவும் ஒரு காரணப் பெயர்தான்-
வைக்கும் படியாயிற்று.

பிச்சுகளில் மணி போன்றவன் எனும்
பொருளுடைய
அப்பாவின் பெயர் ரொம்பப்
பிடித்திருந்ததால்
முன்னொட்டாக அதையும் சேர்த்துக்
கொண்டேன்.
அத்தோடு நிறுத்திக் கொள்ளக் கூடாதா?
பிச்சுமணி கைவல்யம் என்ற பெயர்
போதவில்லையாக்கும்?
ஆமாம். ஒரு பேரார்வம்தான்
எந்த வினாடியானாலும் எந்த
இடமானாலும்
ஒரு காசு செலவில்லாமல்
மிகச் சுலமாக (பார்க்க: தலைப்பு)
பிரம்மாண்டமான ஒரு காரியத்தைச்
செய்யமுடிவதை
விட்டுவைப்பானேன் என நினைத்தேன்.

## 46. காதலின்ப முழுமை

காதலின்ப முழுமை
நிலவுமோடா,
இப்புவியில்,
உன் காதலியிடம்
உன் குற்றம் வருந்தி
உன்னை
நீ திருத்திக் கொள்ளவிடில்?

## 47. ஒரு சிறு பொறிதான்

ஒரு சிறு பொறிதான்
காற்றின் கரம் பிடித்து
அக்கினிக் குஞ்சாய் மலர்ந்தது காண்!
அக்கினிக் குஞ்சு- தான் – என்ற போழ்து
விசிறியடித்த காற்றொன்றால்
கல்மீது மோதி மடிந்தது காண்!

## 48. குவியலாய்

குவியலாய்
கனிகள் கூடியிருந்த
ஓர் இடத்தைக் கண்டேன்
என்ன தொழில் நடக்கிறதென்றா
அதை நெருங்கினேன்?
தொட்டும் பார்த்தும் முகர்ந்தும்
ஒன்றைத் தேர்ந்தெடுத்தேன்.
அந்த ஒன்று
தான் தான் தேர்வு பெற்றதற்காய்ப்
பூரித்துப் போகவில்லை.
நான் கண்டுகொள்ளாத மற்றவைகளும்
குறையுணரவில்லை, தூரத்தில் நான் நின்று
அழைக்கப்பட்ட போதே
மொத்தத்தையும் நான் கண்டவன்தானே?
மாறாப் புன்னகையின் அன்புவளம்;
அதன் மாண்புகள் அத்தனையும்;
காணக் காணக் தெளிவது போல்
கண்ணுற்று நின்றேன்.

## 49. நான் இருக்கிறேன்

அறை நண்பர்கள் ஒவ்வொருவராய்
பிரியாவிடை பெற்றுப்
பிரிந்து கொண்டிருக்கிறார்கள்
கண்கள் கலங்கியவர்களாய்.
எனது கண்களும் கலங்கினதான் எனினும்
பிரிந்து செல்வது நானல்லவே.

## 50. தீண்டலும் தீண்டாமையும்

நான் வாய்பேசத் தொடங்கியதுமே
கீழ்வானிலே உதித்த விடிவெள்ளியை
அழகு தேவதை வீனஸை
எந்தொரு விண்மீனின்
வழிகாட்டலுமின்றிக்
காணக் கிடைத்தவர்கள் போல
ஓடோடியும் வந்து
எத்தனைக் காதலுடன்
உன் இரு கைகளாலும்
என் கைகளைப் பற்றி
உருகி நின்றாய் என் தெய்வமே!
திடீரென்று உன் கண்களிலே
ஒரு சந்தேகம், கலக்கம்.
பற்றி நின்ற ஒரு கையை மெல்ல விடுத்து
என் தோளும் தோளாய் மெல்ல நெருங்கி
அக் கைகளால் என்னை
ஆரத்தழுவியபடியே
தொட்டுத்தடவித் தட்டிக் கொடுக்கும்
பாவனையில்
எனது முதுகுப்பரப்பில் எதையோ
உன் விரல்கொண்டு தேடுகிறாய்.
என் தகுதியின்மையைக்
கண்டுபிடித்து விட்டவன் போல்
என்னைத் துயருக்குள் தள்ளிய
என் விலக்கம் கண்டு

விம்மினேன், என் தெய்வமே!
இன்று சின்னங்கள் பலப்பலவாகி
எங்கும் பரவிநிற்கும்
உன் தீண்டலும் தீண்டாமையும்
என்னைச் சுடும்
எக் குற்றங்களையும் மன்னித்துவிடும்
காதற் பெருக்கின்
அழிவிலாப் பேரனுபவமன்றோ
என் தெய்வமே!

## 51. புத்தர்

மேக முடி சூடி
எல்லாவற்றிற்கும் அப்பால்
மகாமவுனமாய் அமர்ந்திருக்கும்
பிரக்ஞையற்ற மெய்மையல்ல;
ஒரு சிகரம் தன் உக்கிரம் குன்றாது
தன் பள்ளத்தாக்கினை
உற்றுக் கவனித்துக் கொண்டிருக்கும்
பார்வை.
ஓய்ந்து போய்
நமக்கு நாமே
உபயோகமற்ற ஆறுதல் வேண்டி
நம் வழிபாட்டுக்குரியதாய்ச்
செதுக்கிக்கொண்ட
உயிர்மையற்ற விக்கிரகமல்ல;
மானுடத் துயரும், நீதியின்மேல்
பசி தாகமும் கொண்டோர்
நெஞ்சிற் கனலும் வேட்கை.
விழிப்பு
தயை
மெய்ஞ்ஞானம் தந்த
உன்னதப் பொலிவு
உலராத புன்னகை
உறுதிமயமான இருப்பு
உருளும் தர்ம சக்கரம்
ஒளி.

## 52. பருந்து

உங்கள் சின்னஞ் சிறிய வயதிலாவது
பார்த்து அனுபவித்திருக்கிறீர்களா,
பருந்து ஒன்று
கோழிக் குஞ்சொன்றை
அடித்துச் சென்ற காட்சியை?
அதன் கூர்மையான நகங்களால்
உங்கள் முகம் குருதி காணப்
பிராண்டப் பட்டதுபோல்
உணர்ந்திருக்கிறீர்களா?
பறவை இனத்திற் பிறந்தாலும்
விண்ணிற் பறக்க இயலாது
குப்பை கிண்டித் திரியும் அதனை
துடிக்கத் துடிக்க ஓர் உயரத்திற்கு
அழைத்துச் சென்ற அந்தக் காட்சி!
அக் குஞ்சோடு குஞ்சாய் மரித்து
அப் பருந்தோடு பருந்தாய்
பறந்து திரிந்திருக்கிறீர்களா
பாதையில்லா வானத்தில்?
குப்பைகளை
ஆங்கே நெளியும் புழுக்களை
கோழிக் குஞ்சுகளை
அவை தங்களுக்குள்ளே இடித்துக்
கொள்வதை
புலம்பல்களை
போரை

போர்க்களங்களில்
பிணமாகி அழியும் மனிதர்களை
பிணங்களின் அழுகிய வாழ்வை-
நீங்களும்தான்
பார்த்திருப்பீர்களில்லையா?
அது தன் சிறகு மடித்து
தனது பனித்த கண்களுடன்
ஒரு குன்றின் மீதமர்ந்திருக்கையில்
அய்யம் சிறிதுமின்றி
ஒரு தேவதூதன் போன்றே
காணப்படுகிறதில்லையா?

**53. துயர் என்பது...**

விடுதலையின் முகமே,
மெய்மையே,
அன்பே,
நாடாது நின்றெரும்
இன்மையின் நெருப்பே,
இமையாத கண்களே,
உன்னைக் கண்டுகொண்டமையோ
துயர் என்பது?
மண்டை ஓட்டுக்குள்
இப்போதும்
அய்யமின்றி
பத்திரமாகவே
பதிவுகளெல்லாம் இழந்த மூளை
தொடர் செயல் அறுந்து
செயல் எழுப்பும் பெருங்களத்தில்
திட்டமற்று முகம் புதைத்துக் கொண்டதால்
தகிக்கும் இருப்போ?
கண் காணாமல்
தன்னை மறைத்துக்கொண்ட
தவளையின் வித்துக்கள்
இடி மின்னல் மழை வரும் போதெல்லாம்
கடமை விழிப்படைந்தது போல்
குரல் கொடுத்தும்
கத்தித் தொலைத்தும்
விளையாப் பயன்களுன்

அரவின் வாய்ப்பட்டே
அழிகின்றமையோ?

## 54. அவன் தனியானவனல்ல

அன்பும் அழகும் இன்பமும்
அரிதாகிப் போனதென்ன?
நம் விசாரணையின்
பயணம் ஒருபுறமிருக்கட்டும்
விழி நிலை ஒன்றேயான
அவன் முன்னே காத்திருப்பதென்னவோ
வன்மையான இவ்வுலகின்
துயர் வகைமைகள் தாமே.
துயர் தப்பிய நுண்ணுணர்வாளருண்டா?
துயரங்கள் வாய்திறந்து
பேசக் கனல்வதையே அவன் பேசுகிறான்.
ஏழ்மையை ஏவி
அவனைப் பரிதவிக்க விட்டாலும்
அவன் தனிமைப்படுவதில்லை
ஏழ்மையில் உழன்று
பரிதவிக்கும் மக்களின் நாவாய்
அவன் அமைகிறான்.
சிறையில் அடைக்கப்பட்டுச்
சித்ரவதை செய்யப்பட்டாலும்
அவன் தனிமைப்படுவதில்லை
சிறையில் அடைக்கப்பட்டுச்
சித்ரவதை செய்யப்படுவோர் குரலாய்
அவன் ஒலிக்கிறான்.
வஞ்சனை அநீதிகளால்
அவன் வாட்டமடைய நேர்ந்தாலும்

அவன் தனிமைப்படுவதில்லை
அத்தகைய மனிதர்களின் பிரதிநிதியாய்
அவன் ஒலிக்கிறான்.
அவன் தனியானவனல்ல என்பதே
அவன் தனிமைப் படாததின் ரகசியம்.
அவனே இவ்வுலகம் என்பதே
அவன் பேசுவதெல்லாமே
யாரையாவது நோக்கிய முறையீடாகவோ
இறைஞ்சலாகவோ கோபமாகவோ அன்றி
தனக்குத் தானே முனங்கிக் கொள்கிறதாக
சுய விசாரணையாக
இருப்பதின் ரகசியம்.
அன்பும் அழகும் இன்பமும்
அரிதினும் அரிதாகவாவது
காணப்பெறும் இரகசியமும்.
அதிகாரமும் வன்முறையும்
எவ் வடிவிலும்
இதய மொக்கைக் கருக்கி விடுவது கண்டு
அன்பினதும் கருணையினதும்
அருமைக்காய்
இப்போது அவன் துடிப்பதன் இரகசியமும்.

## 55. கவனமான பொதியலுக்குள்

கவனமான பொதியலுக்குள்
நன்கு பழுத்துக் கனிந்து கொண்டிருந்த
பழத்தின் மணத்தில்
ஓர் உரத்த குரல்:
”கொடுத்து விடு இப்பொழுதே
உன்னைச் சுற்றியுள்ளவர்க்கே”

**56. மரம் வெட்டப்பட்ட இடம்**

கனவுகள் தோறும் புகுந்து
என்னைத் துரத்தியது
மரம் வெட்டப்பட்ட இடத்திலிருந்து
என் அறையைத் தாக்கிய வெய்யில்.
முடிவின்றிப் பொசுக்கும் பாலை ஒன்றில்
ஒரு பிடி நிலம் தேடி
முடிவின்றி நடந்து கொண்டிருந்தேன்
ஒரு கனவில்.
குளிரூட்டப்பட்ட சவப்பெட்டி ஒன்றுக்குள்
கைகால்கள் முடக்கி
நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்தேன்
ஒரு கனவில்.
நீர் மாற்றப்படாத நீச்சல்குளம் ஒன்றில்
நாற்றமெடுத்த நீர், மேலும் நாறும்படி
பிணமாகக் கிடந்தேன் ஒரு கனவில்.
செவிட்டுக்களை படிந்த
முகங்களுடனும் உடல்களுடனும்
அருவியிலும் ஆற்றிலும்
குளித்துக் கொண்டிருந்தனர் மக்கள்
கழிவுநீர்த் தேக்கம் காத்திரம் உரைக்கும்
அழுக்குச் சேரிகளில்
கொந்தளித்துக் கொண்டிருந்தனர்
மலைவாழ் பழங்குடி மனிதர்கள்.
என் அறையைத் தாக்கிக் கொண்டிருந்தது
அதிகார வன்முறையும் ஆடம்பரங்களும்

அறியாத கவிதை

கண்ணீர் ததும்பும் ஒரு வேதனை

மரம் வெட்டப்படுவதைப் போல அழிந்து

மரம் வெட்டப்பட்ட இடம் போலக்

கனன்றபடி.

## 57. குப்பைத் திரடருகே

குப்பைத் திரடருகே
கழிவுநீர்க் கால்வாய் விளிம்பின்
சிமெண்டுத் தளம்மீது
குளிரை அணைத்தபடி
துயின்று கொண்டிருந்தவன்
இன்னும் எழவில்லை,
அத்துணை அதிகாலையிலேயே
ஆர்வமான என் காலை நடை
தொடங்கிற்று.
அசுத்தத்தினதும் அருவருப்பினதும் புதல்வனான
அந்த மனிதன் யார் என்று நான்
நன்கு அறிவேன்போல் தோன்றியது.
கிடைத்தற்கரியதாய்க் கருதப்படும் பேறுகளையும் கூட
கருணைக்கு விலக்காகாதவர்களாய்
நாங்களும், இங்கிருந்தபடியே
ருசிபார்த்துத் துப்பியிருக்கிறோம்.
அந்த முகத்தை நான் பார்த்திருக்கிறேன்.
சுரணையின்மையின் தடித்தனங்களாலும்
பேராசைகளின் விகாரங்களாலும்
தன்னலவெறியின் பகட்டாலும்
வறிய மனிதர்களிடமிருந்தும்
தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கான
தந்திரங்களாலும்

அருவருப்பின் கலவைச் சித்திரமாய்ச்
சிதைவுற்றிருந்த அந்த முகத்தை.
இப் பூமியினின்றும்
இக் காலை நடையில்
கரைந்தழிவதற்கோ
சகிக்கமுடியாத கழிவிரக்கத்தில்
தொடங்கியது இத்துயரம்?

**58. பள்ளம்**

மண்ணிலிருந்து விண்ணோக்கி
எத்துணை உயரம் சென்றாலும்
நம் உயரத்தை ஒரு பொருட்டாய்ப் பார்க்காத
விண்ணை விடுத்து
மண்ணின் இதயத்தைத் தொட்டறியவோ
இத்துணை பள்ளத்துள் போய்
அமைந்துகொண்டது உன் வீடு?
நாலா திக்குகளிலும் பொழியும்
மழை தழுவிய வீடுகளின்
துன்பக் கசடுகளெல்லாம்
உன் இல்லம் புகுந்து
உன் கால்களைத் தழுவிப்
பேசும் பேச்சுக்குச் செவிமடுக்க வேண்டுமென்றோ
இத்துணை பள்ளத்துள் போய்
அமைந்து கொண்டது உன் வீடு?
இரவோடு இரவாய்
உட் புகுந்த அவ்வெள்ளத்தை
தடுப்பணை கட்டி
இறை இறை என்று இறைத்துத் தள்ளி
துடைத்துத் தூய்மை செய்து
நிம்மதிப் பெருமூச்சுடன்
உடல் துவள
நீ துயிலத் தொடங்குவதற்கு முன்னே

விடிந்துவிடும் பொழுதுக்காகவோ
இத்துணை பள்ளத்துள் போய்
அமைந்துகொண்டது உன் வீடு?

## 59. அபயக் குரல்

துயர்மிகுதி தாங்கொணாது
பித்துப் பிடித்ததுவாய்
மரங்களைப் பிடித்தாட்டித்
துன்புறுத்திக் கொண்டிருந்தது காற்று.
அடிக்கடி இதற்கு இப்படித்தானாகி விடுமென்று
அலட்டிக் கொள்ளாதிருந்தனர் மாந்தர்.
இல்லை, அதன் அவசரமான கூப்பாட்டினைப்
படித்துவிட்டவன்போல் எழுந்து நின்றான்
ஒருவன்.
காற்றும் மரங்களும் அதனைக் கண்டு
அமைதியடைந்து நின்றன அவ்வேளை.

## 60. இவ்வேளை

மரணம் பிறப்பு
இரண்டையும்
மாறி மாறித் தொட்டு மீளும்
ஊஞ்சல் விளையாட்டு
முடிந்தாயிற்றா குழந்தாய்?
காணத் தொடங்கியாயிற்றோ,
பாலத்தில் நின்றபடி
இரண்டையும் தொட்டுக்கொண்டு
பூமியதிரப் புரண்டோடும்
ஆற்றுப் பெருவெள்ளத்தை?

## 61. கொடுவனம்

நண்பகல் வேளையிலும்
இரவின் ஒலியுடன்
இருண்டு கிடப்பதேன் இவ்வுலகம்?
உயிரைப் பிடித்துக் கொண்டு
பதுங்கிவாழ் முயல்களுக்குமப்பால்
நிலவவே முடியாது
மடிந்தும், தோன்றாமலுமே போன,
யாரும் கண்டிராத
மென்னுயிர்களின்
மரண வாசனையோ
மரண பயமோ, இப்போது உன்
இதயத்தைப் பிசைந்து கொண்டிருப்பது?
கண்டு கொண்டனையோ?
இம் மரணத்தின் சந்ததியில்
முற்றிலுமாய் அழித்தொழிக்கப்பட
வேண்டிய
கொடுவனத்தை?
அழிக்கப்படு முன்
இவ் வேதனையிலேயே
விரைவாய் உன் மரணமும்
நிகழ்ந்து விடுமென்றா
அவசர அவசரமாய் அதை எழுதி
வென்று விடப் பார்க்கிறாய்?

## 62. சிந்தனைகளாற் களைத்து

அதன் பின் தொடரும்
நெடிய தூக்கத்தாலன்றோ
காலங் காலமாய்த் தவறிப் போயின
காலைப் பொழுதின் சொர்க்கங்கள்?
‘விழித்திருப்பவனுக்கே
விடியற் பொழுதுகள்’ என்பதோடு
நின்று விடவில்லை,
தன் சட்டம் ஒழுங்கில்
கறாராக இருக்கும் அன்னை,
பிரியம் பொங்கி
கொட்டிக் கொடுக்கிறாள்
எல்லாப் பொழுதுகளையும்
அவனுக்கு
புத்துணர்வு மாறா
விடியற் பொழுதுகளாய்ச்
சமைத்து.

## 63. யானை விழுங்கிய மலைப் பாம்பு

தன் உள்ளுறுப்புகளையெல்லாம்
பலமாய் வேலை செய்யவிட்டுவிட்டு
அப்பொழுதும் நிகழும் வலி தாங்கி
எதையும் வெளிப்படுத்தாது
அசையாது
எழுச்சியற்றாற்போல் கிடக்கும்
வல்லமையோ,
வல்லமை முடக்கமோ?

**64. என்ன துயரமிது? என்ன தயக்கமிது?**

இந்த இதயம்
ஒரு பெருவெடிப்பில்
கோடானு கோடி
அணுத் துகள்களாய்ச் சிதறி
இதயமற்ற இதயங்களனைத்தையும்
குறி தவறாது பாய்ந்து தீண்டி
நிகழ்த்திவிட வேண்டும்
ஒரு மாற்றத்தை.
அவ்வாறாயின்
இந்த வலியையும் மரணத்தையும்
ஏற்றுக் கொள்வதிலென்ன துயரமும் தயக்கமும்?

**65. பாதையற்ற நிலம்**

அறியாத ஊர்வெளியில்
அதன் மலையழகில் மயங்கியவாறு
நிகழ்ந்த காலை நடை நெடிதாகிப்போய்
பாதையற்ற நிலம் ஒன்றின் முன்
பாதை தொலைத்து நின்றபோது...
அதென்ன உணர்வு
அச்சத்திற்குப் பதிலாய்?

## 65. பாதையற்ற நிலம்

அறியாத ஊர்வெளியில்
அதன் மலையழகில் மயங்கியவாறு
நிகழ்ந்த காலை நடை நெடிதாகிப்போய்
பாதையற்ற நிலம் ஒன்றின் முன்
பாதை தொலைத்து நின்றபோது...
அதென்ன உணர்வு
அச்சத்திற்குப் பதிலாய்?

**66. பாடல்**

அண்டம் முழுதும் அறியவென
கலவியின் உச்சத்திற் பீரிடும்
பெங் களிக் கூவலோ;
தாழிட்ட அறைக்குள்ளிருந்தும்
வெளிக் கசிந்துவிடக் கூடாததாய்
கட்டப் பெற்ற பெருங்காமம்
கண்டுகொண்ட விடுதலையின்
மற்றுமொரு பேரழகோ;
ஊற்றுத் திறந்து
உதிரத்தினின்றும் பாய்ந்திறங்கும்
அருவியோ; அய்ம்புலச் சாலைகள் வழி
ஓடிவந்து நம் உயிரை
ஆரத் தழுவிக் கொள்ளும் மெய்மையோ;
கண்ணில் சொர்க்கம் விரிக்கும்
இன்னொலியோ;
காணக் காணப் பூக்கும்
ஓவியத்தின் மூச்சொலியோ;
உள்ளத் துயர் துடைக்கும்
வெள்ளப் பேரொலியோ;
விழிமலர்ந்த பொறுமையின்
அமைதிப் மூச்சோ; காணரும்
புத்துலகுக்குள் நுழையத்
திறக்கும் பெருவாயிற் தாழொலியோ?

**67. ஏதோ ஒரு திட்டத்தில்**

எங்கள் பயிற்சி வகுப்பின்
நிகழ்ச்சி நிரலில் ஒன்றாய்
வினாடி வினா நடத்தியவரின்
முகத்தையே தான்
நான் பார்த்துக் கொண்டிருந்தேன்,
அதில் ஒளிரும் மேலாண்மைப்
பெருமிதம்தான்
என்னே என்று வியந்தபடி.
உலகத்தின் அநேகமாய் அத்தனை
அறிவையும்
தன் நினைவில் சேகரித்து வைத்திருக்கும்
ஒரு கணினிமுகம்தான்
‘ஒன்றுமில்லை’ என்றபடி
எத்தனை எளிமையுடன்
எத்தனை தாழ்மையுடன் இருக்கிறது!
எத்தனை முட்டாள்
இன்னுமிருந்து வருகிறானிந்த மனிதன்!
ஏதோ ஒரு திட்டத்தில்
எல்லா அறிவினையும்
தன் நினைவுப் பெட்டிக்குள்
இழுத்து வைத்துக் கொண்டு
என்னமோ சொல்வது போலிருக்கிறது
கணினிப் பெட்டி.

## 68. உயிரின் பேரின்பக் கொண்டாட்டமோ?

உயிரின் பேரின்பக் கொண்டாட்டமோ
ஒரு தாயும் சேயும் கொஞ்சிக் கொண்டிருந்த
காட்சி?
தாயின் மெய்தீண்டலில் அக்குழந்தை
பாதுகாப்பினையும்
குழந்தையின் தீண்டலில் அத்தாய்
பேரின்பத்தையும்
அனுபவித்துக் கொண்டிருந்தார்களோ,
பாதுகாப்பிற்க்குக் கோட்டைகளையும்
இன்பத்திற்குக் கேளிக்கைகளையும்
சார்ந்துவிட்ட இருள் நடுவே
தம்மை மறந்து?

**69. காவல் நிலையம்**

பல்லாண்டுகளாய் இப்புவியெங்கும்
அன்பு வழுவி
அறம் பிழைத்த காவல் தெய்வத்தின்
மனச் சிதைவிலிருந்து கிளம்பியது.
கையிலகப்பட்ட கைதிமீது
காவலன் ஒருவனிடம்
கண்மண் தெரியாமல் வெளிப்படும்
வன்முறை.
பார்வையற்ற விழிக் குழியிலிருந்து
பீரிட்டுக் கொட்டும் எரிமலைக் குழம்பு.

## 70. சலனப் படக் கருவி முன்

ஒவ்வொரு கணமும்
மாறிக் கொண்டேயிருக்கும் உலகை
ஒவ்வொரு கணமும்
மாறிக் கொண்டே
கண்டுகொண்டிருக்கும்
ஒற்றைவிழியாகி விட்டானோ அவன்?
நீர் சூழ நின்ற பாறைமீது
நில்லென்று பூத்த பறவைக்கூட்டம்
சிறகடிக்கும் கோலம் காணவோ
தன் கால்களை அகலவிரித்தூன்றிக்
காத்திருக்கிறது ஒற்றைவிழி?
ஒளிப் பெரும் புன்முறுவலாய்
பளீரிடும் பாறைகள் புல்திரடுகளுடே
மனம் கனக்கச் சுழித்துச் செல்லும் நீரில்
தம் பளு தாளாது ஊர்ந்து செல்லும் எருமைகளை
தேய்த்து நீராட்டிக் கொண்டிருக்கும் ஒரு சிறுமி
எத்தனை காலங்களாய் அதைச் செய்து கொண்டிருக்கிறாள்?
யாரோ அவள்?
நிலைமாறாது நிலவும் பரிவோ?
காண்பானின் உயிரோ? அவன்
கண்ணீரால் எழுதப்பட்ட ஓவியமோ?
இங்கே பார், ஆனந்தா,

யாவற்றினும் முக்கியமானதைச்
சொல்கிறேன்; அதனை
இதோ இந்த இயக்குநரும்
சலனப்படக் கருவியாளரும்
நன்கு அறிந்திருப்பதைக் கவனி.
இருமை களைந்து
ஒருமை பெற்ற
பார்வை மட்டுமேயான ஒரு
மனிதனையன்றோ
பொருத்தமான ஒரு கருவிகொண்டு
படம் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள்
இவர்கள்.
பார், ஆனந்தா, ஒரே சட்டகத்துள்
நான் காண்பதாய்
என்னொடு பார்க்கத் தொடங்கியவர்கள்
நான் இல்லாமலே இப்போது
செயல்பட்டுக் கொண்டிருப்பதைப் பார்.
இதைத்தானே ஆனந்தா
காலமெல்லாம் நான் சொல்லிக்
கொண்டிருந்தேன்!

**71. கோடி கோடி ஆண்டுகளாய்**

கோடி கோடி ஆண்டுகளாய்
கூடிக் கூடிக் களிக்குமின்பத்தையா
அன்பு எனக் கருதிவிட்டோம்
படுகொலைகளும் துயர்களும்
பிறக்குமிடம் கண்டிலமோ?
இறக்குமிடம் கண்டிலமோ?
கூடிக் கூடி நாம் கற்றதெல்லாம்
அன்பில்லாத உலகில்
அன்பிலாது வாழும் கலைதாமோ?

## 72. கவிதைவெளி

கவிதை எழுப்பித்தானே
காலையில் நான் துயில் களைந்தேன்
கவிதையின் நீரில் தானே
முகம் கழுவினேன்
கவிதையின் தூரிகை கொண்டல்லவா
வீட்டினை நான் தூய்மையும் ஒழுங்கும்
செய்தேன்
கவிதையின் படகிலேறியன்றோ
அண்டை வீட்டார்களுடனும்
அந்நியர்களுடனும்
உறவு கொண்டேன்
கவிதையின் நெருப்பினிலன்றோ
சோறு வடித்தேன்
கவிதையின் அரிவாள்மனை
அமர்ந்தல்லவா
காய்கறிகள் நறுக்கினேன்
கவிதையின் வாகனத்திலேறித்தானே
அலுவலகம் சென்றேன்
கவிதையின் கிண்ணத்திலன்றோ
தேநீர் பருகினேன்
கவிதையின் ஒளியிலல்லவா
தகதகத்துக் கொண்டிருந்தது இயற்கை
கவிதையின் பொன்வெளியிலல்லவா
நாளும் என் சிறுஉலா நடந்தது
கவிதையின் மொட்டைமாடியிலன்றோ

வான் பார்த்து நின்றேன் நான்
கவிதையின் நாற்காலிகளிலமர்ந்து கொண்டல்லவா
பிரச்னைகளை நாங்கள் ஆராய்ந்தோம்
மூடத்துயர் மிகுந்துகொண்டே வரும் இவ்வுலகில்
மனித முயற்சிகளனைத்தும் வீணேயாகிக் கொண்டிருக்கும்
இச்சாம்பல் வானத்தின் கீழே
வாழ்வின் அரும்பொருள் வினை இதுவே என
எப்போதும் உணர்த்தும் நிலையில்தானே
எரிந்துகொண்டிருந்தது அங்கே
கவிதைவெளி!

**73. காலை நேரத்துப் பேருந்து நிறுத்தங்களில்...**

தன் கொதிநேர நெருப்பில்
காலைநேரம் எரிந்து கொண்டிருக்கையில்
யாரோ
யாழிசைத்துக் கொண்டிருப்பதுபோல்
எத்தனை அதிசயங்களுடன்
எத்தனை பசுமையுடன்
பூத்து நிற்கிறது
பேருந்து நிறுத்தங்கள் தோறும்
இக் கல்லூரிப் பெண்களினது இளமை.
அலைகள் கொந்தளித்துக்
கொண்டிருக்கும்
ஆழ்கடல்மேல்
அணுவசைவும் அறியாத
முழுநிலவின் அமைதி.
சுழன்று சுழன்று
உழன்று கொண்டிருந்த அறிவு
எப்படியோ தன் விளிம்பிற்கப்பால்
கண்டுகொண்ட மவுனம்.
தகிக்கும் பாலைவனம்
தன் கடல் வயிற்றுள்
வைத்திருந்து வைத்திருந்து
ஒருநாள்
தன் மடியில் பெற்றெடுத்துக்கொண்ட
சிறுசோலை.

பண்டு திசைமாறித் திரிந்த
நாவாய் கண்டுவிட்ட கரை.
வழிச் சத்திரமோ, வேகத்தடையோ அல்ல:
பொருளற்ற வாழ்வின் பொருளற்ற
வேகத்தை
அணைத்துவிடும் நிறுத்தம்.
பெறுபேறு.
காதற் கரமொன்று
நம் முன் நீட்டும்
பூங்கொத்து.

**74. பேருந்து நிறுத்தமொன்றில்...**

பேருந்து நிறுத்தமொன்றில்
வெகுநேரமாய் நின்றுகொண்டிருந்தாள்
ஒரு பெண்.
அக்கம் பக்கத்திலுள்ளோர்
சந்தேகக் கண்களும்
காமக் கண்களும் தொந்தரவு செய்ய
கலக்கமடைந்தாள்
அந்தப் பெண்.
ஒரு மனிதன் அவளை நெருங்கி
எங்கே போக, எந்த பஸ்ஸைத்
தேடுகிறீர்கள் அம்மணீ
என்கிறான்.
இல்லை; சொன்னபடி வரவேண்டிய
ஒரு ஆளைத்தான் எதிர்பார்த்துக்
கொண்டிருக்கிறேன்
என்கிறாள் அவள்.
இவ்வளவு காலம் வராதவன்
இனிமேலா வரப்போகிறான்?
அவனுக்குப் பதிலாய்
என்னை ஏற்றுக் கொள்ளக்கூடாதா,
அடி பெண்ணே?
என்று எட்டிப்பிடித்து
சிரிக்கிறான் அவன்.
அவளும் பயமின்றித்தான்
அவனைத் திருமணம் செய்துகொண்டாள்

எனினும்
இன்று
காதலனாலும் கணவனாலும் ஒரு சேர
ஏமாற்றப்பட்டு விட்டவளே அவள்.
பேருந்து நிறுத்தத்திலிருந்து நீங்கி
நடக்கத் தொடங்கிவிட்டாள் அந்தப் பெண்.
அந்த அகாலவேளையில்
தன்னந் தனியாய்
அவள் நடந்து கொண்டிருந்தாள்;
நம்பிக்கைகள் கைவிடப்பட்டதனால்
முழுவிழிப்பொன்றுதான் பாதை எனக்
கண்டுகொண்டவளாய்
அவள் நடந்துகொண்டிருந்தாள்.

## 75. கரும் புள்ளி

மானுட முகத்திலொரு
கரும் புள்ளி வந்ததெப்படி?
உயிரின் ஆனந்தமாய்
மலர்ந்தாடிக் கொண்டிருக்கும்
குழந்தைக்குத் தெரியாது,
தன் பட்டுக் கன்னத்தில்
அம்மா இட்டிருக்கும்
கரும் பொட்டு எதற்கென்று.
அறிந்தும் அறியாதவளாய்
அவனோடு மகிழ்ந்து
கொண்டிருப்பதென்ன
அவனது இளம் தாயும்!

## 76. தர்ப்பூசணிக்காரன்

பெருங் கருணை ஒன்றின் கைப்பாவையோ
தூதுவனோ, தேவனோ?
எப்போதும் பூஜ்யத்திலிருக்கும் தராசு முள்ளுடனும்
கனியின் குருதிச் செம்மை நோக்கியே பாயக் கூடிய
குறுவாளுடனும், தாகமில்லாதவர்களே மிகுந்து மிகுந்து
காணாமற் போனால்- பூச்சாண்டி காட்டும்
தயார்ச் சக்கரங்களுடன் கூடிய தள்ளுவண்டியுடனும்
நடைபாதையில் அவன் நின்று கொண்டிருக்கிறான்,
கொளுத்தும் கோடையிலே தண்ணீர்க்
கனி குலுங்கும் குளிர் தருவாய்!
காதற் பெருந்தகையோ, காமனோ
பேதை என் நெஞ்சிற் பித்தேற்றும் கோலமோ,
காதலையும் காமத்தையும் அறிந்து
உலகைப் புரந்தருளும் பேரறிவோ
தாக உதடுகளிற்
கரைந்தே விடுபவனோ, மாயனோ?

## 77. நாறும் கழிவுநீர்த் தேக்கங்கள்

நல்லுறக்கம் நசிகிறது,
கொசுக்கொல்லிக்கும்
இராணுவத்திற்குமாய்க்
காசு செலவழித்துக்
காற்றை விஷமாக்கும்
கண்றாவிகளால்.

## 78. பொருண்வயிற் பிரிந்தவன்

பொருண்வயிற் பிரிந்த தலைவனோ
அவன்?
(உன் தனிமையை நான் அறிவேனன்றோ?)
கடல் தாண்டி
காலம் பல கடந்து
வழுவாத ஒழுக்கத்துடன்
பெரும் பொருளீட்டிக் கொண்ட
செல்வனோ?
துரிதமாகவும் எளிதாகவும்
உன் முன் கொண்டுவரும் முகத்தான்
பொருளின் முழுமதிப்பும் குன்றாமல்
கையடக்கமான ஒரு பெட்டிக்குள்
அடக்கிக் கொண்ட விவேகியோ?
திறந்த அப் பெட்டிக்குள்
காட்சியளித்தது,
பொருளின் பொருளையெல்லாம்
உணர்த்தும் ஒரு கவிதையா?
அல்லது வெறும் பணம்தானா?
சொல்லடி என் தோழி,
எப்பேர்ப்பட்டவன் உன் ஆண்மகன்?

## 79. செல்வந்தக் குணசீலன்

தன் துயரின் முதல் சொற்றொடரைத்தான்
அவன் உரைத்திருப்பான்
அதைத் தொடரவிடாமல்
அவர் அவனுக்கு உதவுகிறார்.
எத்துணை தெளிவு! எத்துணை விரைவு!
அவரது பாதுகாப்புப் படையில் ஒருவனாகி
அவரது வாயில் காப்போன்களில்
ஒருவராய்
அமர்ந்துள்ளோர்தாம் எத்தனை பேர்!
மனிதனின் தகுதியையும்
இயலாமையையும்
தனது பேரறிவால் தீர்மானித்தபடி
படியளக்கும் எத்தனை பெரியவர் அவர்!
எத்தனை குடும்பங்களைக் காக்கும்
பெருங் காமமும் பெருங் கருவியும்
அவர் பெற்றுள்ளார்!
இன்னும் இன்னும் என
அவர் துடித்துக் கொண்டிருக்கிறார்!
அவரது தேவை எல்லாம்
நீ அளக்கப் போகும்
உன்துயர்க் கதை அல்ல;
உனது வறுமையும் உழைப்பும்
உனது பொண்டாட்டி பிள்ளைகளின்
இளமையும் நோய்மையும் இன்னபிற
செல்வங்களும்தான்.

நகர வீதியின் மாசுக் கேடும்
அமைதியின்மையால் உயரும் வெப்பமும்
கருப்புக் கண்ணாடி இயற்றப்பட்ட
தனது குளிர் சாதனக் காரின்
உள் நுழையாது என அவர் நம்புகிறார்.
தங்கள் சோற்றிலும் நல்வாழ்விலும்
மண்ணள்ளிப் போட்ட விதியை நோக்கி
நீதிக்காய் வயிறெரிந்து அழும்
அபயக் குரல்களும் கதறல்களும்
தன் செவியை உறைக்காதபடியும்
நெரிக்கப்பட்டபடியும்
பிறர் பார்வையிலிருந்தும்
அவர் தம்மை மறைத்துக்கொள்ள
விரும்புகிறார்.

## 80. திருட்டுமுழி திருவாளத்தான் கதை

தனது என ஒரு தோட்டம் போட்டான்
என்ன விபரீதமோ இது என
வேலி சுற்றி வந்ததொரு
கூர்கொம்புக் குட்டி ஆடு
கண்டு நடுநடுங்கித்
தொலைந்தோம் என அஞ்சினான்
இரவோடு இரவாய்
வேலியில் ஆங்காங்கே
ஓட்டைகள் வைத்து
விட்டுக் கொண்டும் விரட்டிக் கொண்டும்
தந்திரமாய்க் காலம் ஓட்டினான்.
எல்லா மேய்ப்பர்களோடும்
கைகுலுக்கும்
பெரிய மனிதனாகிக் கொண்டான்.
தன் திருட்டு விழி மறைக்க வேண்டி
எல்லோர் கண்களுக்கும்
குருட்டுக் கண்ணாடிகள் வழங்கினான்.
மந்தை விட்டுப் பிரிந்துநின்ற
ஆட்டுக்குட்டிகளை
பசி கொண்ட ஓநாய் போல்
ஓடி ஓடித் துரத்திக் கொன்றான்.

**81. சிறுவர் உலகம்**

கல்லெறிபட்டும்
(ஒரு சின்ன கலசல்
பதற்றம், வலி அவ்வளவே)
கலங்காது
தேனையே சொரிகிறது
தேன்கூடு

**82. குறைப் பிறவியினரும் கோயில்களும்**

குறைப் பிறவியும் குறைப் பிறவியும்
கூடிப் பிறந்தது
குறைவிலாததோர் மாணிக்கமாய்
உதித்த்தெப்படி?
தாயிடமிருந்து அம் மாமணிச் செல்வத்தைத்
திருடிக்கொண்டு சென்று
அதை ஒரு குறைப் பிறவியாகவே
சிதைத்துக்கொண்டு வந்து நிற்பது யார்?
ஏன்?
அதிர்ந்து நிற்கவைத்துவிடும்
மானுடத் துயர் அறியாத நிலையில்
சுகம் தேடிச் சுகம் தேடிச்
சதா அலையும் காமுகர்களாகிவிடுவது தவிர
வேறு வழியில்லையா? சுகம் நிலைக்க
இயற்கை மீதும் எளியவர் மீதும்
குதிரையேறிக் கொடிகட்டிப் பறக்கும்
ஈனப் பிறவிகளாவது தவிர
வேறு வழியில்லையா?
தீயினிற் புழுவாய் வதங்கும்
இக் குறைப் பிறவிகளிடமும் தோன்றும்
இயற்கையுந்தல்கள்,
வாழ்வினிமைகள் காணுங்கால்

இளக்காரமின்றிக்
கசியும் மனமெங்கே?
பரிவும் ஞானமும் கொண்ட பாவனையில்
சில்லறைகளை எறிந்துகொண்டு
பரிதாபமாய் வீற்றிருக்கும்
இக் கோயில்களைக் கட்டியதும்
காப்பாற்றிக் கொண்டேயிருப்பதும்
எத்தகைய குறைப் பிறவியினர் கை?
துயரழிக்கும்
மானுடப் பொறுப்பு தீண்டா நிலையில்
இக் கோயில்கள் கொண்டாட்டங்கள்
திருவிழாக்கள்
மாளாச் சடங்குகள் கலைகள் மற்றும்
இலக்கியங்கள் அனைத்துமே
ஈனச் சுகம் தரும்
போகப் பொழுதுபோக்குகளன்றி
வேறென்ன?
இக் குறைப் பிறவியினர்
கூட்டம் கூட்டமாய் வந்திங்கே
குழுமி நிற்பதன் பொருள்தான் என்ன?

**83. தீராப் பெருந் துயர்களின்**

முளை எட்டிப் பார்க்கும்
விஷ வித்துக்களையா
கண்டு கொண்டாள் சாந்தா
வேகம் பொறி பரக்க
விளையாட்டுத் திடல் அதிர
ஒருவரை ஒருவர்
முந்தி வந்து கொண்டிருக்கும்
தத்தம் பிள்ளைகளை
அணி மனிதர்களை
ஊக்குவித்துக்கொண்டிருக்கும்
உற்சாக ஆரவாரத்திற்கு நடுவே?

## 84. இன்பச் சிரிப்புகளும் பொம்மைகளும்

துயரமே உருவாய்க் காணும்
அவர் கரை தெரியுமா உங்களுக்கு?
அவரது இதயக் கனியே போல்
ஒரே ஒரு பெண்குழந்தைதான் அவருக்கு.
அக் குழந்தையின் கள்ளமற்ற சிரிப்பில்
தூண்டல் பெற்றவராய்
ஓராயிரம் ஆனந்தக் கவிதைகள்
எழுதிக் கொண்டிருந்தார் அவர்.
வீட்டை நிறைத்துவிட்டார்
அத் தெய்வம் விளையாடுவதற்கென
விதவிதமான பொம்மைகளால்.
பெண் என
அவள் முழு வளர்ச்சியடைந்த பின்னும்
அனுபவங்களாலாகும்
மூளை வளர்ச்சியடையாது
மாறாத இன்பச் சிரிப்பும்
பொம்மைகளோடாடும் விளையாட்டுமாய்
அவள் நின்று விட்டதைக் கண்டு
உடைந்து போய்விட்டாரோ அவர்?
அவள் நெஞ்சையெல்லாம் ஆட்கொண்டு
அவளை வஞ்சித்துக் கொண்டிருக்கிற
அப் பொம்மைகளை
அவள் முகம் வாடும்படி
எப்படிப் பிடுங்கி எறிய முடியும் அவரால்?

திருமணம் மருத்துவமாகலாமென
மணம் முடித்து வைத்த பின்னும்
தன் குழந்தைகளையும் கணவனையும்
பொம்மைகளாகவே கண்டு
அவர்கள் உயரைக்
குடித்துவிட்டு வந்து நிற்பவளைக் கண்டு
அவளது மாறாத இன்சிரிப்பைக் கண்டு
கோபங் கொள்ளவா,
வெறுக்கவா,
அழவா,
அவரால் என்ன செய்ய இருக்கிறது?

## 85. பேரிளம் பெண்

தன் குழந்தைப் பருவத்தையெல்லாம்
தாய் தந்தை இல்லாதவள்போல் கடந்தாள்.
தன் விளையாட்டுப் பருவத்தையெல்லாம்
நண்பர்களில்லாதவள்போல் கடந்தாள்.
தன் கல்விப் பருவத்தையெல்லாம்
ஆசிரியர்களில்லாதவள் போல் கடந்தாள்.
தன் கன்னிப் பருவத்தையெல்லாம்
ஒரு தோழியில்லாதவள்போல் கடந்தாள்.
தனது நெடிய இளமைப் பருவத்தையும்
மணம் செய்து கொள்ளாதவள்போல்
ஆணின் அண்மை உணராதவள்போல்
தாய்மையடையாதவள்போல்
பெற்று பேணி வளர்த்து பறக்கவிடும்
இல்லற இன்பமே காணாதவள்போல்
கடந்தாள்.
சோர்வின் பெரும்பாரம் அழுந்த
முதுமையின் கரைசேர்ந்து...
இன்று அவளை விம்மச் செய்த
ஆறாத் துயரமதைக் கண்டுநின்றபோது
அவளது தோளில்
மார்கழிக் காலைபோலும்
தொட்டு நிற்பது யார்?
அவனை எப்படி அவள் மறந்திருந்தாள்
இவ்வளவு காலம்?
அவளது சிசுப்பருவத்தின் முதற்சிரிப்பை

இயற்றியவன்!
ஒவ்வொரு பருவத்திலும் அவள்
தனிமையிலெல்லாம்
உடன்வந்து கொண்டிருந்தவன்!
கண்களில் நதி சுரக்க-நல்லவேளையாக-
இன்று அவள் அவனைக்
கண்டுகொண்டாள்!
முதன்முதலாய் முகம்திரும்பி
அவன் புன்னகையைப் பார்த்துவிட்டாள்!
கணப் பொழுதில் அவளை ஒரு புது
மணப்பெண்ணாக்கிவிட்ட காதலன்!
எவர் கண்களுக்கும் புலப்படாத அரூபன்!
அவளது துயர வாழ்வின்
கண்ணீரைத் துடைத்து விட்டோன்!

**86. தாய் வீடு**

பாதுகாப்பையே தேடுபவர்கள்
பாதுகாப்பை அடைவதேயில்லை.
பொருளையே தேடுபவர்கள்
அன்பை அடைவதேயில்லை.
இன்பத்தையே விழைபவர்கள்
நிறைவை அடைவதேயில்லை.
ராணுவத்திற்கும் கோரிக்கைகளுக்கும்
பெருஞ்செலவுபுரியும் உலகிலன்றோ
நாம் வாழ்கிறோம்.
நல்லாசனமிட்டபடி
கையில் சீப்புடன்
தன் மகள் சகுந்தலாவின்
தலை ஆய்ந்துகொண்டிருக்கிறாள்
அம்மா.
சிக்கலில்லாத கூந்தலில்
வெகு அமைதியுடன் இழைகிறது சீப்பு.
தாங்கொணாத
ஒரு துயர்க் கதைக்குப் பின்தான்
திடமான ஒரு முடிவுடன்
பேராற்றங்கரையின்
தருநிழல்மீதமர்ந்திருக்கும்
தாய்வீடு திரும்பிவிட்டிருக்கிறாள்
சகுந்தலா.

## 87. மண்ணும் மனிதர்களும்

மண்ணைவிட்டுப் பிரிய
மனமில்லாதவர்களாய்
நாம் வாழ்ந்தெப்போ?
எளிய வீடுகளின் மத்தியிலே
வளர்ந்து வளர்ந்து
காவல் நாயும் இரும்புக் கதவும்
ஓங்கு மதிற் சுவர்களுமாய்
நாம் மாறியபோதோ-
வலியறியாதவர்களாயும் ஆனோம்?
இந்நிலையிலும்
நம் குழந்தைகளுக்கு நம் இல்லங்கள்
கதகதப்பான கருமுட்டைச் சுவர்களாய்க்
கசிந்து உற்றதெப்படி?
கூட்டை உடைத்துக்கொண்டு
கண்டம் விட்டுக் கண்டம் போய்ப்
படிக்கவும் வாழவும்
அவர்களை உந்தும்
ஆற்றலும் நிகழ்களமும்தான் யாவை?
இன்றின் பெருமழைகளிலும்
புயல்களிலும்
ஆழிப் பேரலைகளிலும்
நில நடுக்கங்களிலும்
ஒலிக்கும் இவ் வேதனையின்
பொருள்தான் என்ன?

**88. அந்த முகம்**

லட்சுமி லட்சுமி என்று
ஒரு சிறுமி இருந்தாள்.
அவள் தன் தம்பிப் பாப்பாவை
பார்த்துக்கொள்ள வேண்டிய நிலைமை
உரிய வயதில் பள்ளிக்கூடம்
காணாது போக்கிற்று.
காலங் கடந்து சென்று படித்த படிப்பும்
அம்மாவுடன் வேலை செய்ய வேண்டி
பாதியில் முடிந்தது. அப்புறம்
வெளியே போயும் வேலை செய்து
தன் முதுகொடித்துக் கொண்டாள்.
கல்யாணமாவதற்குத்தான்
என்ன பாடு பட்டு விட்டார்கள்
அவள் பெற்றோர்
ஆனால் கல்யாணமாகியும்
அவளுக்கு ஒரு வாழ்க்கை
அமையாது போனதுதான் என்ன
கொடுமை.
மாமியாரும் நாத்தனாரும்
கொழுந்தனாரும்
அவளைக் கூறுபோட
ஓய்வில்லா வேலைகளையும்
அவமானங்களையும்
கேட்கவோ பகிர்ந்துகொள்ளவோ
இரவிலும்

அவள் கணவனுக்கு
ஒழியவே இல்லை நேரம்
அவனும் அமைதியில்லாமல்
அவள்மீதே எரிந்துவிழுந்து
கொண்டிருந்தான்
எல்லாவற்றுக்கும்.
கல்யாணத்திற்கு முன்பிருந்த
ஒரு சின்னக் கனவுக்கும் கூட
வழியற்றுப் போன வாழ்க்கை எனினும்
ஒருநாள் திடீரெனக் காதல் தேவதை
அவள் மீது இரங்கி ஒரு பரிசளித்தது.
நோயில் படுத்த லட்சுமி
எழுந்திருக்கவேயில்லை.
அவள் படுக்கையைச் சுற்றிச் சுற்றி
நோயாளிப் பெண்ணை
ஏமாற்றிக் கட்டிக் கொடுத்துவிட்டதாய்-
(பரிசு ரகசியம் அவர்களுக்கென்ன
தெரியும்?)
அவள் பெற்றோரை வசைபாடிக்
கொண்டிருந்த
கணவன் குடும்பத்தையும் விட்டு
தப்பிச் சென்று விட்டாள் அவள்.
குழிக்குள் பிடிமண் அள்ளிப்போடக்
குனிந்த வேளை
நான் அதிர்ந்து போனேன்
பொழுது பூத்த தாமரைமலராய்

அப்படியொரு நிறைவும் அமைதியும்
ஒளிர்ந்த முகத்தை
முதன்முதலாய்
காணப்பெற்றவனாய்.
துயரங்களினின்றும்
மானுடம் விடுதலை பெறுவதற்கான
ஞானத்தை அடையத் தடையாயிருப்பது
துயரங்கள்தாம்
என உரைத்துக்கொண்டிருந்தது
அந்த முகம்.

## 89. என் அணிற்பிள்ளைகள்

என் மரநிழல் குளிர்விக்கும்
மதிற்சுவர்மேல்
பருக்கைகள் வைத்துவிட்டு நகர்ந்தேன்.
விரைந்து வந்து உண்ணும்
என் அணிற்பிள்ளைகளின்
பட்டுடலெங்கும் கனலும் பதற்றம்.
ஒரு பக்கம்
குதித்தாடித் திரிய வைக்கும்
அலகிலா இன்ப ஒளிப்பெருக்கு
மறுபக்கம்
குத்திக் குதறி
உயிர் குடித்திடவே
தலைக்குமேல் எப்போதும்
சுற்றிக் கொண்டிருக்கும் கருமை.
நடுவே
வேறு எப்படித்தான் இருக்க முடியும்
இந்த அணிற்பிள்ளைகளின் வாழ்வு?

## 90. தெய்வங்கள்

இலாபமே குறிக்கோளான
ஒரு தொழிற் கூடச் சுவரில்
அனைத்துப் பிரிவுக் கடவுள்களும்
காட்சியளிக்கின்றனர்
பேணப்படும் தெய்வமோ:
சாதுர்யம்.
போரும் அமைதியின்மையுமே
குறிக்கோளானாற் போன்ற
நம் சமூகச் சுவரில்
ஒவ்வொரு கடவுளையும் மறுக்கிற
ஒவ்வொரு கடவுள்.
பேணப்படும் தெய்வமோ:
அறிவீனம்

## 91. காதலியைக் கைப்பிடித்துவிட்ட

காதலியைக் கைப்பிடித்துவிட்ட
குதூகலத்துடன்
கடைவீதியை நோக்கி
நடந்து செல்வது என்பது
சாதாரண நிகழ்வா?
காதலியின்
பொன்னணி
பறித்தோடிச் செல்லும் திருடனை
ஆளரவம் குறைந்த நீள் சாலையில்
தலை தெறிக்கத் துரத்திச்
செல்வதென்பதும்
சாதாரண நிகழ்வா?
கண் தெரிய
ஓடிக்கொண்டேயிருந்த திருடன்
திடீரென அவனை-
அவன் அதுவரை
கண்டேயிராத உலகின் நடுவில்
கைவிட்டு மறைந்து விட்டதும்
சாதாரண நிகழ்வா?

## 92. காத்திருக்கும் இரவின்...

காத்திருக்கும் இரவின்
கட்டிலில் சாய்ந்தவுடன்தான்
எத்தனை நிம்மதி!
இது போலுமொரு நிம்மதியுடன்தான்
மரணமும் நிகழும்
எனும் ஓர் ஆறுதல் குறிப்பும்
அதில் உளதோ?

## 93. கையால் மலமள்ளும்...

கையால் மலமள்ளும்
தீண்டாத் துயர் நடுவே
முழு மனிதன்
புனிதன்
நீலகண்டனைச்
சும்மா சொல்லக்கூடாது
பெரிய மனிதன் பெரிய மனிதன்தான்
எல்லா மலங்களையும் கூட்டி வழித்து
ஒரே உருண்டையாய்த்
தன் வாய்க்குள் கொண்டுபோய் விட்டான்.
அய்யோ... குடல் புழுத்து அழுகிச்
சாவதற்கா எனப்
பாய்ந்து போய்
அவன் தொண்டையைப் பிடித்து நிறுத்தி
ஆடிப் போய் நிற்கும் பார்வதியை
பேதைமை பேதைமை என உள்சிரித்தபடி
அரவணைத்துக் கொள்கிறான் கண்டன்.
காதல் கொண்டு
அவள் இதழ்களைக் கவ்வும்
அவன் இதழ்களின் நோக்குதான் என்ன?
எத்தகைய திடீர் அதிர்ச்சி அது!
உடலெங்கும் மின்னூட்டம் பாய
தீராப் பசி கொண்டவள் போலவள்
அவன் அதரபானம் பறிகிறதென்ன?
இதுநாள் வரை இல்லாத தித்திப்போ?

காதல் புரளும் மார்பினன்
அவனது பேச்சிலும் மூச்சிலும்தான்
எத்தகைய நறுமணம்!

## 94. தன் குறையுணர்ந்த மனிதன்

வியத்தகு மட்டை வீரச் சிறுவனுக்கு
போலியோ கால்கள்.
அவனது குறி எப்போதுமே ஃபோர்
சிக்ஸ்தான்!
அல்ல, அல்ல, ஆறு மட்டுமேதான்.
அதீத சுரணைமிக்கோன்,
விழிப்புடையோன்.
வீழ்த்தவரும் எல்லாப் பந்து
வீச்சுக்களையும்
நேர் கொண்டு விளாசும் தீரன்.
என்றாலும்
எதிர்ப்படும் எவரையும்
அது காயப்படுத்தி விடக்கூடாது.
துடித்துக் கொண்டிருக்கும் எவர்
கைகளிலும்
அது அகப்பட்டு விடவும் கூடாது.
காணும் முகமனைத்தும் ஒரே மலராய்
மலரும்படி
பந்து வானுயர்ந்து
தன் எல்லை விட்டும் நீங்க வேண்டும்.
அதுவே அவன் குறிக்கோள்.
அது ஒன்றே.

**95. இராஜ்ய பாரம்**

மைதாஸ் நீ தொடுவதற்குமுன்
எல்லாம் பொன்னாகத்தானே
இருக்கின்றன,
வேறு ஒரு வரம் கேள்.
பேசத் தோன்றாமல் நின்றதனால்
அவளாகவே உதவினாள்;
நீ தொடுவதெதுவுமே
தன் இயல்பினின்றும் நலிந்து விடாதவாறு
வரம் தருகிறேன் என்றாள்.
அன்று முதல் மைதாஸ்
தன் ராஜ்யத்திலுள்ள
அனைத்துக் குழந்தைகளையும்;
குழந்தையுள்ளம் கொள்ளும்
நேரம் பார்த்து
அந்தந்த மனிதர்களையும்
போய் தவறாது தொட்டுவிடும்
வேலை மும்முரத்திலாழ்ந்தான்.
மக்களும் மந்திரி பிரதானிகளும்
மன்னரின் சித்தம் குறித்தும்
நாட்டைக் குறித்தும்
கவலை கொண்டு கூடினர்
இராஜ்ய பாரம் என்பது லேசா?

**96. சாத்தானியப் பேரரசும் கடவுளும்**

இவ் வுலகையே
ஓர் குடையின்கீழ் ஆளும்
அரசனாக்குகிறேன் உன்னை,
உன் பெயரை மட்டும்
என்னிடம் கொடுத்துவிடு என்றான்
சாத்தான்.
நிபந்தனைகளேதும் வேண்டாம்
அந்த அரச பதவியையும்
நீயே வைத்துக்கொள்
என் பெயரையும்
இதோ பெற்றுக் கொள் என்று
கையளித்துச் சென்றுவிட்டார்
கடவுள்.
சாத்தானியப் பேரரசெங்கும்
மாசுபடுத்தப் படாத அரும் பொருளாய்
துயரப் படுவோர் இளைப்பாறும்
மென் தோள்களாய்
இன்தீண்டல்களாய்
சாத்தானைத் தேவனாக்கும்
பெரும் பணியாய்
இடையறாகருணா இயக்கமாய்
பேரறிவாய்
மெய்மையாய்
எங்கும் நிலவியபடி
எங்கும் திரிந்து கொண்டிருந்தது

கடவுள் எனும் பெயரற்ற பேரன்பு.
பெருங்கொடை.
பேரறம்.

## 97. மந்திரவாதி

ஒருவர் பாக்கியில்லாமல்
ஊரிலுள்ள ஆண்கள் பெண்கள் குழந்தைகள்
அத்தனை பேரும்
அடித்துப் புரண்டுகொண்டு வந்து நின்றார்கள்.
அந்த மந்திரவாதியைக் காண.
அவர் தொட்டுக் கொடுத்தது எல்லாமே
சில வினாடிகளில் பொன்னாக மாறின.
ஒருபாடு மக்கள் விதவிதமான பொருட்களை எல்லாம்
கொண்டுவந்து கொண்டுவந்து பரிசோதித்து விட்டனர்
ஆனால் அப் பொன்மையானது
சில நாழிகை நேரம்தான் என்று
முன்னமேயே சொல்லிவிட்டிருந்தார் அந்த மந்திரவாதி.
அரசன்முதல் நாட்டின்
முக்கிய பிரதானிகள் வரை
அனைவரும் ஒரு சபையாய்க் கூடி
அவரை எதிர்கொண்டனர்.
இந்த வித்தையால் நமக்கு என்ன லாபம்?
ஆசைகளாலும் மோசடிகளாலும்
மக்களிடையே நல்லெண்ணமும் அமைதியும் அழிந்து

வெறுப்பும் துயருமல்லவா பரவிவிடும்?
அய்யன்மீர்!
நான் சொல்வதைச்
சோதித்துப் பார்க்க வேண்டுகிறேன்
நீங்கள் அனைவருமே
ஜடப் பொருள்களைத்தான்
கொண்டுவந்து கொண்டுவந்து
நீட்டினீர்கள்
அவை பொன்னாகின.
இப்போது ஒரு வேண்டுகோள்.
உங்கள் காராக்கிருகச் சிறையிலிருந்து
மிகக் கொடிய கைதி ஒருவனைத் தேர்ந்து
என்னிடம் கொண்டுவாருங்கள்
அன்பனே என்று நான் அவனை
ஆரத் தழுவித் தீண்டிய பின்
அவனைத் துணிந்து விடுதலை
செய்துவிட்டு
அவனைக் கவனித்து வாருங்கள்
அப்போது இந்த வித்தையின்
அருமையை உணர்வீர்கள்.
நல்லது. நீர் சொல்வது நன்கு புரிகிறது.
ஆனால் அவனும் சில நாழிகைகளில்
பழைய நிலைக்குத்தானே வந்து
விடுவான்?
ஆம், அய்யா. அப்போது
அவனை மீண்டும் ஒருமுறை

கட்டித் தழுவ வேண்டும்

...

ஆம், அய்யா,

மீண்டும் மீண்டும் மீண்டும்.

**98. பக்திப் பழங்கள்**

கையில் விசிறியுடன்
இடுப்பாடை மட்டுமே அணிந்த
ஒரு வேனிற்கால மிதவெப்பமண்டலவாசி
பழுத்த பூசணிபோல் துலங்கு
மேனியெங்கும் பூண்ட திருநீற்றுப்
பட்டைகளும்
கவலையின் ரேகை படியா
மந்தகாசப் புன்னகையுமாய்
வந்து கொண்டிருக்க,
’பக்திப் பழம்! பக்திப் பழம்!’
என வணங்கி வியந்தபடி
வழிவிட்டது கூட்டம்.
நம்மைப் போலவே இருக்கும்
இவனுக்கு மட்டும் வந்த வாழ்வைப் பாரேன்
என்று சற்று அசூயை கொண்டது,
கூடையிலுள்ள ஒரு குண்டுத் தக்காளி.

**99. நீ இங்கே வருவாய் என்று...**

முதலில்
நீயே இந்த பூமியின் அரசன்
என உணர்ந்தாயானால்
எனக்குத் தெரியும்
நீ இங்கே வருவாய் என்று.
உனது கையாலாகாத்தனத்தின்
உரம் தளர்ந்து விட்ட
தாழ்வு மனப்பான்மையில்தான்
கடவுளர்கள் இங்கே உதிக்கிறார்கள் என
நீ உணரும் போழ்தே
எனக்குத் தெரியும்
நீ இங்கே வருவாய் என்று.
அறமும் அமுதசுரபியும் அமைதியுமே
உனது இலட்சியம் என்பதையும்;
அஞ்ஞானமே
நம் அனைத்துத் துயருக்கும்
காரணமென்பதையும்; ஞானம் என்பது
எந்தப் பிரிவினைக் கூறுகளையும்
சம்மதிக்காது என்பதையும்
நீ உணரும் வேளை
எனக்குத் தெரியும்
நீ இங்கே வருவாய் என்று.
இப் பிரபஞ்சத்தின்
பேரிசையை உணர்ந்தவனாகி
தோன்றிவிட்ட நம் மனித சமுதாயத்திலும்

அதே போலொரு பேரொழுங்கு
சாத்தியமே என்றும் அதை இயற்றுதலே
மனிதப் படைப்பின் உச்சம் என்றும்
பேர் வேட்கைபற்றி எரிந்து
கொண்டிருப்பாயானால்
எனக்குத் தெரியும்
நீ இங்கே வருவாய் என்று.
அழகிலும் பிரம்மாண்டத்திலும்
உன்னை நீ மறப்பது கண்டு
தன்னைத் தான் மறப்பதிலேதான்
அழகும் நன்மையும் மெய்மையும்
துலங்குவதறிந்து,
பேதமறுக்கும் வாளே
துயரறுக்கும் வாளும்;
தீவினைகளின் ஊற்றுக்கண்ணே
துயரங்களின் ஊற்றுக்கண்ணும்;
கேளிக்கையை
பகட்டினைப் புரிந்து கொள்ளும் நெஞ்சமே
எளிமைக்கு இரங்கும் நெஞ்சமும்
ஏழைமுன் குற்றவேதனை கொள்ளும்
நெஞ்சமும்;
அச்சத்தினாலன்றி
போர்களின் துரதிருஷ்டக்
காட்டுமிராண்டித்தனத்திற்குக்
கலங்கும் இதயமே
மெய்யானஅமைதிக்கு ஏங்கும் இதயமும்;

என்பதையெல்லாம் நீ காணும் வேளை
எனக்குத் தெரியும்
நீ இங்கே வருவாய் என்று
பூஜை சடங்கு சம்பிரதாயங்கள்
பொழுதுபோக்கு கேளிக்கைகள் எல்லாம்
நம் உணர் வெழுச்சிகளைத்
துப்புரவாய் மழுங்கடித்துக் கொன்றுவிடும்
உதவாக்கரைப் பொய்மைகள் என்பதை
நீ கண்டுகொள்ளும் போதில்
எனக்குத் தெரியும்
நீ இங்கே வருவாய் என்று.

**100. ஆக்கங்கெட்ட கூகைகளும் கட்டப்பட்டுக் கொண்டேயிருக்கும் கோயில்களும்**

தன்னைப் பற்றிய மெய்மை
தன் உணர்வுக்குக் கிட்டிய போதெல்லாம் - மூடமே,
தாங்கொணாத வெவ்விதியே,
குமுறுகின்ற இதயத்தின்
இறுக்கும் கைகளுக்குள்
குலுங்கும் என் நெஞ்சமே,
அதை உன்னை வழிபடச் சொன்னது யார்?
காலத்துக்குத் தக இடம் நகர்ந்து கொள்ளும்
அக்ரஹார உயர்வுகளின் பின்கட்டில்
விடாப்பிடியாய் வளர்ந்து கொண்டிருக்கும்
இரத்த வெறி கொண்ட
அந்த மிருகத்தைக் கண்டதில்லையா?
அதிகார சுகம்
தன்னைக் காத்துக் கொள்வதற்காக
மறைமுகமாகவும் கொள்ளும்
உலகின் அதிபயங்கர கொடூரங்களினின்றும்
மனிதன் எழுந்திருக்கவே முடியாத
கதை இதுவோ?
அதிகாரங்களின்
வல்லுறவு வன்கொலைகளால் மாண்ட

நம் கன்னிப் பெண்களுக்கு
கோயில் கட்டியதால்
எல்லாம் சரியாயிற்றா?
கூகைக்குக் கோயில் கட்டியது,
கூகைத் தனத்தை நகர்த்தி விட்டது,
இல்லையா?
நம் கொந்தளிப்பானது
காளிக்குக் கோயில் கட்டிக்
கும்பிடக் கும்பிட
ஒடுங்கி அடங்கிக் கொண்டது,
இல்லையா?
இன்று என்ன கோயில்களையடா
நாம் கட்டிக் கொண்டிருக்கிறோம்
நம்மிடமுள்ள எவற்றையெல்லாம்
நம்மிடமிருந்து நகர்த்தி, நம்மைக்
கல்லறை சடலங்களாக்கிவிடுவதற்கு?

## 101. பிழை

ஒரு பெரும் பிழை
நிகழ்ந்து விட்டது போலிருந்தது.
மாபெரும் விழாக்
கூட்டத்தின் மையமாய்
கடவுள் சிலை.
கூடியிருந்த
மானுடரனைவரையும் நச்சி
அவர் தம் ஆற்றல் அழகு
அனைத்தையும் ஒட்ட உறிஞ்சி
அழியாப் பெருவல்லமையுடன்
ஒளிரும் சிலை.

## 102. ஓய்வு பெற்ற திரைப்பட நடிகர்

தன் வன்மை மிளிரும் தோற்றத்தால்
வல்லமைமிக்க பாத்திரங்களில்
நாற்பதாண்டுகள்!
இன்று அரசுக்கு உதவியாய்
எய்ட்ஸ் நோய் அறிவுரையை
சின்னத்திரையில் செய்கிற ஒரு
கவுரவமான முதுமை.
இவ்வளவுதானா?
வல்லமைமிக்க பாத்திரங்களின்
ஞாபகக் கொந்தளிப்போ,
மலைகளின்மீது கனலும்
இந்த அந்திவானச் செம்மை?
அவரது ஒப்பனைகளையும் ஆடைகளையும்
பற்றி எரியும் நெருப்போ?
யாவும் அவிந்தடங்கியபின்
சூழும் இவ்விருள்தான் என்ன?

## 103. கண்ணீரில் கரைந்துவிட்டன

கண்ணைக் கசக்கிக் கொண்டு நிற்கும்
அக்காவிற்கு
ஒரு கவிஞன் தான்பாலாயக்கு
என்றாள் தங்கச்சிக்காரி.
மழைக் காலக் கோலம்போல்
கண்ணீரில் கரைந்துவிட்டன,
இப் பூமியின் இயற்கை எழிலை மோகித்து
ஆளரவமற்ற வனாந்தரத்து ஏரியருகே
முழுநிலாவினின்று இறங்கும்
படிக்கட்டுகள் வழியாய்
ஒரு காதல் இணை வந்து
இளைப்பாறிச் செல்லும் கற்பனைகள்.
இந்த முழு நிலா நாளில்
நம் துயரங்கள் தெளிவாகிவிட்டன.
அத்துடன் வழிகளும்.
இனி நடை ஒன்றுதான் பாக்கி.
இப் புவியின் இயற்கை எழிலை மோகித்து
நாமிங்கே இளைப்பாறி இன்புற.

## 104. கோட்டைகளும் கொலைக் கருவிகளும்

துயர்நிலமாய்த் திரிந்த்தெப்படி,
உயிரின் ஆனந்தக் குழந்தைப் பருவம்
முடிவில்லாப் பெருவிரிவாக்கமாய்த்
திகழ விதிக்கப்பட்ட இப் பூமி?
தொடரின்ப நாட்டமோ, பயமோ,
தாம்-பிறர் எனும் பேதங்களூடே
பிறக்கும் பாரபட்ச விஷத் துளிர்களைக்
கண்டுகொள்ளாது விரையும் வேகமோ,
சுரணையின்மையோ, அன்பின்வழி
பெருகும் அறிவு இன்மையோ?
முதிர் இளமைப் பருவத்தில்
அணிந்துகொண்ட போர்ச் சீருடையோ,
தனக்குள்ளே பதுங்கியிருக்கும்
கோட்டைகளையும் கொலைக் கருவிகளையும்
காலை முதற் கடனாய்ச் சரிபார்த்துக் கூர்படுத்தியும்
அந்தி இறுதிக் கடனாய் அதன் குருதி கழுவித் துடைத்தும்
தயார் நிலை பேணிக்கொண்டிருக்கும்
நம் வாழ்வோ?

## 105. விலங்கினை விட மனிதன்

விலங்கினை விட மனிதன்
பல படிகள் மேலேறியதனாலோ
இனக் குழுக்கள் தம்மிடையே
இரத்தம் சிந்திக்கொண்டிருந்தன?
இன்றும்
போரும் துயருமாய் வதைபடும்
நிலைதானோ
விலங்கினின்றும் மனித விலங்கு
அடைந்துள்ள முன்னேற்றம்?
என்ன செய்து கொண்டிருக்கிறாள்,
கவிஞனே, நீ அறிந்த
உன் காதல் தெய்வம்?
”ஒரு வீட்டார்
தம் வீட்டுக்குள்ளே
மணம் செய்துகொள்ள வேண்டாமென்று
சொன்னது அவளல்லவா?”
இன்றும்
பசித்து அலறும் வாயில்
அம்மா,
சூப்பியைத் திணித்துவிட்டுச்
செல்வதாலோ
வாய் முன்நீண்ட
விலங்குகளாகவே தொடர்கிறோம், நாம்?

**106. அதுவரையுமில்லாத பரிவு**

அதுவரையுமில்லாத பரிவுப் பெருக்குடன்
பாதுகாத்துக் கொண்டு நடந்தது,
சாலையில் செல்லும் சின்னக் குழந்தையினை
அதைவிடச் சற்றே பெரிய குழந்தை.

## 107. ஒன்று

உணர்ச்சிப் பெருக்காய்
விரிந்துகிடக்கும் சேலைகள்தாம் எத்தனை!
நம் ஒற்றை உடன் நாடுவதோ
ஒன்றே ஒன்று.
எதை எடுத்துக்கொள்வதெனத் திகைத்து
ஒவ்வொன்றின்மீதும் படர்ந்து பிரிந்து
தேர்ந்தெடுத்த ஒன்றின் மேலே
தன் அத்தனைக் காதலையும்
கொட்டிக் குவித்தவாறே
முத்தமிட்டு அணைத்துத்
தன் மெய்மறந்தவாறே
ஒன்றி
உடுத்துத்
தன் அறையினின்றும் வெளிவரும்
அவள் உதடுகளில் முகிழ்த்திருந்த
புன்னகை சொல்லிற்று
காத்திருந்த அவனிடம்
அவள் காதல் கதைகளின் இரகசியம்.